بسم الله الرحمن الرحيم

أَخْلَاقُ الْمُسْلِم

فِي ضَوْءِ الْقُرْآنِ وَالسُّنَّةِ

முன்மாதிரி முஸ்லிமின்

நற்குணங்கள்

குர்ஆன், சுன்னா வெளிச்சத்தில்

مَوَاضِيعُ مُخْتَارَةٌ مِنْ شَخْصِيَّةِ الْمَرْءِ الْمُسْلِمِ
لِلشَّيْخِ الدَّكْتُورِمُحَمَّد عَلِي الْهَاشِمِيّ حَفِظَهُ اللهُ

அஷ்ஷைக் முஹம்மது அலீ அல் ஹாஷிமி
அவர்களின் ஷக்ஸியதுல் மர்அதில் முஸ்லிமா
- முன்மாதிரி முஸ்லிம் என்ற நூலிலிருந்து
தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகள்

தமிழில்
உமர் ஷரீஃப் அப்துஸ் ஸலாம்

دار الهدى
DARUL HUDA

About This Book

Name of the Book	: முன்மாதிரி முஸ்லிமின் நற்குணங்கள்
Name in English	: The virtues of Ideal Muslim
Name in Arabic	: أَخْلَاقُ الْمَرْأَةِ الْمُسْلِمَةِ
Author	: Muhamed Ali Al Hashimi
Translator	: **OMAR SHERIFF ABDUS SALAM**
Language	: Tamil
Edition	: 1st, Sep 2021.
Total Pages	: 112
Copies	: 2000
Ref. No.	: DH-TML 2071
Printed by	: Patel Graphics, Chennai - 6.

HADIYAH: RS. 70/-

Published by:

DARUL HUDA
QUALITY ISLAMIC BOOK PUBLISHERS
211 (102), 1st Floor, Linghi Street, Mannady, Chennai-1.
Phone :+91-44-25247866, | darulhuda.chennai@gmail.com
Mobile : +91-98401 74121 | www.darulhuda.net

பொருளடக்கம்

பதிப்புரை

எல்லாப் புகழும் அகிலங்களின் இறைவன் அல்லாஹ் ஒருவனுக்கே! இறையருளும் ஈடேற்றமும் நபி முஹம்மது ﷺ அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தார், தோழர்கள், அவர்களைப் பின்பற்றும் அனைவருக்கும் உண்டாகட்டும்.

இஸ்லாமிய மார்க்கத்தில் நற்பண்புகளுக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இறை நம்பிக்கையாளரின் இறை நம்பிக்கை நற்பண்புகளைக் கொண்டுதான் அல்லாஹ்விடம் உயர்வையும் மதிப்பையும் பெறுகிறது.

ஈமானும் நற்குணங்களும் பின்னிப் பிணைந்தவை ஆகும். நற்குணங்களில் ஏற்படுகின்ற குறை ஈமானில் பாதிப்பை உண்டாக்கும். ஒரு முஸ்லிமிடம் உயர்வான குணங்கள் இருக்கும்போது அவரைப் பார்க்கக்கூடிய மற்றவர்கள் இஸ்லாமின் மீது ஈர்ப்பு கொள்வார்கள்.

குறிப்பாக, இஸ்லாமிய மார்க்கத்தை பிற மக்களுக்கு எடுத்துச் சொல்கின்ற அழைப்பாளர் மிகவும் சிறந்த குணமுடையவராக இருக்க வேண்டும். அது அவருடைய அழைப்புப் பணியில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும். அந்த அடிப்படையில் ஆண்களுக்காக முன்மாதிரி முஸ்லிம் என்ற நூலும் பெண்களுக்காக முன்மாதிரி முஸ்லிம் பெண்மணி என்ற நூலும் தாருல் ஹுதாவிலிருந்து வெளியிடப்பட்டன. அவற்றை ஒவ்வொருவரும் படித்து பயன்பெற்று பின்பற்றி வாழ்ந்தால்

தனது வாழ்க்கையிலும் சமூகத்திலும் மிகப்பெரிய மாற்றத்தை நிகழ்த்த முடியும்.

உங்கள் கையில் இருக்கும் இந்த நூல் முன்மாதிரி முஸ்லிம் பெண்மணி நூலிலிருந்து குறிப்பாக பெண்களுக்காக தொகுக்கப்பட்ட ஒன்றாகும்.

வீடுகளில் தஃலீம் வாசிப்பதற்கும் பெண்கள் மத்ரஸாக்களில் படித்துக் கொடுப்பதற்கும் இந்நூல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அல்ஹம்து லில்லாஹ்.

முன்மாதிரி முஸ்லிம் பெண்மணி நூலிருந்து மிக முக்கியமான அவசியமான தலைப்புகளை மிகுந்த கவனத்துடன் தேர்வு செய்து இந்நூலில் தொகுத்துள்ளோம். ஒவ்வொரு பாடத்திலும் முதலாவதாக குர்ஆன் வசனங்களையும் இரண்டாவதாக ஹதீஸ்களையும் பதிவு செய்திருக்கின்றோம்.

ஸஹீஹுல் புகாரி மற்றும் ஸஹீஹ் முஸ்லிம் அல்லாத நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட ஹதீஸ்களுக்கு அறிஞர்கள் கூறிய, ஸஹீஹ் -சரியானது, ஹஸன் -அழகானது என்ற தரங்களையும் சேர்த்து அடிக்குறிப்பில் குறிப்பிட்டு இருக்கிறோம். பலவீனமான மற்றும் பலவீனமானதா இல்லையா என்று சர்ச்சைகள் உள்ள அறிவுப்புகளையும் தவிர்த்து விட்டோம்.

பெண்கள் மத்ரஸாக்களில் இந்நூலை கற்பிக்கும்போது இதன் மூல நூலாகிய முன்மாதிரி முஸ்லிம் பெண்மணியை தலைப்புக்கு ஏற்ப ஒரு முறை வாசித்துவிட்டு கற்பித்தால் மிகவும் அருமையாக இருக்கும். மாணவிகளுக்கு பாடத்தை புரிய வைப்பதற்கும் பல கருத்துகளை அவர்களுக்கு முன் வைப்பதற்கும் ஆசிரியருக்கு இலகுவாக இருக்கும்.

தாங்களும் இதை படித்துப் பயன்பெறுவதோடு எல்லா

மக்களுக்கும் இந்நூலை அறிமுகப்படுத்தி நன்மைகளை பெறுமாறு அன்போடு கோருகிறோம்.

அல்லாஹ்வே! எங்களிடமிருந்து இதை ஏற்றுக் கொள்வாயாக! மேலும், இஸ்லாமிய கல்வி நூல்களை அதிகம் வெளியிடுவதற்கு உதவுவாயாக! அல்லாஹ்வே! நீதான் நன்கு செவியுறுபவன், பிரார்த்தனைகளை அங்கீகரிப்பவன்.

உமர் ஷரீஃப் அப்துஸ் ஸலாம்

குர்ஆன், சுன்னா பணியாளன்

தாருல் ஹுதா, சென்னை 600001.

தாருல் ஹுதா
அறிமுகம்

எல்லாப் புகழும் அகிலங்களின் இறைவன் அல்லாஹ் ஒருவனுக்கே! இறையருளும் ஈடேற்றமும் நபி முஹம்மது ﷺ அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தார், தோழர்கள், அவர்களைப் பின்பற்றும் அனைவருக்கும் உண்டாகட்டும்.

இஸ்லாமியச் சகோதர சகோதரிகளே!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு

தாருல் ஹுதா அறிமுகத்தின் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம். இதில் தாருல் ஹுதாவின் நோக்கத்தையும் அதன் பணிகளையும் விவரிப்பதுடன் அதன் இன்றைய தேவையையும் தங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்.

அல்லாஹுதஆலா கூறுகிறான்: "இறை நம்பிக்கையுடைய ஆண்களும், இறை நம்பிக்கையுடைய பெண்களும் (தங்களுக்குள்) ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருக்கின்றனர். அவர்கள், (ஒருவர் மற்றவரை) நன்மை செய்யும்படித் தூண்டியும், பாவம் செய்யாது தடுத்தும், தொழுகையைக் கடைப்பிடித்து, (மார்க்க வரி) ஜகாத்து கொடுத்தும் வருவார்கள். அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பார்கள். இத்தகை யோருக்கு வெகு விரைவில் அல்லாஹ் அருள்புரிவான்."

(அல்குர்ஆன் 9:71)

மேலும், அல்லாஹு தஆலா கூறுகிறான்: (நம்பிக்கையாளர்களே!) உங்களில் ஒரு கூட்டத்தார் மனிதர்களைச் சிறந்ததின் பக்கம் அழைத்து, நன்மையைச் செய்யும்படி ஏவி, பாவமான காரியங்களில் இருந்து அவர்களை விலக்கிக் கொண்டும் இருக்கட்டும். இத்தகையவர்கள்தாம் வெற்றியாளர்கள்.

(அல்குர்ஆன் 3:104)

நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: உங்களில் யாராவது ஒரு தவறைக் கண்டால் அதை தனது கரத்தால் மாற்றட்டும். அது இயலாவிட்டால் தனது நாவால் மாற்றட்டும். அதுவும் இயலாவிட்டால் உள்ளத்தால் (வெறுத்து விலகி விடட்டும்). இது ஈமானின் குறைந்தபட்ச அளவாகும்.

(ஸஹீஹுல் புகாரி)

மேலும் நபி ﷺ கூறுகிறார்கள்: இறைநம்பிக்கையாளர்கள் தங்களிடையே நேசங்கொள்வதற்கும், கருணை காட்டுவதற்கும், அன்பு செலுத்துவதற்கும் உதாரணம் ஓர் உடலைப் போல! உடலில் ஏதேனும் ஓர் உறுப்பு பாதிக்கப்பட்டால் அனைத்து உறுப்புகளும் காய்ச்சல் மற்றும் தூக்கமின்மையால் முறையிடுகின்றன.

(ஸஹீஹுல் புகாரி)

இன்று நமது சமுதாயத்தில் சிறியோர் முதல் பெரியோர் வரை பெரும்பாலோர் சரியான மார்க்க ஞானத்திற்கும் முறையான வழிகாட்டலுக்கும் அதிகம் தேவையுள்ளவர்களாக இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, மேற்கூறப்பட்ட குர்ஆன் வசனங்கள் மற்றும் நபி மொழிகளுக்கிணங்க சமுதாய சீர்திருத்தப் பணியில் ஈடுபடுவது மார்க்கக் கடமை என்பதை உணர்ந்து, அல்குர்ஆன் மற்றும் நபி வழியின் அடிப்படையில் அந்த உயர்ந்த பணியை நிறைவேற்றி இறைப்பொருத்தத்தை அடைய வேண்டும் என்ற தூய எண்ணத்தில் தொடங்கப்பட்டதுதான் **தாருல் ஹுதா.**

பணிகளும் தொண்டுகளும்:

அழைத்தல்:

இதுவே இஸ்லாமின் அடிப்படையாகும். உலகில் இப்பணி

இறைத் தூதர்கள் வாயிலாக நிலை நிறுத்தப்பட்டது. இறுதித் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்குப் பின் அவர்களுடைய சமுதாயத்தினர் அனைவரின் மீதும் இப்பணி கடமையாக்கப்பட்டது. மேன்மைமிகு குர்ஆனும், சிறப்புமிகு நபி மொழியும் இதன் அவசியத்தை நமக்கு வலியுறுத்துகின்றன. இதற்கிணங்க இயன்ற அளவு அனைத்து வழிகளிலும் மனித சமுதாயத்திற்கு இஸ்லாமை அறிமுகப்படுத்துவதும், அதன் உயர்வுகளை விளங்கச் செய்வதும் தாருல் ஹுதாவின் தலையாயப் பணியாகும்.

கற்பித்தல்:

இஸ்லாமை அறிய விரும்பும் சிறுவர்கள், வாலிபர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள் என அனைவருக்கும் மேன்மைமிகு குர்ஆன், சிறப்புமிகு நபிமொழிகளை அவரவர் தகுதிக்கேற்ப கற்றுத் தருவது தாருல் ஹுதாவின் இரண்டாவது முக்கிய பணியாகும்.

நூல் வெளியிடுதல்:

மேன்மைமிகு குர்ஆன், சிறப்புமிகு நபிமொழி இவ்விரண்டையும் அடிப்படையாகக் கொண்டு சமுதாயப் பேரறிஞர்களால் அரபி மொழியில் எழுதப்பட்ட நூல்களை தமிழிலும் ஏனைய உலக மொழிகளிலும் மொழியாக்கம் செய்து, அந்நூற்களைச் சலுகை விலையில் மக்களுக்கு வழங்குவது தாருல் ஹுதாவின் மூன்றாவது சிறப்புப் பணியாகும்.

உதவுதல்:

அல்லாஹு தஆலாவே அனைவரின் தேவைகள், துன்பங்கள் அனைத்தையும் நிவர்த்தி செய்பவன். மிகப்பெரிய வள்ளலாகிய அல்லாஹ் தன் சார்பாக உலகில் ஏழை, எளியோர், நலிந்தோர் ஆகியோரின் துயர் துடைக்கும் வள்ளல் பெருமக்களுக்கு பெரும் வெகுமதிகளை ஈருலகிலும் வழங்குவதாக வாக்களித்துள்ளான். பிறர் துன்பங்களில் பங்கெடுப்பது, பிறர் தேவைகளை நிறைவேற்ற இயன்றவரை உதவுவது முஸ்லிம்களுடைய அடிப்படைப் பண்புகளாகும். இவ்வுன்னதப் பணிக்காக **பைத்துல்மால்** (பொது நிதி) ஏற்பாடு செய்து இரக்கச் சிந்தையும், மார்க்கப்பற்றும் கொண்ட வள்ளல் பெருமக்களிடமிருந்து கடமையான, உபரியான தர்மங்களைப்

பெற்று தேவையுடையோருக்கு உதவுதல் தாருல் ஹுதாவின் நான்காவது பணியாகும்.

மேற்கூறிய பணிகளைத் தவிர, இஸ்லாம் முழுமையாக ஒவ்வொருவரின் வாழ்விலும் வரவேண்டும் என்பதற்காகவும், மனிதச் சமுதாயங்களுக்குள் நல்லுறவும், அன்பும், கருணையும், சமூக புரிந்துணர்வும் ஏற்பட வேண்டும் என்பதற்காகவும் இயன்றவரை அல்லாஹ்வுக்காக தொண்டாற்ற வேண்டும் என்பது தாருல் ஹுதாவின் குறிக்கோளாகும்.

இப்பணிகள் அனைத்தும் தொய்வின்றி தொடர்ந்து சிறப்பாக, திறம்பட நடைபெறவும், அவற்றை அல்லாஹ் அங்கீகரிக்கவும் தாங்கள் துஆ செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்வதுடன் தங்களால் இயன்ற வரை இப்பணிகளில் பங்கு பெறவும் அழைக்கிறோம்.

பேராற்றலுடைய அல்லாஹ்விடமே உதவி தேடுகிறோம்! அவனையே முன்னோக்கி நிற்கிறோம்!!

உங்களால் முடிந்த உதவிகளை அல்லாஹ்வின் பொருத்தம் நாடி தந்துதவுங்கள்.

> ***நன்மையான காரியங்களில் எவற்றை நீங்கள் உங்களுக்காக (மரணம் வருவதற்கு) முன்னதாகவே செய்து கொள்கிறீர்களோ அவற்றை அல்லாஹ்விடத்தில் மிகச் சிறந்ததாகவும், மகத்தான கூலியாகவும் பெற்றுக் கொள்வீர்கள். (அல்குர்ஆன் 73:20)***

அல்லாஹ் தங்களுக்கு நற்கூலி வழங்குவானாக!

أَهَمِيَّةُ الْخُلُقِ الْحَسَنِ

நற்குணத்தின் அவசியம்

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿وَإِنَّكَ لَعَلَىٰ خُلُقٍ عَظِيمٍ﴾

நபியே! நிச்சயமாக நீர் மகத்தான நற்குணத்தின் மீது இருக்கிறீர். (அல்குர்ஆன் 68 : 4)

عَنْ أَنَسٍ ﷺ قَالَ كَانَ النَّبِيُّ ﷺ أَحْسَنَ النَّاسِ خُلُقًا رَوَاهُ الْبُخَارِيُّ

நபி ﷺ மக்களில் குணத்தால் மிக அழகானவர்களாக இருந்தார்கள்.[1]

عَنْ أَنَسٍ ﷺ قَالَ خَدَمْتُ النَّبِيَّ ﷺ عَشْرَ سِنِينَ فَمَا قَالَ لِي أُفٍّ وَلَا لِمَ صَنَعْتَ وَلَا أَلَّا صَنَعْتَ رَوَاهُ الْبُخَارِيُّ ومُسْلِمٌ

நான் நபி ﷺ அவர்களுக்குப் பத்து ஆண்டுகள் பணிவிடை செய்தேன். அவர்கள் என்னை நோக்கி, (ஒரு முறை கூட) 'ச்சீ' என்றோ, ஏன் செய்தாய்? என்றோ, நீ செய்திருக்கக்கூடாதா! என்றோ கூறியதில்லை.[2]

---

1. அறிவிப்பாளர்: அனஸ் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரீ.
2. அறிவிப்பாளர்: அனஸ் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம்.

عَنْ عَبْدِ اللهِ بْنِ عَمْرٍو ﵄ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ إِنَّ خِيَارَكُمْ أَحَاسِنُكُمْ أَخْلَاقًا رَوَاهُ الْبُخَارِيُّ ومُسْلِمٌ

நிச்சயமாக உங்களில் சிறந்தவர்கள் உங்களில் குணங்களால் அழகானவர்கள்தான் என்று ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்.[3]

عَنْ جَابِرٍ ﵁ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ إِنَّ مِنْ أَحَبِّكُمْ إِلَيَّ وَأَقْرَبِكُمْ مِنِّي مَجْلِسًا يَوْمَ الْقِيَامَةِ أَحَاسِنَكُمْ أَخْلَاقًا وَإِنَّ أَبْغَضَكُمْ إِلَيَّ وَأَبْعَدَكُمْ مِنِّي مَجْلِسًا يَوْمَ الْقِيَامَةِ اَلثَّرْثَارُونَ وَالْمُتَشَدِّقُونَ وَالْمُتَفَيْهِقُونَ رَوَاهُ التِّرْمِذِيُّ

நிச்சயமாக ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: நிச்சயமாக உங்களில் குணங்களால் மிக அழகானவர்கள்தான், உங்களில் எனக்கு மிக விருப்பமானவர்களிலும் மறுமையில் சபையால் எனக்கு மிகவும் நெருக்கமானவர்களிலும் இருப்பார்கள். மேலும், நிச்சயமாக உங்களில் எனக்கு மிகவும் வெறுப்பிற்குரியவர்கள், மறுமைநாளில் என்னிடமிருந்து சபையால் மிகவும் தூரமானவர்கள் யாரென்றால், சர்சாரூன் -அதிகமாகப் பேசுபவர்கள், முதஷத்திக்கூன்- அடுக்கு மொழியில் பேசுபவர்கள், முதஃபைஹிக்கூன் -பெருமையடிப்பவர்கள் ஆவார்கள்.[4]

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ ﵁ قال كَانَ النَّبِيُّ ﷺ رَحِيمًا وَكَانَ لاَ يَأْتِيهِ

3. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு ஆஸ் ﵄, நூல்: ஸஹீஹுல் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம்.

4. அறிவிப்பாளர்: ஜாபிர் ﵁, நூல்: ஜாமிவுத் திர்மிதீ.

أَحَدٌ إِلاَّ وَعَدَهُ وَأَنْجَزَ لَهُ إِنْ كَانَ عِنْدَهُ وَأُقِيمَتِ الصَّلاَةُ وَجَاءَهُ أَعْرَابِيٌّ فَأَخَذَ بِثَوْبِهِ فَقَالَ إِنَّمَا بَقِيَ مِنْ حَاجَتِي يَسِيرَةٌ وَأَخَافُ أَنْسَاهَا فَقَامَ مَعَهُ حَتَّى فَرَغَ مِنْ حَاجَتِهِ ثُمَّ أَقْبَلَ فَصَلَّى رَوَاهُ الْبُخَارِيُّ فِي الْأَدَبِ الْـمُفْرَدِ

நபி ﷺ அவர்கள் கருணையுள்ளவர்களாக இருந்தார்கள். தம்மிடம் யார் வந்தாலும் அவருக்கு வாக்களிப்பார்கள். தம்மிடம் அப்போது ஏதேனும் இருந்தால் உடனே அதனை நிறைவேற்றுவார்கள். (ஒரு முறை) தொழுகைக்கு இகாமத் சொல்லப்பட்டது. (அதன் பிறகு) ஒரு கிராமவாசி நபியவர்களிடம் வந்து நபியவர்களின் ஆடையை இறுகப் பிடித்துக்கொண்டு என்னுடைய தேவைகளில் மீதமிருப்பதெல்லாம் சிறிய தேவைதான். நான் அதை மறந்து விடுவேனோ என்று பயப்படுகிறேன் (ஆகவே, எனக்கு இப்போதே அதை நிறைவேற்றித் தாருங்கள்) என்றார். பிறகு, நபி ﷺ அவர்கள் அவருடன் எழுந்து சென்று, அவருடைய தேவையை நிறைவேற்றினார்கள். பிறகு, வந்து தொழவைத்தார்கள்.[5]

عَنْ أَبِي الدَّرْدَاءِ رضي الله عنه أَنَّ النَّبِيَّ ﷺ قَالَ مَا شَيْءٌ أَثْقَلُ فِي مِيزَانِ الْمُؤْمِنِ يَوْمَ الْقِيَامَةِ مِنْ خُلُقٍ حَسَنٍ وَإِنَّ اللهَ لَيُبْغِضُ الْفَاحِشَ الْبَذِيءَ رَوَاهُ التِّرْمِذِيُّ

நிச்சயமாக நபி ﷺ கூறினார்கள்: மறுமைநாளில் இறை நம்பிக்கையாளரின் தராசில் அழகிய பண்புகளைவிட மிகக்

5. அறிவிப்பாளர்: அனஸ் رضي الله عنه, நூல்: அல்அதபுல் முஃப்ரது.

கனமானவை வேறெதுவுமில்லை. இன்னும், நிச்சயமாக அல்லாஹ், இழி நடத்தை உள்ளவனையும் அருவருப்பாக (ஆபாசமாகப்) பேசுபவனையும் கோபிக்கிறான்.[6]

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ أَكْمَلُ الْمُؤْمِنِينَ إِيمَانًا أَحْسَنُهُمْ خُلُقًا رَوَاهُ التِّرْمِذِيُّ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: நம்பிக்கையாளர்களில் ஈமானால் முழுமையானவர் அவர்களில் குணத்தால் மிக அழகானவர்தான்![7]

عَنْ أُسَامَةَ بْنِ شُرَيْكٍ ﵁ قَالَ كُنَّا جُلُوسًا عِنْدَ النَّبِيِّ ﷺ كَأَنَّ عَلَىٰ رُءُوسِنَا الطَّيْرَ مَا يَتَكَلَّمُ مِنَّا مُتَكَلِّمٌ إِذْ جَاءَهُ نَاسٌ فَقَالُوا يَا رَسُولَ اللهِ فَمَنْ أَحَبُّ عِبَادِ اللهِ إِلَى اللهِ؟ قَالَ أَحْسَنُهُمْ خُلُقًا رَوَاهُ الطَّبَرَانِيُّ فِي الْكَبِيرِ

நாங்கள் நபி ﷺ அவர்களிடம் எங்களின் தலைகள் மீது பறவைகள் இருப்பது போன்று (அமைதியாக) அமர்ந்தவர்களாக இருந்தோம். எங்களில் பேசுபவர் யாரும் பேசவில்லை. அந்நேரத்தில் நபி ﷺ அவர்களிடம் சில மக்கள் வந்தனர். அல்லாஹ்வுடைய தூதரே! அல்லாஹ்வின் அடியார்களில் அல்லாஹ்விற்கு மிக விருப்பமானவர் யார் என்று கேட்டார்கள். அதற்கு நபி ﷺ அவர்கள், அவர்களில் குணத்தால் மிக அழகானவர் என்று கூறினார்கள்.[8]

6. அறிவிப்பாளர்: அபுத் தர்தா ﵁, நூல்: ஜாமிவுத் திர்மிதீ.
7. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: ஜாமிவுத் திர்மிதீ.
8. அறிவிப்பாளர்: உஸாமா இப்னு ஷுரைக் ﵁, நூல்: முஃஜமுத் தப்ரானீ.

عَنْ أَبِي الدَّرْدَاءِ ﵁ قَالَ سَمِعْتُ النَّبِيَّ ﷺ يَقُولُ مَا مِنْ شَيْءٍ يُوضَعُ فِي الْمِيزَانِ أَثْقَلُ مِنْ حُسْنِ الْخُلُقِ وَإِنَّ صَاحِبَ حُسْنِ الْخُلُقِ لَيَبْلُغُ بِهِ دَرَجَةَ صَاحِبِ الصَّوْمِ وَالصَّلَاةِ رَوَاهُ التِّرْمِذِيُّ

நபி ﷺ கூறுவதை நான் செவியுற்றேன்: மறுமையில் தராசில் வைக்கப்படும் அமல்களில் நற்குணத்தைவிட மிகக் கனமானது வேறெதுவுமில்லை. நற்குணம் உடையவர் அதனால் (-நற்குணத்தால்) அதிகம் நோன்பு இன்னும் தொழுகையை உடையவரின் தகுதியை அடைகிறார்.[9]

عَنْ عَائِشَةَ ﵂ أَنَّ رَسُولَ اللهِ ﷺ كَانَ يَقُولُ اللّٰهُمَّ أَحْسَنْتَ خَلْقِي فَأَحْسِنْ خُلُقِي رَوَاهُ أَحْمَدُ

நிச்சயமாக ரஸூலுல்லாஹ் ﷺ கூறுவார்கள்: அல்லாஹ்வே! நீ என் தோற்றத்தை அழகுபடுத்தினாய். ஆகவே, நீ என் குணத்தை(யும்) அழகுபடுத்துவாயாக.[10]

----

9. அறிவிப்பாளர்: அபுத் தர்தா ﵁, நூல்: ஜாமிவுத் திர்மிதீ, - ஸஹீஹ்
10. அறிவிப்பாளர்: ஆயிஷா ﵂, நூல்: முஸ்னது அஹ்மது, - ஸஹீஹ்

يَبُرُّ الْوَالِدَيْنِ

பெற்றோருக்கு நன்மை செய்வார்

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿وَاعْبُدُوا اللّٰهَ وَلَا تُشْرِكُوا بِهِ شَيْئًا وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا﴾

அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். அவனுக்கு எதையும் இணையாக்காதீர்கள். தாய், தந்தையருக்கு நன்மை செய்யுங்கள். (அல்குர்ஆன் 4 : 36)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿وَقَضٰى رَبُّكَ أَلَّا تَعْبُدُوآ إِلَّآ إِيَّاهُ وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا إِمَّا يَبْلُغَنَّ عِنْدَكَ الْكِبَرَ أَحَدُهُمَا أَوْ كِلَاهُمَا فَلَا تَقُلْ لَّهُمَآ أُفٍّ وَلَا تَنْهَرْهُمَا وَقُلْ لَّهُمَا قَوْلًا كَرِيمًا﴾

நபியே! உமது இறைவன் தன்னைத் தவிர மற்றெவரையும் வணங்கக் கூடாது என்று கட்டளை இட்டிருப்பதுடன் தாய் தந்தையருக்கு நன்மை செய்யும்படியாகவும் கட்டளையிட்டிருக்கிறான். உம்மிடம் இருக்கும் அவர்களில் ஒருவரோ அல்லது இருவருமோ முதுமையை அடைந்துவிட்ட போதிலும் அவர்களை நிந்தனையாக ‘சீ’ என்றும் சொல்ல

வேண்டாம். இன்னும் அவர்களை வெருட்டவும் வேண்டாம். அவர்களிடம் எதைக் கூறியபோதிலும் மிக்க மரியாதையாகவும் அன்பாகவுமே பேசுவீராக! (அல்குர்ஆன் 17 : 23)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿وَاخْفِضْ لَهُمَا جَنَاحَ الذُّلِّ مِنَ الرَّحْمَةِ وَقُلْ رَّبِّ ارْحَمْهُمَا كَمَا رَبَّيَانِي صَغِيرًا﴾

அவர்களுக்கு மிக்க அன்புடன் பணிந்து நடப்பீராக! மேலும் என் இறைவனே! நான் குழந்தையாக இருந்தபோது மிக்க அன்பாக என்னை அவர்கள் வளர்த்துப் பாதுகாத்தவாறே நீயும் அவ்விருவர் மீது அன்பும் அருளும் புரிவாயாக! என்றும் பிரார்த்திப்பீராக. (அல்குர்ஆன் 17 : 24)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿وَوَصَّيْنَا الْإِنْسَانَ بِوَالِدَيْهِ حُسْنًا﴾

தாய், தந்தைக்கு நன்றி செய்யும்படியாக நாம் மனிதனுக்கு நல்லுபதேசம் செய்திருக்கிறோம். (அல்குர்ஆன் 29 : 8)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿وَوَصَّيْنَا الْإِنْسَانَ بِوَالِدَيْهِ إِحْسَانًا حَمَلَتْهُ أُمُّهُ كُرْهًا وَوَضَعَتْهُ كُرْهًا وَحَمْلُهُ وَفِصَالُهُ ثَلَاثُونَ شَهْرًا حَتَّىٰ إِذَا بَلَغَ أَشُدَّهُ وَبَلَغَ أَرْبَعِينَ سَنَةً قَالَ رَبِّ أَوْزِعْنِي أَنْ أَشْكُرَ نِعْمَتَكَ الَّتِي أَنْعَمْتَ

عَلَيَّ وَعَلَىٰ وَالِدَيَّ وَأَنْ أَعْمَلَ صَالِحًا تَرْضَاهُ وَأَصْلِحْ لِي فِي ذُرِّيَّتِي إِنِّي تُبْتُ إِلَيْكَ وَإِنِّي مِنَ الْمُسْلِمِينَ﴾

மனிதன் தன் தாய் தந்தைக்கு நன்றி செலுத்தும்படி நாம் அவனுக்கு நல்லுபதேசம் செய்தோம். அவனுடைய தாய் சிரமத்துடனேயே அவனை கர்ப்பத்தில் சுமந்திருந்து சிரமத்துடனேயே பிரசவிக்கிறாள். அவள் கர்ப்பமானதிலிருந்து இவன் பால்குடி மறக்கும் வரை முப்பது மாதங்கள் மிக்க சிரமத்துடன் செல்கின்றன. இவன் வாலிபமாகி நாற்பது வயதை அடைந்தால் என் இறைவனே! நீ என் மீதும் என் தாய் தந்தையர் மீதும் புரிந்த அருளுக்காக உனக்கு நான் நன்றி செலுத்துகிறேன். உன் திருப்தியை அடையக்கூடிய நற்செயல்களை செய்யும்படியான நல்லறிவை நீ எனக்கு தந்தருள்வாயாக! எனக்கு உதவியாக இருக்கும்படி என் குடும்பத்தை சீர்திருத்தி வை! நிச்சயமாக நான் உன்னையே நோக்கினேன். உனக்கு முற்றிலும் வழிப்பட்டவர்களில் நானும் ஒருவன் என்று கூறுவான். (அல்குர்ஆன் 46 : 15)

﴿وَوَصَّيْنَا الْإِنْسَانَ بِوَالِدَيْهِ حَمَلَتْهُ أُمُّهُ وَهْنًا عَلَىٰ وَهْنٍ وَفِصَالُهُ فِي عَامَيْنِ أَنِ اشْكُرْ لِي وَلِوَالِدَيْكَ إِلَيَّ الْمَصِيرُ ○ وَإِنْ جَاهَدَاكَ عَلَىٰ أَنْ تُشْرِكَ بِي مَا لَيْسَ لَكَ بِهِ عِلْمٌ فَلَا تُطِعْهُمَا وَصَاحِبْهُمَا فِي الدُّنْيَا مَعْرُوفًا وَاتَّبِعْ سَبِيلَ مَنْ أَنَابَ إِلَيَّ ثُمَّ إِلَيَّ مَرْجِعُكُمْ فَأُنَبِّئُكُمْ بِمَا كُنْتُمْ تَعْمَلُونَ ○﴾

மனிதனுக்கு அவனது பெற்றோருடன் நல்லுறவு பேணும்படி

நாம் உபதேசித்தோம். அவனது தாய் அவனை பலவீனத்துக்கு மேல் பலவீனத்துடன் (-கஷ்டத்திற்கு மேல் கஷ்டத்துடன்) சுமந்தாள். அவனுக்கு பால்குடி மறக்க வைப்பது இரண்டு ஆண்டுகளில் ஆகும். அதாவது நீ எனக்கும் உன் பெற்றோருக்கும் நன்றி செலுத்து! என் பக்கம்தான் மீளுதல் இருக்கிறது. உனக்கு அறிவில்லாத ஒன்றை எனக்கு நீ இணையாக்குவதற்கு அவர்கள் உன்னை சிரமப்படுத்தினால், (-அதற்காக உன் மீது அவர்கள் முழு முயற்சி செய்தால்) அவ்விருவருக்கும் நீ கீழ்ப்படியாதே! (ஆனால்) உலக(விஷய) த்தில் அவ்விருவருடன் நல்லமுறையில் பழகுவாயாக! என் பக்கம் திரும்பியவர்களின் பாதையை நீ பின்பற்று! பிறகு, என் பக்கம்தான் உங்கள் (அனைவருடைய) மீளுமிடம் இருக்கின்றது. நீங்கள் செய்துகொண்டிருந்ததை நான் உங்களுக்கு அறிவிப்பேன். (அல்குர்ஆன் 31 : 14,15)

عَنْ عَبْدِ اللهِ بْنُ مَسْعُوْدٍ ﵁ قَالَ سَأَلْتُ النَّبِيَّ ﷺ أَيُّ الْعَمَلِ أَحَبُّ إِلَى اللهِ قَالَ الصَّلَاةُ عَلَىٰ وَقْتِهَا قَالَ ثُمَّ أَيٌّ قَالَ ثُمَّ بِرُّ الْوَالِدَيْنِ قَالَ ثُمَّ أَيٌّ قَالَ الْجِهَادُ فِي سَبِيلِ اللهِ رَوَاهُ الْبُخَارِيُّ ومُسْلِمٌ

நான் நபி ﷺ அவர்களிடம் எந்த அமல் அல்லாஹ்விற்கு மிக விருப்பமானது? என்று கேட்டேன். நபி ﷺ கூறினார்கள்: தொழுகையை அதற்குரிய நேரத்தில் நிறைவேற்றுவது. பிறகு, என்ன? என்று கேட்டேன். பிறகு, பெற்றோருக்கு நன்மை செய்வது என்றார்கள். பிறகு என்ன? என்று கேட்டேன். பிறகு, அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாது செய்வது என்றார்கள்.[11]

11. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்வூது ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம்

عَنْ عَبْدَ اللهِ بْنَ عَمْرِو بْنِ الْعَاصِ ﵄ قَالَ أَقْبَلَ رَجُلٌ إِلَى النَّبِيِّ ﷺ فَقَالَ أُبَايِعُكَ عَلَى الْهِجْرَةِ وَالْجِهَادِ أَبْتَغِي الْأَجْرَ مِنَ اللهِ قَالَ فَهَلْ مِنْ وَالِدَيْكَ أَحَدٌ حَيٌّ قَالَ نَعَمْ بَلْ كِلَاهُمَا قَالَ فَتَبْتَغِي الْأَجْرَ مِنَ اللهِ قَالَ نَعَمْ قَالَ فَارْجِعْ إِلَى وَالِدَيْكَ فَأَحْسِنْ صُحْبَتَهُمَا رَوَاهُ مُسْلِمٌ

ஒருவர், நபி ﷺ அவர்களிடம் வந்தார். அவர் கூறினார்: நான் அல்லாஹ்விடம் நன்மையை வேண்டியவனாக ஹிஜ்ரத்திற்கும் ஜிஹாதிற்கும் உங்களிடம் சத்திய வாக்குப்பிரமாணம் செய்கிறேன். அதற்கு நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: உன் பெற்றோரில் ஒருவராவது உயிருடன் இருக்கின்றாரா? அவர், ஆம்! மாறாக, அவர்கள் இருவருமே இருக்கிறார்கள் என (பதில்) கூறினார். நீ அல்லாஹ்விடம் நற்கூலியை வேண்டுகிறாயா? என்று நபி ﷺ கேட்டார்கள். அவர், ஆம் என்றார். பிறகு, நபி ﷺ கூறினார்கள்: உன் பெற்றோரிடம் நீ திரும்பச் செல்! அவர்களுடன் அழகிய முறையில் சேர்ந்து வாழ் என்றார்கள்.[12]

عَنْ عَبْدَ اللهِ بْنَ عَمْرٍو ﵄ قال جَاءَ رَجُلٌ إِلَى النَّبِيِّ ﷺ فَاسْتَأْذَنَهُ فِي الْجِهَادِ فَقَالَ أَحَيٌّ وَالِدَاكَ قَالَ نَعَمْ قَالَ فَفِيهِمَا فَجَاهِدْ رَوَاهُ الْبُخَارِيُّ

---

12. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு ஆஸ் ﵄, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.

ஒருவர் நபி ﷺ அவர்களிடம் வந்தார். இன்னும், ஜிஹாதில் கலந்துகொள்ள நபியவர்களிடம் அனுமதி கேட்டார். உமது பெற்றோர் உயிருடன் இருக்கின்றார்களா என நபி ﷺ கேட்டார்கள். அவர், ஆம் என்றார். அவ்விருவரில் நீ ஜிஹாது செய். (-ஜிஹாதுடைய நன்மையை அவர்களுக்குப் பணிவிடை செய்வதில் தேடு!) என்று நபி ﷺ கூறினார்கள்.[13]

عَنِ ابْنِ عَبَّاسٍ رضي الله عنهما أَنَّ امْرَأَةً مِنْ جُهَيْنَةَ جَاءَتْ إِلَى النَّبِيِّ ﷺ فَقَالَتْ إِنَّ أُمِّي نَذَرَتْ أَنْ تَحُجَّ فَلَمْ تَحُجَّ حَتَّى مَاتَتْ أَفَأَحُجُّ عَنْهَا قَالَ نَعَمْ حُجِّي عَنْهَا أَرَأَيْتِ لَوْ كَانَ عَلَى أُمِّكِ دَيْنٌ أَكُنْتِ قَاضِيَةً اُقْضُوا اللهَ فَاللهُ أَحَقُّ بِالْوَفَاءِ رَوَاهُ الْبُخَارِيُّ

நிச்சயமாக ஜுஹைனா குலத்தைச் சேர்ந்த ஒரு பெண் நபி ﷺ அவர்களிடம் வந்து, என் தாய் ஹஜ்ஜு தான் செய்ய வேண்டும் என்று நேர்ச்சை செய்திருந்தார். ஆனால், அவர் ஹஜ்ஜு செய்யவில்லை. அதற்குள் இறந்துவிட்டார். ஆகவே, அவர் சார்பாக நான் ஹஜ் செய்யட்டுமா? என்று கேட்டார். நபி ﷺ கூறினார்கள்: ஆம்! அவள் சார்பாக நீ ஹஜ் செய்! நீ அறிவிப்பாயாக! உம் தாயின் மீது கடன் இருந்தால் (அதை) நீ நிறைவேற்றுவாய் அல்லவா? அல்லாஹ்விற்கு (அவனது கடனை -அவனது கடமைகளை) நிறைவேற்றுங்கள். அல்லாஹ் (-அவனது கடமைகள்) நிறைவேற்றப்படுவதற்கு மிகத் தகுதியானவன்.[14]

عَنِ ابْنِ عَبَّاسٍ رضي الله عنهما أَنَّ امْرَأَةً أَتَتْ رَسُولَ اللهِ ﷺ فَقَالَتْ إِنَّ

13. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் رضي الله عنهما, நூல்: ஸஹீஹுல் புகாரீ.
14. அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் رضي الله عنهما, நூல்: ஸஹீஹுல் புகாரீ.

أُمِّي مَاتَتْ وَعَلَيْهَا صَوْمُ شَهْرٍ فَقَالَ أَرَأَيْتِ لَوْ كَانَ عَلَيْهَا دَيْنٌ أَكُنْتِ تَقْضِينَهُ قَالَتْ نَعَمْ قَالَ فَدَيْنُ اللهِ أَحَقُّ بِالْقَضَاءِ رَوَاهُ مُسْلِمٌ

நிச்சயமாக ஒரு பெண் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களிடம் வந்தார். மேலும் அவள் கூறினார்: நிச்சயமாக என் தாயின் மீது ஒரு மாத நோன்பு (மீதமாக) உள்ள நிலையில் அவள் மரணமடைந்து விட்டாள் (அவள் சார்பாக நான் நோன்பு நோற்கட்டுமா?). அதற்கு ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: நீ சொல்! உமது தாயின் மீது கடன் இருந்தால் அதை நீ நிறைவேற்றுவாய் அல்லவா? அவர், ஆம் என்று கூறினார். அதற்கு நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் கடன் நிறைவேற்றப்படுவதற்கு மிகத் தகுதியானது.[15]

----

15. அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் ﷺ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.

يَبُرُّ الْوَالِدَيْنِ وَإِنْ كَانَا غَيْرَ مُسْلِمَيْنِ

பெற்றோருக்கு நன்மை செய்வார், அவர்கள் முஸ்லிமல்லாதவர்களாக இருந்தாலும்.

عَنْ أَسْمَاءَ بِنْتِ أَبِي بَكْرٍ ﵄ قَالَتْ قَدِمَتْ عَلَيَّ أُمِّي وَهِيَ مُشْرِكَةٌ فِي عَهْدِ رَسُولِ اللهِ ﷺ فَاسْتَفْتَيْتُ رَسُولَ اللهِ ﷺ قُلْتُ وَهِيَ رَاغِبَةٌ أَفَأَصِلُ أُمِّي قَالَ نَعَمْ صِلِي أُمَّكِ رَوَاهُ الْبُخَارِيُّ ومُسْلِمٌ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுடைய காலத்தில் எனது தாய் அவள் இணைவைத்தவராக இருக்கின்ற நிலையிலேயே என்னிடம் வந்தார். நான் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களிடம் வந்து சட்டம் கேட்டேன்: அவள் (என்னிடம் உள்ள செல்வத்தை) ஆசைபட்டவராக (என்னிடம் வந்துள்ளாள்). நான் என்னுடைய தாய்க்குக் கொடுத்து உதவலாமா? என்று கூறினேன். ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள்: ஆம், உமது தாய்க்கு நீ கொடுத்து உதவு! எனக் கூறினார்கள்.[16]

----

16. அறிவிப்பாளர்: அஸ்மா பின்த் அபூ பக்ர் ﵄, நூல்: ஸஹீஹுல் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம்.

يَخَافُ مِنَ الْعُقُوْقِ

பெற்றோருக்கு மாறுசெய்வதை பயப்படுவார்

عَنْ أَبِي بَكْرَةَ ﷺ قَالَ قَالَ النَّبِيُّ ﷺ أَلَا أُنَبِّئُكُمْ بِأَكْبَرِ الْكَبَائِرِ ثَلَاثًا قَالُوا بَلَى يَا رَسُولَ اللهِ قَالَ الْإِشْرَاكُ بِاللهِ وَعُقُوقُ الْوَالِدَيْنِ رَوَاهُ الْبُخَارِيُّ ومُسْلِمٌ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: பெரும் பாவங்களில் மிகப் பெரியதை நான் உங்களுக்கு அறிவித்துத் தரட்டுமா? என்று மூன்று முறை கூறினார்கள். ஆம், அல்லாஹ்வின் தூதரே! (அறிவித்துத் தாருங்கள்) என்று (தோழர்கள்) கூறினார்கள். ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: அல்லாஹ்விற்கு இணை வைப்பது; பெற்றோருக்கு மாறு செய்வது.[17]

----

17. அறிவிப்பாளர்: அபூ பக்ரா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம்

يَبَرُّ الْأُمَّ ثُمَّ الْأَبَ

முதலில் தாய்க்கும் பிறகு தந்தைக்கும் நன்மை செய்வார்

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ قَالَ جَاءَ رَجُلٌ إِلَى رَسُولِ اللَّهِ ﷺ فَقَالَ يَا رَسُولَ اللَّهِ مَنْ أَحَقُّ النَّاسِ بِحُسْنِ صَحَابَتِي قَالَ أُمُّكَ قَالَ ثُمَّ مَنْ قَالَ ثُمَّ أُمُّكَ قَالَ ثُمَّ مَنْ قَالَ ثُمَّ أُمُّكَ قَالَ ثُمَّ مَنْ قَالَ ثُمَّ أَبُوكَ رَوَاهُ الْبُخَارِيُّ

ஒருவர் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களிடம் வந்தார். அவர், அல்லாஹ்வின் தூதரே! நான் அழகிய முறையில் பழகுவதற்கு மக்களில் யார் அதிகம் உரிமை பெற்றவர்? என்று கூறினார். அதற்கு ரஸூலுல்லாஹ் ﷺ, உமது தாய் என்று கூறினார்கள். அவர், பிறகு யார்? என்று கூறினார். பிறகு, உமது தாய் என்று கூறினார்கள். அவர், பிறகு யார் என்று கூறினார். பிறகு, உமது தாய் என்று கூறினார்கள். அவர், பிறகு யார்? என்று கூறினார். பிறகு, உமது தந்தை என்று கூறினார்கள்.[18]

﴿وَوَصَّيْنَا الْإِنْسَانَ بِوَالِدَيْهِ حَمَلَتْهُ أُمُّهُ وَهْنًا عَلَىٰ وَهْنٍ وَفِصَالُهُ

18. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரீ.

فِي عَامَيْنِ أَنِ اشْكُرْ لِي وَلِوَالِدَيْكَ إِلَيَّ الْمَصِيرُ﴾

தனது தாய் தந்தைக்கு நன்றி செய்யும்படி மனிதனுக்கு நாம் நல்லுபதேசம் செய்தோம். அவனுடைய தாய் துன்பத்தின் மேல் துன்பத்தை அனுபவித்துக் கர்ப்பத்தில் அவனைச் சுமந்து கொண்டலைந்தாள். பிறந்த பிறகும் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரே அவனுக்குப் பால் மறக்கடித்தாள். ஆகவே, நீ எனக்கும் நன்றி செலுத்து; உன் தாய் தந்தைக்கும் நன்றி செலுத்து. முடிவில் நீ நம்மிடமே வந்து சேரவேண்டியதிருக்கிறது.

(அல்குர்ஆன் 31 : 14)

عَنْ أُسَيْرِ بْنِ جَابِرٍ رضي الله عنه قَالَ كَانَ عُمَرُ بْنُ الْخَطَّابِ إِذَا أَتَى عَلَيْهِ أَمْدَادُ أَهْلِ الْيَمَنِ سَأَلَهُمْ أَفِيكُمْ أُوَيْسُ بْنُ عَامِرٍ حَتَّى أَتَى عَلَى أُوَيْسٍ فَقَالَ أَنْتَ أُوَيْسُ بْنُ عَامِرٍ قَالَ نَعَمْ قَالَ مِنْ مُرَادٍ ثُمَّ مِنْ قَرَنٍ قَالَ نَعَمْ قَالَ فَكَانَ بِكَ بَرَصٌ فَبَرَأْتَ مِنْهُ إِلَّا مَوْضِعَ دِرْهَمٍ قَالَ نَعَمْ قَالَ لَكَ وَالِدَةٌ قَالَ نَعَمْ قَالَ سَمِعْتُ رَسُولَ اللَّهِ ﷺ يَقُولُ يَأْتِي عَلَيْكُمْ أُوَيْسُ بْنُ عَامِرٍ مَعَ أَمْدَادِ أَهْلِ الْيَمَنِ مِنْ مُرَادٍ ثُمَّ مِنْ قَرَنٍ كَانَ بِهِ بَرَصٌ فَبَرَأَ مِنْهُ إِلَّا مَوْضِعَ دِرْهَمٍ لَهُ وَالِدَةٌ هُوَ بِهَا بَرٌّ لَوْ أَقْسَمَ عَلَى اللَّهِ لَأَبَرَّهُ فَإِنِ اسْتَطَعْتَ أَنْ يَسْتَغْفِرَ لَكَ فَافْعَلْ فَاسْتَغْفِرْ لِي فَاسْتَغْفَرَ لَهُ فَقَالَ لَهُ عُمَرُ أَيْنَ

تُرِيدُ قَالَ اَلْكُوفَةَ قَالَ أَلَا أَكْتُبُ لَكَ إِلَىٰ عَامِلِهَا قَالَ أَكُونُ فِي غَبْرَاءِ النَّاسِ أَحَبُّ رَوَاهُ مُسْلِمٌ

உஸைர் இப்னு ஜாபிர் ﵁ கூறுகிறார்கள்: யமன் நாட்டிலிருந்து மதீனாவிற்கு வந்த உதவி இராணுவத்தின் கூட்டங்களைப் பார்த்து, உங்களில் உவைஸ் இப்னு ஆமிர் இருக்கிறாரா? என்று உமர் ﵁ கூறினார்கள். இறுதியாக, உவைஸ் இடம் வந்தார்கள். (அவரிடம்,) நீர்தான் உவைஸ் இப்னு ஆமிரா? என்று கூறினார்கள். அவர், ஆம் என்றார். நீர் கரன் வமிசத்தில் முராது குடும்பத்தைச் சேர்ந்தவரா? என்று கூறினார்கள். அவர் ஆம் என்றார். இதற்கு முன் உமக்கு வெண்குஷ்டம் இருந்தது. அதிலிருந்து நீர் முழுமையாகச் சுகமடைந்தீர். ஆனால், ஒரு திர்ஹம் அளவு உள்ள பகுதியைத் தவிர! இது உண்மைதானா? என்று கூறினார்கள். அவர் ஆம் என்றார். உமக்குத் தாய் இருக்கின்றாரா? என்று கூறினார்கள். அவர் ஆம் என்றார்.

பிறகு உமர் ﵁ கூறினார்கள்: அல்லாஹ்வுடைய தூதர் கூற நான் கேட்டிருக்கிறேன், யமன் நாட்டைச் சேர்ந்த இராணுவக் கூட்டத்துடன் உவைஸ் இப்னு ஆமிர் உங்களிடம் வருவார். அவர் கரன் வமிசத்தில் முராது குடும்பத்தைச் சேர்ந்தவராவார். அவருக்கு வெண்குஷ்டம் இருந்தது. அதிலிருந்து முழுமையாக சுகமடைந்தார்; ஒரு திர்ஹம் அளவிற்குள்ள இடத்தைத் தவிர! அவருக்கு ஒரு தாய் இருக்கின்றாள். அவர் அந்தத் தாய்க்கு நன்மை செய்பவர் ஆவார். அவர் அல்லாஹ்வின் மீது சத்தியமிட்டால், அவருடைய சத்தியத்தை அல்லாஹ் நிறைவேற்றுவான். ஆகவே, உன்னால் முடிந்தால் அவர் உனக்காகப் பாவமன்னிப்புத் தேடும்படி கேட்டுக்கொள்.

ஆகவே, (உவைஸே!) நீ எனக்காகப் பாவமன்னிப்புத் தேடுவீராக என்று (உமர் ﵁ கூற,) அவரும் (உமர் ﵁) அவர்களுக்காகப் பாவமன்னிப்புத் தேடினார். பிறகு, நீர் எங்கே செல்ல விரும்புகிறீர்? என்று உமர் ﵁ கேட்க, கூஃபா நகரம் என்று அவர் கூறினார். நான் கூஃபாவின் ஆளுநருக்கு உங்களுக்காகக் கடிதம் எழுதித் தரட்டுமா? என்று உமர் ﵁ கூறினார்கள். அவர் (வேண்டாம்!) சாதாரண (ஏழைகளான) பொது மக்களில் ஒருவராக நான் இருப்பது எனக்கு மிக விருப்பமானது என்று அவர் கூறினார்.[19]

----

19. அறிவிப்பாளர்: உஸைர் இப்னு ஜாபிர் ﵁ நூல்: ஸஹீஹ் முஸ்லிம்

صَادِقٌ

உண்மையானவர்

عَنْ عَبْدِ اللهِ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ إِنَّ الصِّدْقَ يَهْدِي إِلَى الْبِرِّ وَإِنَّ الْبِرَّ يَهْدِي إِلَى الْجَنَّةِ وَإِنَّ الرَّجُلَ لَيَصْدُقُ حَتَّى يَكُونَ صِدِّيقًا وَإِنَّ الْكَذِبَ يَهْدِي إِلَى الْفُجُورِ وَإِنَّ الْفُجُورَ يَهْدِي إِلَى النَّارِ وَإِنَّ الرَّجُلَ لَيَكْذِبُ حَتَّى يُكْتَبَ عِنْدَ اللهِ كَذَّابًا رَوَاهُ الْبُخَارِيُّ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக உண்மை நன்மையின் பக்கம் வழிகாட்டுகிறது; நிச்சயமாக நன்மை சொர்க்கத்தின் பக்கம் வழிகாட்டுகிறது. நிச்சயமாக ஒரு மனிதர் உண்மையை (மட்டும்) பேசிக்கொண்டே இருக்கிறார். இறுதியாக (அல்லாஹ்விடம்) அவர் சித்தீக் -உண்மையாளராக ஆகிவிடுகிறார். நிச்சயமாக பொய் பாவங்களின் பக்கம் வழிகாட்டுகிறது. நிச்சயமாக பாவம் நரகத்தின் பக்கம் வழிகாட்டுகிறது. நிச்சயமாக ஒரு மனிதன் (எப்போதும்) பொய்யை (மட்டும்) பேசுகிறார். இறுதியாக, அவர் அல்லாஹ்விடம் பொய்யராக எழுதப்படுகிறார்.[20]

----

20. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்வூது ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரீ.

لَا يَشْهَدُ الزُّوْرَ

பொய் சாட்சி சொல்ல மாட்டார்

அல்லாஹ் கூறுகிறான்:

﴿وَاجْتَنِبُوا قَوْلَ الزُّورِ﴾

அன்றி பொய்யான வார்த்தைகளை விட்டு நீங்கள் தப்பித்துக் கொள்ளுங்கள். (அல்குர்ஆன் 22 : 30)

அல்லாஹ் கூறுகிறான்:

﴿وَالَّذِينَ لَا يَشْهَدُونَ الزُّورَ وَإِذَا مَرُّوا بِاللَّغْوِ مَرُّوا كِرَامًا﴾

மேலும், அவர்கள் பொய் சாட்சி சொல்லாமலும் வீணான செயல்கள் நடைபெறும் இடத்திற்குச் செல்லாமலும் ஒருக்கால் அத்தகைய இடத்திற்குச் செல்லும்படி ஏற்பட்டுவிட்ட போதிலும் அதில் சம்பந்தப்படாது கண்ணியமான முறையில் அதனைக் கடந்து சென்று விடுபவர்களாகவும் இருப்பார்கள். (அல்குர்ஆன் 25 : 72)

عَنْ أَبِي بَكْرَةَ ﵁ قَالَ قَالَ النَّبِيُّ ﷺ أَلَا أُنَبِّئُكُمْ بِأَكْبَرِ الْكَبَائِرِ ثَلَاثًا قَالُوا بَلَىٰ يَا رَسُولَ اللهِ قَالَ الْإِشْرَاكُ بِاللهِ وَعُقُوقُ

الْوَالِدَيْنِ وَجَلَسَ وَكَانَ مُتَّكِئًا فَقَالَ أَلَا وَقَوْلُ الزُّورِ قَالَ فَمَا زَالَ يُكَرِّرُهَا حَتَّى قُلْنَا لَيْتَهُ سَكَتَ رَوَاهُ الْبُخَارِيُّ

நபி ﷺ கூறினார்கள்: பெரும் பாவங்களிலெல்லாம் மிகப் பெரிய பாவத்தை உங்களுக்கு நான் அறிவித்துத் தரட்டுமா? அல்லாஹ்வின் தூதரே! அறிவித்துத் தாருங்கள் என்று தோழர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வுக்கு இணை வைப்பது, பெற்றோருக்கு மாறுசெய்வது என்று ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள். நபி ﷺ அவர்கள் (நேராக) அமர்ந்தார்கள். (இதற்கு முன்பு) சாய்ந்தவர்களாக இருந்தார்கள். மேலும், கூறினார்கள்: அறிந்து கொள்ளுங்கள்! பொய் சொல்வது என்று கூறினார்கள். நபி ﷺ அவர்கள் இதைத் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டே இருந்தார்கள். இறுதியாக, நாங்கள் அல்லாஹ்வின் தூதர் ﷺ அமைதியாக வேண்டுமே என்று கூறினோம்.[21]

----

21. அறிவிப்பாளர்: அபூ பக்ரா رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரீ.

نَاصِحٌ

நன்மையை நாடுவார்

عَنْ تَمِيمٍ الدَّارِيِّ ﵁ أَنَّ النَّبِيَّ ﷺ قَالَ الدِّينُ النَّصِيحَةُ قُلْنَا لِمَنْ قَالَ لِلَّهِ وَلِكِتَابِهِ وَلِرَسُولِهِ وَلِأَئِمَّةِ الْمُسْلِمِينَ وَعَامَّتِهِمْ رَوَاهُ مُسْلِمٌ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: மார்க்கம் என்பது பிறர் நலம் பேணுவதாகும். யாருக்கு அல்லாஹ்வின் தூதரே! என்று நாங்கள் கேட்டோம்: அதற்கு நபி ﷺ அவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனுடைய வேதத்திற்கும் அவனுடைய தூதருக்கும் முஸ்லிம்களின் தலைவர்களுக்கும் அவர்களின் பொது மக்களுக்கும் என பதிலளித்தார்கள்.[22]

عَنْ جَرِيرِ بْنِ عَبْدِ اللهِ ﵁ قَالَ بَايَعْتُ رَسُولَ اللهِ ﷺ عَلَىٰ إِقَامِ الصَّلَاةِ وَإِيتَاءِ الزَّكَاةِ وَالنُّصْحِ لِكُلِّ مُسْلِمٍ رَوَاهُ الْبُخَارِيُّ

நான் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களிடம், தொழுகையை நிலைநிறுத்துவதற்கும் ஸகாத் கொடுப்பதற்கும் முஸ்லிம்கள்

---

22. அறிவிப்பாளர்: தமீமுத்தாரி ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்

அனைவருக்கும் நன்மையை நாடுவதற்கும் வாக்குப் பிரமாணம் செய்தேன்.[23]

عَنْ عَبْدِ اللّٰهِ بْنِ عُمَرَ ﵄ أَنَّ رَسُولَ اللّٰهِ ﷺ قَالَ أَلَا كُلُّكُمْ رَاعٍ وَكُلُّكُمْ مَسْئُولٌ عَنْ رَعِيَّتِهِ فَالْإِمَامُ الَّذِي عَلَى النَّاسِ رَاعٍ وَهُوَ مَسْئُولٌ عَنْ رَعِيَّتِهِ وَالرَّجُلُ رَاعٍ عَلَىٰ أَهْلِ بَيْتِهِ وَهُوَ مَسْئُولٌ عَنْ رَعِيَّتِهِ وَالْمَرْأَةُ رَاعِيَةٌ عَلَىٰ أَهْلِ بَيْتِ زَوْجِهَا وَوَلَدِهِ وَهِيَ مَسْئُولَةٌ عَنْهُمْ وَعَبْدُ الرَّجُلِ رَاعٍ عَلَىٰ مَالِ سَيِّدِهِ وَهُوَ مَسْئُولٌ عَنْهُ أَلَا فَكُلُّكُمْ رَاعٍ وَكُلُّكُمْ مَسْئُولٌ عَنْ رَعِيَّتِهِ

رَوَاهُ الْبُخَارِيُّ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: அறிந்து கொள்ளுங்கள்! உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளியே! நீங்கள் ஒவ்வொருவரும் அவரவர் பொறுப்பு குறித்து (மறுமையில்) விசாரிக்கப்படுவீர்கள். மக்களுக்கு தலைவராக இருப்பவர் பொறுப்பாளர் ஆவார். அவர் தம் குடிமக்கள் குறித்து விசாரிக்கப்படுவார். ஆண் தன் குடும்பத்தின் பொறுப்பாளன். அவன் தன் பொறுப்புக்கு உட்பட்டவர்கள் பற்றி விசாரிக்கப்படுவான். பெண் (-மனைவி) தன் கணவரின் வீட்டார்கள் மற்றும் அவருடைய குழந்தைகளுக்கு பொறுப்பாளி ஆவார். அவர்களைப் பற்றி அவள் விசாரிக்கப்படுவாள். ஒருவரின் பணியாளன் தன் எஜமானரின்

23. அறிவிப்பாளர்: ஜரீர் இப்னு அப்துல்லாஹ் ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரீ

செல்வத்திற்குப் பொறுப்பாளன் ஆவான். அவன் அதுபற்றி விசாரிக்கப்படுவான். அறிந்துகொள்ளுங்கள்! நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளியே! நீங்கள் ஒவ்வொருவரும் அவ(ரவ)ருடைய பொறுப்புக்கு கீழ் உள்ளவர்களைப் பற்றி விசாரிக்கப்படுவீர்கள்.

يَدُلُّ عَلَى الْخَيْرِ

நன்மைக்கு வழிகாட்டுவார்

عَنْ أَبِي مَسْعُودٍ الْأَنْصَارِيِّ ﵁ قَالَ قَالَ رَسُولُ اللّٰهِ ﷺ مَنْ دَلَّ عَلَى خَيْرٍ فَلَهُ مِثْلُ أَجْرِ فَاعِلِهِ رَوَاهُ مُسْلِمٌ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: எவர் ஒரு நன்மைக்கு வழி காட்டுவாரோ அவருக்கு, அதைச் செய்பவரின் நன்மையைப் போன்று (நன்மை) கிடைக்கும்.[24]

----

24. அறிவிப்பாளர்: அபூ மஸ்ஊது அல் அன்சாரி ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்

لَا يَغُشُّ وَلَا يَخْدَعُ وَلَا يَغْدِرُ

ஏமாற்ற மாட்டாள், வஞ்சிக்க மாட்டாள், மோசடி செய்ய மாட்டாள்

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ مَنْ حَمَلَ عَلَيْنَا السِّلَاحَ فَلَيْسَ مِنَّا وَمَنْ غَشَّنَا فَلَيْسَ مِنَّا رَوَاهُ مُسْلِمٌ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: எவர் நமக்கு எதிராக வாளை ஏந்துகிறாரோ அவர் நம்மைச் சேர்ந்தவரில்லை. இன்னும், எவர் நம்மை ஏமாற்றுவாரோ அவர் நம்மைச் சேர்ந்தவரில்லை.[25]

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ أَنَّ رَسُولَ اللهِ ﷺ مَرَّ عَلَى صُبْرَةِ طَعَامٍ فَأَدْخَلَ يَدَهُ فِيهَا فَنَالَتْ أَصَابِعُهُ بَلَلًا فَقَالَ مَا هَذَا يَا صَاحِبَ الطَّعَامِ قَالَ أَصَابَتْهُ السَّمَاءُ يَا رَسُولَ اللهِ قَالَ أَفَلَا جَعَلْتَهُ فَوْقَ الطَّعَامِ كَيْ يَرَاهُ النَّاسُ مَنْ غَشَّ فَلَيْسَ مِنِّي رَوَاهُ مُسْلِمٌ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள், ஓர் உணவு தானியக் குவியலைக் கடந்து சென்றார்கள். அப்போது, தமது கையை

25. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.

அதனுள் நுழைத்தார்கள். அவர்களது விரல்கள் ஈரத்தை உணர்ந்தன. உணவு தானியத்தின் உரிமையாளரே, இது என்ன? என்று கேட்டார்கள். அவர் அல்லாஹ்வின் தூதரே! மழைநீர் இதன் மீது பட்டது என்றார். அ(ந்த ஈரமான)தை மக்கள் பார்க்கும்படி உணவு தானியத்திற்கு மேல் வைத்திருக்க வேண்டாமா? ஏமாற்றுபவர் என்னைச் சேர்ந்தவரில்லை என்று கூறினார்கள்.[26]

عَنْ عَبْدِ اللهِ ﵁ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ لِكُلِّ غَادِرٍ لِوَاءٌ يَوْمَ الْقِيَامَةِ يُقَالُ هٰذِهِ غَدْرَةُ فُلَانٍ رَوَاهُ مُسْلِمٌ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: மறுமைநாளில் ஒவ்வொரு மோசடிக்காரனிடமும் ஒரு கொடி இருக்கும். இது இன்னாருக்கு செய்த மோசடி என அறிவிக்கப்படும்.[27]

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ قَالَ اللهُ تَعَالَى ثَلَاثَةٌ أَنَا خَصْمُهُمْ يَوْمَ الْقِيَامَةِ رَجُلٌ أَعْطَى بِي ثُمَّ غَدَرَ وَرَجُلٌ بَاعَ حُرًّا فَأَكَلَ ثَمَنَهُ وَرَجُلٌ اسْتَأْجَرَ أَجِيرًا فَاسْتَوْفَى مِنْهُ وَلَمْ يُعْطِ أَجْرَهُ رَوَاهُ الْبُخَارِيُّ

அபூ ஹுரைரா ﵁ அறிவிக்கிறார்கள், மிக உயர்ந்தவனான அல்லாஹ் கூறுவதாக நபி ﷺ கூறினார்கள்: மூன்று மனிதர்களின் வாதியாக மறுமைநாளில் நான் இருப்பேன். 1. ஒரு மனிதன், அவன் என்னைக் கொண்டு கொடுத்தான்.

26. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.

27. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.

(என் பெயரைக் கூறி ஒப்பந்தம் செய்தான், அல்லது சத்தியம் செய்தான்.) பிறகு, (அதில்) மோசடி செய்தான், 2. இன்னும் ஒரு மனிதன், அவன் சுதந்திரமான ஒருவரை (அடிமையெனக் கூறி) விற்று, அவரின் விலையைச் சாப்பிட்டான். 3. இன்னும், ஒரு மனிதன், அவன் கூலிக்காரர் ஒருவரை கூலிக்கு அமர்த்தினான். பிறகு, அவரிடம் வேலையை முழுமையாக வாங்கினான். ஆனால், அவருக்குக் கூலி கொடுக்கவில்லை.[28]

عَنْ عَبْدِ اللّٰهِ بْنِ عَمْرٍو ﵁ أَنَّ النَّبِيَّ ﷺ قَالَ أَرْبَعٌ مَنْ كُنَّ فِيهِ كَانَ مُنَافِقًا خَالِصًا وَمَنْ كَانَتْ فِيهِ خَصْلَةٌ مِنْهُنَّ كَانَتْ فِيهِ خَصْلَةٌ مِنَ النِّفَاقِ حَتّٰى يَدَعَهَا إِذَا اؤْتُمِنَ خَانَ وَإِذَا حَدَّثَ كَذَبَ وَإِذَا عَاهَدَ غَدَرَ وَإِذَا خَاصَمَ فَجَرَ رَوَاهُ الْبُخَارِيُّ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: நான்கு குணங்கள் எவரிடத்தில் உள்ளனவோ அவர் சுத்தமான நயவஞ்சகராவார். எவரிடத்தில் அவற்றில் இருந்து ஏதேனும் ஒரு குணம் இருக்கிறதோ அதை அவர் விடுகின்றவரை நயவஞ்சகத்தில் இருந்து ஒரு குணம் அவரிடத்தில் இருக்கும். அவர்மீது நம்பிக்கை வைக்கப்பட்டால் அவர் மோசடி செய்வார். அவர் பேசினால் பொய்யுரைப்பார். அவர் ஒப்பந்தம் செய்தால் துரோகம் செய்வார். அவர் வாதிட்டால் நேர்மை தவறி வாதிடுவார்.[29]

----

28. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரீ.
29. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரீ.

مُوْفٍ بِالْوَعَدِ

வாக்கை நிறைவேற்றுவார்

அல்லாஹ் கூறுகிறான்:

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَوْفُوا بِالْعُقُودِ﴾

நம்பிக்கையாளர்களே! நீங்கள் உங்கள் உடன்படிக்கைகளை முழுமையாக நிறைவேற்றுங்கள். (அல்குர்ஆன் 5 : 1)

அல்லாஹ் கூறுகிறான்:

﴿وَأَوْفُوا بِالْعَهْدِ إِنَّ الْعَهْدَ كَانَ مَسْئُولًا﴾

உங்கள் வாக்குறுதியை நீங்கள் முழுமையாக நிறைவேற்றுங்கள். ஏனென்றால், மறுமையில் வாக்குறுதியைப் பற்றி உங்களிடம் நிச்சயமாகக் கேட்கப்படும். (அல்குர்ஆன் 17 : 34)

அல்லாஹ் கூறுகிறான்:

﴿وَأَوْفُوا بِعَهْدِ اللّٰهِ إِذَا عَاهَدْتُمْ﴾

நீங்கள் அல்லாஹ்வின் பெயரால் செய்யும் உடன்படிக்கையை முழுமையாக நிறைவேற்றுங்கள். (அல்குர்ஆன் 16 : 91)

அல்லாஹ் கூறுகிறான்:

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لِمَ تَقُولُونَ مَا لَا تَفْعَلُونَ كَبُرَ مَقْتًا عِنْدَ اللهِ أَنْ تَقُولُوا مَا لَا تَفْعَلُونَ﴾

நம்பிக்கையாளர்களே! நீங்கள் செய்யாத செயல்களைச் செய்வேனென்றோ, செய்ததாகவோ ஏன் கூறுகிறீர்கள்? நீங்கள் செய்யாத செயல்களைச் செய்வேன் என்று அல்லது செய்ததாகக் கூறுவது அல்லாஹ்விடத்தில் பெரும்பாவமாக இருக்கிறது. (அல்குர்ஆன் 61 : 2,3)

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ آيَةُ الْمُنَافِقِ ثَلَاثٌ إِذَا حَدَّثَ كَذَبَ وَإِذَا وَعَدَ أَخْلَفَ وَإِذَا اؤْتُمِنَ خَانَ وَإِنْ صَامَ وَصَلَّى وَزَعَمَ أَنَّهُ مُسْلِمٌ رَوَاهُ مُسْلِمٌ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: நயவஞ்சகரின் அடையாளம் மூன்றாகும். அவர் பேசினால் பொய்யுரைப்பார். அவர் வாக்களித்தால் மாறுசெய்வார். அவர்மீது நம்பிக்கை வைக்கப்பட்டால் மோசடி செய்வார். அவர் நோன்பு வைத்து, தொழுது, தன்னை ஒரு முஸ்லிம் என்று எண்ணிக் கொண்டாலும் சரியே![30]

----

30. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: முஸ்லிம்.

يَجْتَنِبُ الْغُلُوَّ

அளவு கடந்து புகழ்வதை தவிர்ப்பார்

عَنْ مُطَرِّفٍ ﵀ قَالَ قَالَ أَبِي عبد الله اِنْطَلَقْتُ فِي وَفْدِ بَنِي عَامِرٍ إِلَى رَسُولِ اللهِ ﷺ فَقُلْنَا أَنْتَ سَيِّدُنَا فَقَالَ السَّيِّدُ اللهُ تَبَارَكَ وَتَعَالَى قُلْنَا وَأَفْضَلُنَا فَضْلًا وَأَعْظَمُنَا طَوْلًا فَقَالَ قُولُوا بِقَوْلِكُمْ أَوْ بَعْضِ قَوْلِكُمْ وَلَا يَسْتَجْرِيَنَّكُمْ الشَّيْطَانُ رَوَاهُ أَبُو دَاوُدَ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களிடம் பனூ ஆமிர் குழுவினருடன் நான் சென்றேன். அப்போது நாங்கள் (நபியை புகழ்ந்து) நீங்கள் எங்கள் தலைவர் என்று கூறினோம். உடனே, ரஸூலுல்லாஹ் ﷺ அருள் நிறைந்தவனான உயர்வானவனான, அல்லாஹ்தான் தலைவன் என்று கூறினார்கள். நாங்கள் கூறினோம்: நீங்கள் எங்களில் மிகவும் சிறப்பிற்குரியவர், கொடை கொடுப்பதில், எதிரிகளை மிகைப்பதில் எங்களில் மிக மகத்தானவர். அதற்கு ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: உங்கள் கூற்றை முழுமையாகவோ, அல்லது உங்கள் கூற்றில் சிலவற்றையோ கூறுங்கள். ஆனால், உங்களை ஷைத்தான் (தனக்கு) முகவர்களாக[31] ஆக்காமல் இருக்கட்டும்.[32]

---

31. முகவர்களாக அதாவது, தனது வழிகேட்டையும் சீரழிவையும் பரப்புவதற்கு உங்களை சாதகமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டாம்.

32. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் ﵁, நூல்: ஸுனன் அபூதாவூது, - ஸஹீஹ்

عَنْ أَبِي بَكْرَةَ ﵁ قَالَ أَثْنَى رَجُلٌ عَلَى رَجُلٍ عِنْدَ النَّبِيِّ ﷺ فَقَالَ وَيْلَكَ قَطَعْتَ عُنُقَ صَاحِبِكَ قَطَعْتَ عُنُقَ صَاحِبِكَ مِرَارًا ثُمَّ قَالَ مَنْ كَانَ مِنْكُمْ مَادِحًا أَخَاهُ لَا مَحَالَةَ فَلْيَقُلْ أَحْسِبُ فُلَانًا وَاللَّهُ حَسِيبُهُ وَلَا أُزَكِّي عَلَى اللَّهِ أَحَدًا أَحْسِبُهُ كَذَا وَكَذَا إِنْ كَانَ يَعْلَمُ ذَلِكَ مِنْهُ رَوَاهُ الْبُخَارِيُّ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களிடத்தில் ஒரு மனிதர் இன்னொரு மனிதரை (அவரின் முகத்துக்கு முன்னால்) புகழ்ந்தார். அதற்கு நபி ﷺ அவர்கள்: நீர் நாசமடைவீராக! உமது தோழரின் கழுத்தை துண்டித்து விட்டீர், உமது தோழரின் கழுத்தை துண்டித்து விட்டீர் என பல முறை கூறினார்கள். பிறகு, கூறினார்கள்: எவரேனும் தனது சகோதரரை அவசியம் புகழ்பவராக இருந்தால், இன்னவரை (இவ்வாறு) கருதுகிறேன்; அல்லாஹ்வே அவருக்குப் போதுமானவன். அல்லாஹ்விற்கு முன் ஒருவரையும் நான் பரிசுத்தப்படுத்த மாட்டேன். நான் அவரை இப்படி, இப்படி எண்ணுகிறேன் என்று மட்டும் கூறவும், (அதுவும்) அந்த தன்மை அவரிடம் இருப்பதாக அவர் அறிந்தால் மட்டும் (சொல்லவும்).[33]

----

33. அறிவிப்பாளர்: அபூ பக்ரா ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரீ.

مُتَّصِفٌ بِالْحَيَاءِ

நாணம் உடையவர்

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ ﵁ قَالَ كَانَ النَّبِيُّ ﷺ أَشَدَّ حَيَاءً مِنَ الْعَذْرَاءِ فِي خِدْرِهَا فَإِذَا رَأَى شَيْئًا يَكْرَهُهُ عَرَفْنَاهُ فِي وَجْهِهِ رَوَاهُ الْبُخَارِيُّ

நபி ﷺ தனது திரைக்குள் இருக்கின்ற கன்னிப் பெண்ணை விடவும் அதிக வெட்கமுடையவர்களாக இருந்தார்கள். அவர்களுக்குப் பிடிக்காத ஏதேனும் ஒரு செயலை அவர்கள் கண்டால் அதை அவர்களின் முகத்தில் நாம் தெரிந்து கொள்வோம்.[34]

عَنْ عِمْرَانَ بْنِ حُصَيْنٍ ﵁ قَالَ قَالَ النَّبِيُّ ﷺ اَلْحَيَاءُ لَا يَأْتِي إِلَّا بِخَيْرٍ رَوَاهُ الْبُخَارِيُّ

நபி ﷺ கூறினார்கள்: வெட்கம் நன்மையைத் தவிர வேறொன்றையும் கொண்டுவராது.[35]

---

34. அறிவிப்பாளர்: அபூ சயீது அல்குத்ரி ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரீ
35. அறிவிப்பாளர்: இம்ரான் இப்னு ஹுஸைன் ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரீ

عَنْ عِمْرَانَ بْنِ حُصَيْنٍ ﵁ قَالَ قَالَ رَسُولُ اللّٰهِ ﷺ الْحَيَاءُ خَيْرٌ كُلُّهُ رَوَاهُ مُسْلِمٌ

வெட்கம் முற்றிலும் நன்மையே என்று ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்.[36]

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ قَالَ قَالَ رَسُولُ اللّٰهِ ﷺ اَلْإِيمَانُ بِضْعٌ وَسَبْعُونَ أَوْ بِضْعٌ وَسِتُّونَ شُعْبَةً فَأَفْضَلُهَا قَوْلُ لَا إِلَهَ إِلَّا اللّٰهُ وَأَدْنَاهَا إِمَاطَةُ الْأَذَى عَنِ الطَّرِيقِ وَالْحَيَاءُ شُعْبَةٌ مِنَ الْإِيمَانِ رَوَاهُ مُسْلِمٌ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: ஈமான் இறைநம்பிக்கை எழுபதுக்கும் மேற்பட்ட அல்லது அறுபதுக்கும் மேற்பட்ட கிளைகளாகும். அவற்றில் மிக சிறப்பானது 'லாஇலாஹ இல்லல்லாஹ்' வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி யாருமில்லை என்பதாகும். அவற்றில் தாழ்ந்தது இடையூறு தருபவற்றை பாதையிலிருந்து அகற்றுவதாகும். இன்னும், வெட்கம் இறைநம்பிக்கையின் ஒரு பகுதியாகும்.[37]

----

36. அறிவிப்பாளர்: இம்ரான் இப்னு ஹுஸைன் ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.
37. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.

عَفِيْفٌ عَزِيْزُ النَّفْسِ

ஒழுக்கமானவர், சுயமரியாதையைப் பேணுவார்

عَنْ أَبِي سَعِيدٍ الْخُـدْرِيِّ ﵁ أَنَّ رَسُولَ اللّٰهِ ﷺ قَالَ مَنْ يَسْتَعْفِفْ يُعِفَّهُ اللّٰهُ مَنْ يَسْتَغْنِ يُغْنِهِ اللّٰهُ وَمَنْ يَصْبِرْ يُصَبِّرْهُ اللّٰهُ وَمَا أُعْطِيَ أَحَـدٌ مِنْ عَطَاءٍ خَيْرٌ وَأَوْسَـعُ مِنَ الصَّبْرِ رَوَاهُ مُسْلِمٌ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: எவர் ஒழுக்கமாக இருக்க முயற்சிப்பாரோ அவரை அல்லாஹ் ஒழுக்கமுடையவராக ஆக்குகின்றான். எவர் பிறரை விட்டும் தன்னை தேவையற்றவராக ஆக்கிக்கொள்வாரோ அல்லாஹ்வும் அவரை பிறரைவிட்டும் தேவையற்றவராக ஆக்குவான். எவர் பொறுமையாக இருப்பாரோ அல்லாஹ்வும் அவருக்கு பொறுமையை தருகின்றான். பொறுமையைவிட சிறந்த இன்னும் விசாலமான அருட்கொடை எதுவும் எவருக்கும் அருளப்படவில்லை.[38]

---

38. அறிவிப்பாளர்: அபூ சயீது அல்குத்ரி ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.

عَنْ عَبْدِ اللّٰهِ بْنِ عُمَرَ ﵄ أَنَّ رَسُـولَ اللّٰهِ ﷺ قَالَ وَهُوَ عَلَى الْمِنْبَرِ وَهُوَ يَذْكُرُ الصَّدَقَةَ وَالتَّعَفُّفَ عَنِ الْمَسْأَلَةِ الْيَدُ الْعُلْيَا خَيْرٌ مِنَ الْيَدِ السُّفْلَى وَالْيَدُ الْعُلْيَا اَلْمُنْفِقَةُ وَالسُّفْلَى السَّائِلَةُ رَوَاهُ مُسْلِمٌ

நிச்சயமாக ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் மின்பர் மீது இருந்து தர்மத்தைப் பற்றியும் பிறரிடம் யாசிக்காமல் ஒழுக்கமாக இருப்பது பற்றியும் மக்களுக்கு நினைவூட்டிக் கொண்டிருந்தபோது கூறினார்கள்: தாழ்ந்த கையை விட உயர்ந்த கை மேலானது. உயர்ந்த கை என்றால் தர்மம் செய்யக் கூடியதாகும் தாழ்ந்த கை என்றால் யாசிக்கின்றதாகும்.[39]

----

39. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் ﵄, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.

لَا يَتَدَخَّلُ فِيْمَا لَا يَعْنِيْهِ

தனக்குத் தேவையில்லாத விஷயத்தில் நுழைய மாட்டார்

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ قَالَ قَالَ رَسُولُ اللّٰهِ ﷺ مِنْ حُسْنِ إِسْلَامِ الْمَرْءِ تَرْكُهُ مَا لَا يَعْنِيهِ رَوَاهُ التِّرْمِذِيُّ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: ஒரு மனிதரின் அழகிய இஸ்லாமியப் பண்பில் உள்ளதாகும், தமக்குத் தேவையற்ற விஷயங்களை அவர் விடுவது.[40]

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ قَالَ قَالَ رَسُولُ اللّٰهِ ﷺ إِنَّ اللّٰهَ يَرْضَى لَكُمْ ثَلَاثًا وَيَكْرَهُ لَكُمْ ثَلَاثًا فَيَرْضَى لَكُمْ أَنْ تَعْبُدُوهُ وَلَا تُشْرِكُوا بِهِ شَيْئًا وَأَنْ تَعْتَصِمُوا بِحَبْلِ اللّٰهِ جَمِيعًا وَلَا تَفَرَّقُوا وَيَكْرَهُ لَكُمْ قِيلَ وَقَالَ وَكَثْرَةَ السُّؤَالِ وَإِضَاعَةِ الْمَالِ رَوَاهُ مُسْلِمٌ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு மூன்று குணங்களை விரும்புகின்றான்; மூன்று குணங்களை வெறுக்கின்றான். அவனையே

40. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: ஜாமிவுத் திர்மிதீ, - ஸஹீஹ்

நீங்கள் வணங்க வேண்டும், அவனுக்கு எதையும் நீங்கள் இணைவைக்கக் கூடாது, நீங்கள் அல்லாஹ்வின் கயிற்றைப் பற்றிப்பிடிக்க வேண்டும், நீங்கள் பிரிந்துவிடக் கூடாது என்று அவன் உங்களுக்கு விரும்புகிறான்.

கூறப்பட்டது, கூறினான் என்பது, (-இவ்வாறு வதந்திகளில் ஈடுபடுவது), அதிகமாகக் கேள்விகள் கேட்பது, இன்னும் செல்வத்தை வீணடிப்பதை அவன் உங்களுக்கு வெறுக்கின்றான்.[41]

----

41. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﷺ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.

يَبْتَعِدُ عَنِ الْخَوْضِ فِي الْأَعْرَاضِ وَتَتَبُّعِ الْعَوْرَاتِ

மான மரியாதைகளை கலங்கப்படுத்துவது இன்னும் குறைகளை ஆராய்வதை விட்டும் தூரமாக இருப்பார்

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿إِنَّ الَّذِينَ يُحِبُّونَ أَنْ تَشِيعَ الْفَاحِشَةُ فِي الَّذِينَ آمَنُوا لَهُمْ عَذَابٌ أَلِيمٌ فِي الدُّنْيَا﴾

எவர் நம்பிக்கையாளர்களுக்கு மத்தியில் இத்தகைய மானக்கேடான வார்த்தைகளைப் பரப்ப விரும்புகிறார்களோ அவர்களுக்கு நிச்சயமாக இம்மையிலும் மறுமையிலும் மிக்க துன்புறுத்தக்கூடிய வேதனையுண்டு. (அல்குர்ஆன் 24 : 19)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿وَلَا تَجَسَّسُوا﴾

எவருடைய குற்றத்தையும் நீங்கள் துருவித் துருவி விசாரிக்காதீர்கள். (அல்குர்ஆன் 49 : 12)

عَنْ مُعَاوِيَةَ ﵁ قَالَ سَمِعْتُ رَسُولَ اللّٰهِ ﷺ يَقُولُ إِنَّكَ

إِنْ اتَّبَعْتَ عَوْرَاتِ النَّاسِ أَفْسَدْتَهُمْ أَوْ كِدْتَ أَنْ تُفْسِدَهُمْ رَوَاهُ أَبُو دَاوُودَ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூற நான் கேட்டேன்: நீ மக்களின் குறைகளை ஆராய்ந்தால் அவர்களை நீ கெடுத்துவிடுவாய். அல்லது, கெடுப்பதற்கு நெருங்கிவிடுவாய் என்று ரஸூலுல்லாஹ் அவர்கள் கூறினார்கள்.[42]

عَنْ ثَوْبَانَ ﷛ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ لَا تُؤْذُوا عِبَادَ اللهِ وَلَا تُعَيِّرُوهُمْ وَلَا تَطْلُبُوا عَوْرَاتِهِمْ فَإِنَّهُ مَنْ طَلَبَ عَوْرَةَ أَخِيهِ الْمُسْلِمِ طَلَبَ اللهُ عَوْرَتَهُ حَتَّى يَفْضَحَهُ فِي بَيْتِهِ رَوَاهُ أَحْمَدُ

நபி ﷺ கூறினார்கள்: அல்லாஹ்வின் அடியார்களுக்கு தொந்தரவு தராதீர்கள்; அவர்களை இழிவுபடுத்தாதீர்கள்; அவர்களின் குறைகளைத் தேடாதீர்கள். ஏனெனில், நிச்சயமாக எவன் தனது முஸ்லிம் சகோதரனின் குறைகளைத் தேடுகிறானோ அவனுடைய குறைகளை அல்லாஹ் தேடுவான். இறுதியில், அவன் அவனுடைய வீட்டிற்குள்ளே இருக்கின்றபோதே அவன் அவனை (அவனுடைய குறைகளை) அம்பலப்படுத்தி விடுவான். (-அவனது குறைகளை வெளிப்படுத்தி அவமானப்படுத்தி விடுவான்.)[43]

عَنِ ابْنِ عُمَرَ قَالَ صَعِدَ رَسُولُ اللهِ ﷺ الْمِنْبَرَ فَنَادَى بِصَوْتٍ رَفِيعٍ فَقَالَ يَا مَعْشَرَ مَنْ أَسْلَمَ بِلِسَانِهِ وَلَمْ يُفْضِ الْإِيمَانُ إِلَى

42. அறிவிப்பாளர்: முஆவியா ﷛, நூல்: சுனன் அபூதாவூது, - ஸஹீஹ்
43. அறிவிப்பாளர்: ஸவ்பான் ﷛, நூல்: முஸ்னது அஹ்மது, - ஸஹீஹ்

قَلْبِهِ لَا تُؤْذُوا الْمُسْلِمِينَ وَلَا تُعَيِّرُوهُمْ وَلَا تَتَّبِعُوا عَوْرَاتِهِمْ فَإِنَّهُ مَنْ تَتَبَّعَ عَوْرَةَ أَخِيهِ الْمُسْلِمِ تَتَبَّعَ اللّٰهُ عَوْرَتَهُ وَمَنْ تَتَبَّعَ اللّٰهُ عَوْرَتَهُ يَفْضَحْهُ وَلَوْ فِي جَوْفِ رَحْلِهِ قَالَ وَنَظَرَ ابْنُ عُمَرَ يَوْمًا إِلَى الْبَيْتِ أَوْ إِلَى الْكَعْبَةِ فَقَالَ مَا أَعْظَمَكِ وَأَعْظَمَ حُرْمَتَكِ وَالْمُؤْمِنُ أَعْظَمُ حُرْمَةً عِنْدَ اللّٰهِ مِنْكِ رَوَاهُ التِّرْمِذِىْ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் மின்பரில் ஏறி உயர்ந்த சப்தமிட்டு அழைத்தார்கள். அவர்கள் கூறினார்கள்: தமது நாவால் அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டு தமது இதயத்தில் ஈமான் - நம்பிக்கை நுழையாதவர்களே! நம்பிக்கை கொண்டவர்களுக்கு தொந்தரவு தராதீர்கள்; அவர்களை பழிக்காதீர்கள்; அவர்களின் குறைகளை ஆராயாதீர்கள். எவன் தனது சகோதரருடைய குறைகளை ஆராய்கிறானோ அவனுடைய குறைகளை அல்லாஹ் ஆராய்ந்துவிடுவான். யாருடைய குறையை அல்லாஹ் ஆராய்வானோ அவரை (-அவருடைய குறைகளை) அல்லாஹ் அம்பலப்படுத்தி விடுவான், அவர் தனது வீட்டுக்குள் இருந்தாலும் சரி. இப்னு உமர் ஒருமுறை கஅபாவைப் பார்த்து கூறினார்கள்: நீ எவ்வளவு மகத்துவம் நிறைந்த இல்லம்! உனது கண்ணியம் எவ்வளவு மகத்துவ மிக்கது! அல்லாஹ்விடத்தில் உன்னைவிட முஃமினான மனிதர் கண்ணியத்தால் மிகவும் மகத்துவமானவர்![44]

----

44. அறிவிப்பாளர்: இப்னு உமர் ؓ, நூல்: திர்மிதி, - ஹஸன்.

بَعِيْدٌ عَنِ الرِّيَاءِ

முகஸ்துதியை விட்டு தூரமானவர்

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُونِ﴾

ஜின்களையும் மனிதர்களையும் எனக்குக் கீழ்ப்படிந்து என்னை வணங்குவதற்காகவே தவிர வேறெதற்காகவும் நான் படைக்கவில்லை. (அல்குர்ஆன் 51 : 56)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿وَمَا أُمِرُوا إِلَّا لِيَعْبُدُوا اللّٰهَ مُخْلِصِينَ لَهُ الدِّينَ حُنَفَاءَ﴾

அல்லாஹ்வுக்கே மார்க்கத்தைத் தூய்மைப்படுத்தியவர்களாகவும் இஸ்லாமிய மார்க்கத்தில் உறுதிமிக்கவர்களாகவும் இருக்கின்ற நிலையில் அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும் என்பதைத் தவிர வேறு கட்டளை அவர்களுக்கு இடப்படவில்லை. (அல்குர்ஆன் 98 : 5)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تُبْطِلُوا صَدَقَاتِكُمْ بِالْمَنِّ وَالْأَذَى
كَالَّذِي يُنْفِقُ مَالَهُ رِئَاءَ النَّاسِ وَلَا يُؤْمِنُ بِاللّٰهِ وَالْيَوْمِ الْآخِرِ

فَمَثَلُهُ كَمَثَلِ صَفْوَانٍ عَلَيْهِ تُرَابٌ فَأَصَابَهُ وَابِلٌ فَتَرَكَهُ صَلْدًا لَا يَقْدِرُونَ عَلَى شَيْءٍ مِمَّا كَسَبُوا وَاللَّهُ لَا يَهْدِي الْقَوْمَ الْكَافِرِينَ﴾

நம்பிக்கையாளர்களே! நீங்கள் உங்களுடைய தர்மத்தைப் பெற்றவருக்கு இகழ்ச்சியையும் துன்பத்தையும் செய்வது கொண்டு அதன் பலனை வீணாக்கிவிடாதீர்கள். அவ்வாறு செய்பவர் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொள்ளாது தான் தர்மவான் என்பதைப் பிற மனிதர்களுக்கு அறிவிக்கும் பொருட்டுத் தம் பொருளை செலவு செய்து வீணாக்கி விட்டவருக்கு ஒப்பாவார். அவருடைய எடுத்துக் காட்டு, ஒரு வழுக்கைப் பாறையை ஒத்திருக்கின்றது. அதன் மீது மண் படிந்தது. எனினும் ஒரு பெரும் மழை பொழிந்து அதைக் கழுவி வெறும் பாறையாக்கி விட்டது. இவ்வாறே அவர் செய்த தானத்தை அவருடைய பெருமை அழித்து விடும். ஆகவே, அவர்கள் தானம் செய்ததிலிருந்து யாதொரு பலனையும் மறுமையில் அடைய மாட்டார்கள்.

(அல்குர்ஆன் 2 : 264)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿وَإِذَا قَامُوا إِلَى الصَّلَاةِ قَامُوا كُسَالَى يُرَاءُونَ النَّاسَ وَلَا يَذْكُرُونَ اللَّهَ إِلَّا قَلِيلًا﴾

அவர்கள் தொழுகையில் நின்றாலோ சோம்பேறிகளாக நின்று, மனிதர்களுக்குக் காண்பிக்க விரும்புகின்றார்கள். அவர்கள் வெகு சொற்பமாகவே அன்றி அல்லாஹ்வை நினைவுகூர்வதில்லை. (அல்குர்ஆன் 4 : 142)

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ قَالَ اللهُ تَبَارَكَ وَتَعَالَى أَنَا أَغْنَى الشُّرَكَاءِ عَنِ الشِّرْكِ مَنْ عَمِلَ عَمَلًا أَشْرَكَ فِيهِ مَعِيَ غَيْرِي تَرَكْتُهُ وَشِرْكَهُ رَوَاهُ مُسْلِمٌ

அருள் நிறைந்த, உயர்வுமிக்க அல்லாஹ் கூறுவதாக ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: நான் இணைவைப்பவர்களுடைய இணைவைப்பைவிட்டு முற்றிலும் தேவையற்றவன். யார் ஒருவர் ஏதேனும் ஒரு அமலைபுரிந்து என்னுடன் மற்ற எவரையேனும் அதில் கூட்டாக்கினால் நான் அவரை அவருடைய இணைவைப்புடன் விட்டுவிடுகிறேன்.[45]

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ إِنَّ أَوَّلَ النَّاسِ يُقْضَى يَوْمَ الْقِيَامَةِ عَلَيْهِ رَجُلٌ اُسْتُشْهِدَ فَأُتِيَ بِهِ فَعَرَّفَهُ نِعَمَهُ فَعَرَفَهَا قَالَ فَمَا عَمِلْتَ فِيهَا قَالَ قَاتَلْتُ فِيكَ حَتَّى اُسْتُشْهِدْتُ قَالَ كَذَبْتَ وَلٰكِنَّكَ قَاتَلْتَ لِأَنْ يُقَالَ جَرِيءٌ فَقَدْ قِيلَ ثُمَّ أُمِرَ بِهِ فَسُحِبَ عَلٰى وَجْهِهِ حَتّٰى أُلْقِيَ فِي النَّارِ وَرَجُلٌ تَعَلَّمَ الْعِلْمَ وَعَلَّمَهُ وَقَرَأَ الْقُرْآنَ فَأُتِيَ بِهِ فَعَرَّفَهُ نِعَمَهُ فَعَرَفَهَا قَالَ فَمَا عَمِلْتَ فِيهَا قَالَ تَعَلَّمْتُ الْعِلْمَ وَعَلَّمْتُهُ وَقَرَأْتُ فِيكَ الْقُرْآنَ قَالَ كَذَبْتَ وَلٰكِنَّكَ تَعَلَّمْتَ الْعِلْمَ لِيُقَالَ عَالِمٌ وَقَرَأْتَ الْقُرْآنَ لِيُقَالَ هُوَ قَارِئٌ فَقَدْ قِيلَ ثُمَّ أُمِرَ بِهِ فَسُحِبَ عَلٰى وَجْهِهِ حَتّٰى

45. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.

أُلْقِيَ فِي النَّارِ وَرَجُلٌ وَسَّعَ اللهُ عَلَيْهِ وَأَعْطَاهُ مِنْ أَصْنَافِ الْمَالِ كُلِّهِ فَأُتِيَ بِهِ فَعَرَّفَهُ نِعَمَهُ فَعَرَفَهَا قَالَ فَمَا عَمِلْتَ فِيهَا قَالَ مَا تَرَكْتُ مِنْ سَبِيلٍ تُحِبُّ أَنْ يُنْفَقَ فِيهَا إِلَّا أَنْفَقْتُ فِيهَا لَكَ قَالَ كَذَبْتَ وَلَٰكِنَّكَ فَعَلْتَ لِيُقَالَ هُوَ جَوَادٌ فَقَدْ قِيلَ ثُمَّ أُمِرَ بِهِ فَسُحِبَ عَلَىٰ وَجْهِهِ ثُمَّ أُلْقِيَ فِي النَّارِ رَوَاهُ مُسْلِمٌ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் (பின்வருமாறு) கூறியதை நான் செவியுற்றேன்:

மறுமை நாளில் மக்களில் முதல் முதலில் தீர்ப்பு வழங்கப்படுபவர் யாரெனில், இறைவழியில் உயிர்த் தியாகம் செய்தவரே ஆவார். அவர் இறைவனிடம் கொண்டுவரப்படும்போது, அவருக்குத் தான் வழங்கியிருந்த அருட்கொடைகளை இறைவன் எடுத்துரைப்பான். அவற்றை அவர் அறிந்துகொள்வார். பிறகு, அந்த அருட்கொடைகளில் நீ எவ்விதம் செயல்பட்டாய்? என்று இறைவன் கேட்பான். அவர், (இறைவா!) உனக்காக நான் அறப்போரில் ஈடுபட்டு என் உயிரையே தியாகம் செய்தேன் என்று பதிலளிப்பார்.

இறைவன், (இல்லை) நீ பொய் சொல்கிறாய். (நீ எனக்காக உயிர்த் தியாகம் செய்யவில்லை.) மாறாக, மாவீரன் என்று (மக்களிடையே) பேசப்படுவதற்காகவே நீ போரிட்டாய். அவ்வாறு சொல்லப்பட்டுவிட்டது. (உனது நோக்கம் நிறைவேறிவிட்டது) என்று கூறுவான். பிறகு இறைவனின் கட்டளைப்படி முகம் குப்புற இழுத்துச் செல்லப்பட்டு, அவர் நரகத்தில் எறியப்படுவார்.

பிறகு கல்வியைத் தாமும் கற்று அதைப் பிறருக்கும்

கற்பித்தவரும் குர்ஆனைக் கற்றுணர்ந்தவருமான (மார்க்க அறிஞர்) ஒருவர் (இறைவனிடம்) கொண்டுவரப்படுவார். அவருக்குத் தான் வழங்கியிருந்த அருட்கொடைகளை இறைவன் எடுத்துரைப்பான். அவற்றை அவர் அறிந்து கொள்வார். பிறகு அந்த அருட்கொடைகளில் நீ எவ்விதம் செயல்பட்டாய்? என்று இறைவன் கேட்பான். அவர், (இறைவா!) கல்வியை நானும் கற்று, பிறருக்கும் அதை நான் கற்பித்தேன். உனக்காகவே குர்ஆனை ஓதினேன் என்று பதிலளிப்பார்.

அதற்கு இறைவன், (இல்லை) நீ பொய் சொல்கிறாய். (எனக்காக நீ கல்வியைக் கற்கவுமில்லை; கற்பிக்கவுமில்லை.) அறிஞர் என்று சொல்லப்பட வேண்டும் என்பதற்காகவே நீ கல்வி கற்றாய்; குர்ஆன் அறிஞர் என (மக்களிடையே) பேசப்படுவதற்காகவே நீ குர்ஆனை ஓதினாய். அவ்வாறு சொல்லப்பட்டுவிட்டது (உனது நோக்கம் நிறைவேறி விட்டது) என்று கூறுவான். பிறகு இறைவனின் கட்டளைப்படி முகம் குப்புற இழுத்துச் செல்லப்பட்டு, அவர் நரகத்தில் எறியப்படுவார்.

பிறகு இறைவன் தாராளமான வாழ்க்கை வசதிகளும் அனைத்து விதமான செல்வங்களும் வழங்கியிருந்த பெரிய செல்வர் ஒருவர் இறைவனிடம் கொண்டுவரப்படுவார். அவருக்குத் தான் வழங்கியிருந்த அருட்கொடைகளை இறைவன் எடுத்துரைப்பான். அவற்றை அவர் அறிந்துகொள்வார். பிறகு, அந்த அருட்கொடைகளில் நீ எவ்விதம் செயல்பட்டாய்? என்று இறைவன் கேட்பான். அதற்கு அவர், நீ எந்தெந்த வழிகளில் எல்லாம் பொருள் செலவழிக்கப்படுவதை விரும்புகிறாயோ, அந்த வழிகளில் எதையும் விட்டுவிடாமல் அனைத்திலும் நான் உனக்காக எனது பொருளைச் செலவிட்டேன் என்று பதிலளிப்பார்.

அதற்கு இறைவன், (இல்லை) நீ பொய் சொல்கிறாய் இவர் ஒரு புரவலர் என (மக்களிடையே) பேசப்படுவதற்காகவே நீ

இவ்வாறு (செலவு) செய்தாய். (உன் எண்ணப்படி) அவ்வாறு சொல்லப்பட்டு விட்டது. (உனது எண்ணம் நிறைவேறிவிட்டது) என்று கூறிவிடுவான். பிறகு இறைவனின் கட்டளைப்படி முகம் குப்புற இழுத்துச் செல்லப்பட்டு, அவர் நரகத்தில் எறியப்படுவார்.[46]

عَنْ جُنْدَبْ رضي الله عنه قَالَ قَالَ النَّبِيُّ ﷺ مَنْ سَمَّعَ سَمَّعَ اللّٰهُ بِهِ وَمَنْ يُرَائِي يُرَائِي اللّٰهُ بِهِ رَوَاهُ الْبُخَارِيُّ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: விளம்பரத்திற்காக நற்செயல் புரிகிறவர் (உடைய நோக்கம்) பற்றி அல்லாஹ் (மறுமை நாளில்) விளம்பரப்படுத்துவான். முகஸ்துதிக்காக நற்செயல் புரிகிறவரை அல்லாஹ் (மறுமை நாளில்) அம்பலப்படுத்துவான்.[47]

----

46. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா رضي الله عنه, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.
47. அறிவிப்பாளர்: ஜுன்துப் رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரீ.

عَادِلٌ فِي حُكْمِهِ

தனது தீர்ப்பில் நீதியைப் பேணுவார்

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿إِنَّ اللّٰهَ يَأْمُرُكُمْ أَنْ تُؤَدُّوا الْأَمَانَاتِ إِلَى أَهْلِهَا وَإِذَا حَكَمْتُمْ بَيْنَ النَّاسِ أَنْ تَحْكُمُوا بِالْعَدْلِ﴾

நம்பிக்கையாளர்களே! உங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட அமானிதப் பொருட்களை அவற்றின் சொந்தக்காரர்களிடம் நீங்கள் ஒப்படைத்து விடும்படியும் மனிதர்களுக்கிடையில் நீங்கள் தீர்ப்புக் கூறினால் பாரபட்சமின்றி நீதியாகவே தீர்ப்பளிக்குமாறும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான். (அல்குர்ஆன் 4 : 58)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُونُوا قَوَّامِينَ لِلّٰهِ شُهَدَاءَ بِالْقِسْطِ وَلَا يَجْرِمَنَّكُمْ شَنَآنُ قَوْمٍ عَلَىٰ أَلَّا تَعْدِلُوا اِعْدِلُوا هُوَ أَقْرَبُ لِلتَّقْوَى وَاتَّقُوا اللّٰهَ إِنَّ اللّٰهَ خَبِيرٌ بِمَا تَعْمَلُونَ﴾

நம்பிக்கையாளர்களே! நீதியை நிலைநாட்டுவதில் அல்லாஹ்

வுக்காக நீங்கள் உறுதியான சாட்சிகளாக இருங்கள். மக்களில் ஒரு சாரார் மீது உங்களுக்குள்ள பகைமை அவர்களுக்கு அக்கிரமம் செய்யும்படி உங்களைத் தூண்டாதிருக்கட்டும். எவ்வளவு பகைமை இருந்தபோதிலும் நீங்கள் நீதியே செலுத்துங்கள். அதுதான் இறையச்சத் தன்மைக்கு மிக நெருங்கியது. எத்தகைய சந்தர்ப்பங்களிலும் நீங்கள் அல்லாஹ்வுக்கே பயப்படுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவனாக இருக்கின்றான்.

(அல்குர்ஆன் 5 : 8)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿وَإِذَا قُلْتُمْ فَاعْدِلُوا وَلَوْ كَانَ ذَا قُرْبَىٰ﴾

நீங்கள் எதைக் கூறியபோதிலும் அதனால் பாதிக்கப்படுவோர் உங்கள் உறவினராயினும் சரியே நீதியையே கூறுங்கள்.

(அல்குர்ஆன் 6 : 152)

عَنْ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا أَنَّ قُرَيْشًا أَهَمَّتْهُمُ الْمَرْأَةُ الْمَخْزُومِيَّةُ الَّتِي سَرَقَتْ فَقَالُوا مَنْ يُكَلِّمُ رَسُولَ اللهِ ﷺ وَمَنْ يَجْتَرِئُ عَلَيْهِ إِلَّا أُسَامَةُ بْنُ زَيْدٍ حِبُّ رَسُولِ اللهِ ﷺ فَكَلَّمَ رَسُولَ اللهِ ﷺ فَقَالَ أَتَشْفَعُ فِي حَدٍّ مِنْ حُدُودِ اللهِ ثُمَّ قَامَ فَخَطَبَ قَالَ يَا أَيُّهَا النَّاسُ إِنَّمَا ضَلَّ مَنْ قَبْلَكُمْ أَنَّهُمْ كَانُوا إِذَا سَرَقَ الشَّرِيفُ تَرَكُوهُ وَإِذَا سَرَقَ الضَّعِيفُ فِيهِمْ أَقَامُوا عَلَيْهِ

الحَدَّ وَايْمُ اللهِ لَوْ أَنَّ فَاطِمَةَ بِنْتَ مُحَمَّدٍ ﷺ سَرَقَتْ لَقَطَعَ مُحَمَّدٌ يَدَهَا رَوَاهُ الْبُخَارِيُّ

நிச்சயமாக திருடிவிட்ட மக்ஸூமிய்யா பெண் குறைஷிகளுக்கு மிகுந்த கவலையை அளித்தாள். மக்கள், அவள் விஷயத்தில் நபி ﷺ அவர்களிடம் (தண்டனையைத் தளர்த்தும்படி) யார் பேசுவார்? ரஸூலுல்லாஹ் ﷺ உடைய நேசர் உஸாமா இப்னு ஸைத் رضي الله عنه அவர்களைத் தவிர நபி ﷺ அவர்களிடம் யார் துணிவார்கள் என்று மக்கள் பேசினர். அவரும் ரஸூலுல்லாஹ்விடம் பேசினார். அதற்கு நபி ﷺ அவர்கள், அல்லாஹ்வின் சட்டங்களில் ஒன்றிலா நீர் பரிந்துரை செய்கின்றீர்? பிறகு, எழுந்து பிரசங்கம் செய்தார்கள். கூறினார்கள்: மக்களே! உங்களுக்கு முன் சென்றோர் வழிகெட்ட தெல்லாம், நிச்சயமாக மதிப்புள்ளவர் திருடிவிட்டால் அவரை (தண்டிக்காமல்) விட்டுவிடுவார்கள்; தங்களில் உள்ள பலவீனர் திருடிவிட்டால் அவர் மீது சட்டத்தை நிலை நிறுத்திவிடுவார்கள். அல்லாஹ்வின் மீது சத்தியமாக, முஹம்மது உடைய மகள் ஃபாத்திமா திருடினாலும் முஹம்மது அவளின் கையை துண்டிப்பார்.[48]

----

48. அறிவிப்பாளர்: ஆயிஷா رضي الله عنها, நூல்: ஸஹீஹுல் புகாரீ.

لَا يَظْلِمُ

அநீதி இழைக்க மாட்டார்

﴿لَا يَنْهَاكُمُ اللَّهُ عَنِ الَّذِينَ لَمْ يُقَاتِلُوكُمْ فِي الدِّينِ وَلَمْ يُخْرِجُوكُمْ مِنْ دِيَارِكُمْ أَنْ تَبَرُّوهُمْ وَتُقْسِطُوا إِلَيْهِمْ إِنَّ اللَّهَ يُحِبُّ الْمُقْسِطِينَ﴾

(நம்பிக்கையாளர்களே!) மார்க்க விஷயத்தில் உங்களுடன் எதிர்த்துப் போர் புரியாதவர்களுக்கும் உங்கள் இல்லத்திலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்வதையும் அவர்களுடன் நீங்கள் நீதியாக நடந்து கொள்வதையும் அல்லாஹ் உங்களுக்குத் தடுக்கவில்லை. நிச்சயமாக அல்லாஹ் நீதியாளர்களை நேசிக்கின்றான்.

(அல்குர்ஆன் 60 : 8)

عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللَّهِ رضي الله عنه أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ اِتَّقُوا الظُّلْمَ فَإِنَّ الظُّلْمَ ظُلُمَاتٌ يَوْمَ الْقِيَامَةِ رَوَاهُ مُسْلِمٌ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: அநீதியிழைப்பதை அஞ்சிக்கொள்ளுங்கள். நிச்சயமாக அநீதி மறுமைநாளின் இருள்களாகும்.[49]

49. அறிவிப்பாளர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் رضي الله عنه, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.

عَنْ أَبِي ذَرٍّ ﵁ عَنِ النَّبِيِّ ﷺ عَنِ اللهِ تَبَارَكَ وَتَعَالَى أَنَّهُ قَالَ يَا عِبَادِي إِنِّي حَرَّمْتُ الظُّلْمَ عَلَى نَفْسِي وَجَعَلْتُهُ بَيْنَكُمْ مُحَرَّمًا فَلَا تَظَالَمُو رَوَاهُ مُسْلِمٌ

அருள் நிறைந்த, உயர்வுமிக்க அல்லாஹ் கூறுவதாக அவனது தூதர் ﷺ கூறினார்கள்: என் அடியார்களே! அநீதியிழைப்பதை நான் என் மீது தடுத்துக்கொண்டேன். அதை உங்களுக்கு மத்தியிலும் தடுக்கப்பட்டதாக ஆக்கியிருக்கின்றேன். எனவே, நீங்கள் உங்களுக்குள் அநீதியிழைத்துக் கொள்ளாதீர்கள்.[50]

عَنْ عَبْدِ اللهِ بْنُ عُمَرَ ﵄ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ اَلْمُسْلِمُ أَخُو الْمُسْلِمِ لَا يَظْلِمُهُ وَلَا يُسْلِمُهُ وَمَنْ كَانَ فِي حَاجَةِ أَخِيهِ كَانَ اللهُ فِي حَاجَتِهِ وَمَنْ فَرَّجَ عَنْ مُسْلِمٍ كُرْبَةً فَرَّجَ اللهُ عَنْهُ كُرْبَةً مِنْ كُرُبَاتِ يَوْمِ الْقِيَامَةِ وَمَنْ سَتَرَ مُسْلِمًا سَتَرَهُ اللهُ يَوْمَ الْقِيَامَةِ رَوَاهُ الْبُخَارِيُّ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: முஸ்லிம் (மற்ற) முஸ்லிமுக்குச் சகோதரராவார். அவருக்கு அநீதியிழைக்க மாட்டார்; (எதிரிகளிடம்) அவரை ஒப்படைக்க மாட்டார்; யார் தம்முடைய சகோதரரின் தேவையில் (-அதை நிறைவேற்றுவதில்) இருப்பாரோ, அவருடைய தேவையில் (-அதை நிறைவேற்றுவதில்) அல்லாஹ் இருப்பான். யார் ஒரு முஸ்லிமை விட்டும் ஒரு துன்பத்தை அகற்றுகிறாரோ

50. அறிவிப்பாளர்: அபூ தர் ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.

அல்லாஹ் மறுமைநாளின் துன்பங்களிலிருந்து ஒரு துன்பத்தை அவரைவிட்டு அகற்றுவான். யார் ஒரு முஸ்லிமை (-அவருடைய குறையை) மறைப்பாரோ அல்லாஹ் மறுமைநாளில் அவரை (அவரது குறையை) மறைப்பான்.[51]

----

51. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் ﷺ, நூல்: ஸஹீஹுல் புகாரீ

يُنْصِفُ مَنْ لَّا يُحِبُّ

விரும்பாதவர்களுடனும் நீதியாக நடந்து கொள்வார்

عَنْ أَبِي الدَّرْدَاءِ ﵁ إِنَّا لَنَكْشِرُ فِي وُجُوهِ أَقْوَامٍ وَإِنَّ قُلُوبَنَا لَتَلْعَنُهُمْ رَوَاهُ الْبُخَارِيُّ

சில மக்களின் முகங்களில் (அவர்களை சந்திக்கும்போது) சிரிப்பை வெளிப்படுத்துகின்றோம். ஆனால், எங்களுடைய உள்ளங்களோ அவர்களைச் சபிக்கின்றன.[52]

عَنْ عَائِشَةَ ﵂ أَنَّهُ اِسْتَأْذَنَ عَلَى النَّبِيِّ ﷺ رَجُلٌ فَقَالَ اِئْذَنُوا لَهُ فَبِئْسَ اِبْنُ الْعَشِيرَةِ أَوْ بِئْسَ أَخُو الْعَشِيرَةِ فَلَمَّا دَخَلَ أَلَانَ لَهُ الْكَلَامَ فَقُلْتُ لَهُ يَا رَسُولَ اللّٰهِ قُلْتَ مَا قُلْتَ ثُمَّ أَلَنْتَ لَهُ فِي الْقَوْلِ فَقَالَ أَيْ عَائِشَةُ إِنَّ شَرَّ النَّاسِ مَنْزِلَةً عِنْدَ اللّٰهِ مَنْ تَرَكَهُ أَوْ وَدَعَهُ النَّاسُ اتِّقَاءَ فُحْشِهِ رَوَاهُ الْبُخَارِيُّ

---

52. அறிவிப்பாளர்: அபுத் தர்தா ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரீ.

ஒருவர் நபி ﷺ அவர்களிடம் (உள்ளே வருவதற்கு) அனுமதி கேட்டார். நபி ﷺ அவர்கள், அவருக்கு அனுமதி கொடுங்கள்; அவர் குடும்பத்தில் கெட்ட ஆண் மகன் ஆவார். அல்லது குடும்பத்தில் கெட்ட சகோதரர் ஆவார் என்று கூறினார்கள். அவர் உள்ளே நுழைந்தவுடன், அவரிடம் நபி ﷺ அவர்கள் மென்மையாகப் பேசினார்கள். நான், நபி ﷺ அவர்கள் அவரிடம், யா ரஸூலல்லாஹ்! நீங்கள் கூறுவதை கூறிவிட்டுப் பிறகு அவருடன் மென்மையாகப் பேசினீர்களே என்று கூறினேன். அதற்கு நபி ﷺ கூறினார்கள்: ஆயிஷாவே! எவருடைய அசிங்கமான குணத்தை பயந்து மக்கள் அவரை விட்டுவிடுகிறார்களோ அவர்தான் தகுதியால் அல்லாஹ்விடம் மனிதர்களில் மிகக் கெட்டவர்.[53]

عَنْ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا أَنَّهَا قَالَتْ فِي زَيْنَبَ بِنْتِ جَحْشٍ وَهِيَ الَّتِي كَانَتْ تُسَامِينِي مِنْهُنَّ فِي الْمَنْزِلَةِ عِنْدَ رَسُولِ اللهِ ﷺ وَلَمْ أَرَ امْرَأَةً قَطُّ خَيْرًا فِي الدِّينِ مِنْ زَيْنَبَ وَأَتْقَى لِلّٰهِ وَأَصْدَقَ حَدِيثًا وَأَوْصَلَ لِلرَّحِمِ وَأَعْظَمَ صَدَقَةً وَأَشَدَّ ابْتِذَالًا لِنَفْسِهَا فِي الْعَمَلِ الَّذِي تَصَدَّقُ بِهِ وَتَقَرَّبُ بِهِ إِلَى اللهِ تَعَالَى مَا عَدَا سَوْرَةً مِنْ حِدَّةٍ كَانَتْ فِيهَا تُسْرِعُ مِنْهَا الْفَيْئَةَ رَوَاهُ مُسْلِمٌ

ஆயிஷா رضي الله عنها அவர்கள், ஜைனப் பின்த் ஜஹ்ஷ் رضي الله عنها அவர்களைக் குறித்து கூறினார்கள்: ஜைனப் رضي الله عنها தான் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களிடம் தகுதியில் எனக்குச் சமமானவராக இருந்தார்.

53. அறிவிப்பாளர்: ஆயிஷா رضي الله عنها, நூல்: ஸஹீஹுல் புகாரீ.

ஜைனபைவிட மார்க்கத்தில் சிறந்த, அல்லாஹ்விற்கு அதிகம் அஞ்சுகின்ற, அதிகம் உண்மை பேசுகின்ற, உறவுகளை அதிகம் சேர்த்து வாழ்கின்ற, அதிகம் தர்மம் செய்கின்ற, இன்னும் அல்லாஹ்விடம் நெருக்கம் தேடுகின்ற செயலில் தன்னை மிகவும் தாழ்த்திக் கொள்கின்ற ஒரு பெண்ணை நான் பார்க்கவில்லை. ஆம், அவருக்கு கோபம் விரைவாக வரும். ஆனால், உடனடியாக அதைவிட்டு விலகிவிடுவார்.[54]

وَكَانَ رَسُولُ اللهِ ﷺ يَسْأَلُ زَيْنَبَ بِنْتَ جَحْشٍ عَنْ أَمْرِي فَقَالَ يَا زَيْنَبُ مَا عَلِمْتِ مَا رَأَيْتِ فَقَالَتْ يَا رَسُولَ اللهِ أَحْمِي سَمْعِي وَبَصَرِي وَاللهِ مَا عَلِمْتُ عَلَيْهَا إِلَّا خَيْرًا قَالَتْ وَهِيَ الَّتِي كَانَتْ تُسَامِينِي فَعَصَمَهَا اللهُ بِالْوَرَعِ رَوَاهُ الْبُخَارِيُّ

ரஸூலுல்லாஹ் ﷺ என் விஷயத்தைப் பற்றி ஜைனப் رضي الله عنها அவர்களிடம் விசாரித்து வந்தார்கள். ஜைனபே! உனக்கு என்ன தெரியும்? நீ என்ன கருதுகிறாய்? என்று கூறினார்கள். அதற்கு ஜைனப் رضي الله عنها கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதரே! நான் என் செவியையும் என் பார்வையையும் காத்துக் கொள்கிறேன். அவர் குறித்து நன்மையைத் தவிர வேறு எதையும் நான் அறியவில்லை.

பிறகு அன்னை ஆயிஷா رضي الله عنها கூறுகிறார்கள்: ஜைனப்தான் எனக்குச் சமமானவராக இருந்தார். அல்லாஹ் அவரை ஒழுக்கத்தால் பாதுகாத்தான்.[55]

----

54. அறிவிப்பாளர்: ஆயிஷா رضي الله عنها, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.
55. அறிவிப்பாளர்: ஆயிஷா رضي الله عنها, நூல்: ஸஹீஹுல் புகாரீ.

يَجْتَنِبُ ظَنَّ السُّوْءِ

தீய எண்ணங்களைத் தவிர்ப்பார்

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اجْتَنِبُوا كَثِيرًا مِنَ الظَّنِّ
إِنَّ بَعْضَ الظَّنِّ إِثْمٌ﴾

நம்பிக்கையாளர்களே! பெரும்பாலான சந்தேகங்களைவிட்டு நீங்கள் விலகிக்கொள்ளுங்கள். ஏனென்றால், நிச்சயமாக சந்தேகங்களில் சில பாவமானவையே!(அல்குர்ஆன் 49 : 12)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿وَلَا تَقْفُ مَا لَيْسَ لَكَ بِهِ عِلْمٌ إِنَّ السَّمْعَ وَالْبَصَرَ
وَالْفُؤَادَ كُلُّ أُولَئِكَ كَانَ عَنْهُ مَسْئُولًا﴾

நபியே! நீர் அறியாத யாதொரு விஷயத்தையும் நீர் பின் தொடராதீர்! ஏனென்றால், நிச்சயமாக கண், காது, உள்ளம் ஆகிய இவை ஒவ்வொன்றுமே அவற்றின் செயலைப் பற்றி மறுமையில் கேள்வி கேட்கப்படும். (அல்குர்ஆன் 17 : 36)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿مَا يَلْفِظُ مِنْ قَوْلٍ إِلَّا لَدَيْهِ رَقِيبٌ عَتِيدٌ﴾

மனிதன் எதைக் கூறியபோதிலும் அதனை எழுதக் காத்துக் கொண்டிருக்கின்ற ஒருவர் அவனிடம் இல்லாமலில்லை. அவன் வாயிலிருந்து புறப்படுகின்ற ஒவ்வொரு வார்த்தையும் உடனுக்குடன் பதியப்படுகின்றது. (அல்குர்ஆன் 50 : 18)

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ إِيَّاكُمْ وَالظَّنَّ فَإِنَّ الظَّنَّ أَكْذَبُ الْحَدِيثِ رَوَاهُ الْبُخَارِيُّ

நபி ﷺ கூறினார்கள்: உங்களை நான் எச்சரிக்கிறேன்! நீங்கள் சந்தேகங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில், சந்தேகமான பேச்சு, பேச்சுகளில் மிகப் பொய்யானதாகும்.[56]

عَنْ بِلَالِ بْنِ الْحَارِثِ الْمُزَنِيِّ ﷺ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ إِنَّ الرَّجُلَ لَيَتَكَلَّمُ بِالْكَلِمَةِ مِنْ رِضْوَانِ اللهِ مَا كَانَ يَظُنُّ أَنْ تَبْلُغَ مَا بَلَغَتْ يَكْتُبُ اللهُ لَهُ بِهَا رِضْوَانَهُ إِلَى يَوْمِ يَلْقَاهُ وَإِنَّ الرَّجُلَ لَيَتَكَلَّمُ بِالْكَلِمَةِ مِنْ سَخَطِ اللهِ مَا كَانَ يَظُنُّ أَنْ تَبْلُغَ مَا بَلَغَتْ يَكْتُبُ اللهُ لَهُ بِهَا سَخَطَهُ إِلَى يَوْمِ يَلْقَاهُ رَوَاهُ مَالِكٌ فِي الْمُوَطَّا

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: நிச்சயமாக மனிதன் அல்லாஹ்வின் திருப்திக்கு உட்பட்ட வார்த்தைகளைப் பேசுகிறான். அந்த வார்த்தை எத்தகைய நிலையை அடைந்தது

56. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﷺ, நூல்: ஸஹீஹுல் புகாரீ.

என்பதை அவர் அறியமாட்டார். அல்லாஹ் அவருக்கு அ(ந்)த (வார்த்தையி)னால், அவர் அவனை சந்திக்கின்ற நாள் வரை தனது திருப்தியை முடிவு செய்து விடுகிறான். மேலும், நிச்சயமாக மனிதன் அல்லாஹ்வின் கோபத்திற்கு உட்பட்ட வார்த்தைகளைப் பேசுகிறான். அந்த வார்த்தை எத்தகைய நிலையை அடைந்தது என்பதை அவர் அறிய மாட்டார். அ(ந்)த (வார்த்தையி)னால், அல்லாஹ்வை அவர் சந்திக்கின்ற நாள் வரை அவருக்குத் தனது கோபத்தை அல்லாஹ் முடிவு செய்துவிடுகிறான்.[57]

عَنْ حَفْصِ بْنِ عَاصِمٍ ﵁ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ كَفٰى بِالْمَرْءِ كَذِبًا أَنْ يُحَدِّثَ بِكُلِّ مَا سَمِعَ رَوَاهُ مُسْلِمٌ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: ஒரு மனிதன் பொய்யன் என்பதற்கு அவன் (பிறரிடம்) கேட்டதையெல்லாம் (மற்றவர்களிடம்) கூறுவதே போதுமானதாகும்.[58]

----

57. அறிவிப்பாளர்: பிலால் இப்னு அல் ஹாரிஸ் அல்முஸனி ﵁, நூல்: அல்முஅத்தா, - ஸஹீஹ்

58. அறிவிப்பாளர்: ஹஃப்ஸ் இப்னு ஆஸிம் ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.

يُمْسِكُ لِسَانَهُ عَنِ الْغِيْبَةِ وَالنَّمِيْمَةِ

புறம் பேசுவதிலிருந்தும், கோள் சொல்வதிலிருந்தும் தனது நாவை தடுத்துக் கொள்வார்

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿وَلَا يَغْتَبْ بَعْضُكُمْ بَعْضًا أَيُحِبُّ أَحَدُكُمْ أَنْ يَأْكُلَ لَحْمَ أَخِيهِ مَيْتًا فَكَرِهْتُمُوهُ وَاتَّقُوا اللَّهَ إِنَّ اللَّهَ تَوَّابٌ رَحِيمٌ﴾

உங்களில் ஒருவர் மற்றெவரையும் புறம் பேசவேண்டாம். உங்களில் எவனும் தன்னுடைய இறந்த சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவானா? அதனை நீங்கள் வெறுப்பீர்களே! புறம் பேசுவதும் அவ்வாறே, ஆகவே, இவ்விஷயங்களில் அல்லாஹ்வுக்குப் பயந்துகொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பாவத்திலிருந்து விலகுவோரை அங்கீகரிப்போனாகவும் கருணை புரிவோனாகவும் இருக்கின்றான். (அல்குர்ஆன் 49 : 12)

عَنْ عَبْدِ اللّٰهِ بْنِ عَمْرٍو رضي الله عنهما عَنِ النَّبِيِّ ﷺ قَالَ الْمُسْلِمُ مَنْ سَلِمَ الْمُسْلِمُونَ مِنْ لِسَانِهِ وَيَدِهِ رَوَاهُ الْبُخَارِيُّ

நபி ﷺ கூறினார்கள்: யார் ஒருவர் அவருடைய நாவிலிருந்தும் கையிலிருந்தும் முஸ்லிம்கள் பாதுகாப்பாக இருக்கிறார்களோ அவரே முஸ்லிம் ஆவார்.[59]

عَنْ عَائِشَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا قَالَتْ قُلْتُ لِلنَّبِيِّ ﷺ حَسْبُكَ مِنْ صَفِيَّةَ كَذَا وَكَذَا تَعْنِي قَصِيرَةً فَقَالَ لَقَدْ قُلْتِ كَلِمَةً لَوْ مُزِجَتْ بِمَاءِ الْبَحْرِ لَمَزَجَتْهُ رَوَاهُ أَبُو دَاوُدَ

ஆயிஷா رَضِيَ اللَّهُ عَنْهَا கூறுகிறார்கள்: இப்படி இப்படி உங்களுக்கு ஸஃபிய்யாவே போதும் என்று நபி ﷺ அவர்களிடம் நான் கூறினேன். (அதாவது,) ஸஃபிய்யா குட்டையாக இருப்பதை ஆயிஷா رَضِيَ اللَّهُ عَنْهَا இப்படி குறிப்பிட்டார்கள். அதற்கு, நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: நீ ஒரு வார்த்தையை கூறினாய். அதை கடல் நீரில் கலக்கப்பட்டால் அதை கலக்கியிருக்கும்.[60]

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ أَنَّ رَسُولَ اللَّهِ ﷺ قَالَ اِجْتَنِبُوا السَّبْعَ الْمُوبِقَاتِ قِيلَ يَا رَسُولَ اللَّهِ وَمَا هُنَّ قَالَ اَلشِّرْكُ بِاللَّهِ وَالسِّحْرُ وَقَتْلُ النَّفْسِ الَّتِي حَرَّمَ اللَّهُ إِلَّا بِالْحَقِّ وَأَكْلُ مَالِ الْيَتِيمِ وَأَكْلُ الرِّبَا وَالتَّوَلِّي يَوْمَ الزَّحْفِ وَقَذْفُ الْمُحْصِنَاتِ الْغَافِلَاتِ الْمُؤْمِنَاتِ رَوَاهُ مُسْلِمٌ

நிச்சயமாக ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: பேரழிவை

59. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் رَضِيَ اللَّهُ عَنْهُ, நூல்: ஸஹீஹுல் புகாரீ.
60. அறிவிப்பாளர்: ஆயிஷா رَضِيَ اللَّهُ عَنْهَا, நூல்: சுனன் அபூதாவூது, - ஸஹீஹ்

ஏற்படுத்துகின்ற ஏழு பாவங்களைவிட்டு விலகிக் கொள்ளுங்கள். யா ரஸூலுல்லாஹ்! அவை என்ன? என்று கேட்கப்பட்டது. ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: அல்லாஹ்விற்கு இணை வைத்தல், சூனியம் செய்தல், அல்லாஹ் கண்ணியப்படுத்திய உயிரை உரிமையின்றிக் கொலை செய்தல், அநாதையின் சொத்தைச் சாப்பிடுதல், வட்டி வாங்கிச் சாப்பிடுதல், போரில் புறமுதுகு காட்டி ஓடுதல், ஒழுக்கமுள்ள அப்பாவியான இறைநம்பிக்கையுடைய பெண்கள் மீது அவதூறு கூறுதல்.[61]

عَنْ عَبْدِ الرَّحْمَنِ بْنِ غَنْمٍ ﵁ يَبْلُغُ بِهِ النَّبِيَّ ﷺ خِيَارُ عِبَادِ اللهِ الَّذِينَ إِذَا رُءُوا ذُكِرَ اللهُ وَشِرَارُ عِبَادِ اللهِ الْمَشَّاءُونَ بِالنَّمِيمَةِ الْمُفَرِّقُونَ بَيْنَ الْأَحِبَّةِ الْبَاغُونَ الْبُرَآءَ الْعَنَتَ رَوَاهُ أَحْمَدُ

நபி ﷺ கூறினார்கள்: அல்லாஹ்வின் அடியார்களில் சிறந்தவர்கள் யாரென்றால், அவர்களைப் பார்த்தால் அல்லாஹ் நினைவு கூறப்படுவான். அல்லாஹ்வின் அடியார்களில் தீயவர்கள் யாரென்றால், கோள்சொல்பவர்கள், நேசர்களுக்கிடையே பிரிவினையை ஏற்படுத்துபவர்கள், நிரபராதிகளிடம் குறைகளைத் தேடித் திரிபவர்கள் (-பத்தினிகள் மீது விபச்சார குற்றம் சுமத்துபவர்கள்).[62]

عَنْ حُذَيْفَةَ ﵁ قَالَ سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ لَا يَدْخُلُ الْجَنَّةَ نَمَّامٌ رَوَاهُ مُسْلِمٌ

61. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்
62. அறிவிப்பாளர்: அப்துர்ரஹ்மான் இப்னு கன்ம் ﵁. நூல்: முஸ்னது அஹ்மது. - ஹஸன்

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: கோள் சொல்பவன் சொர்க்கம் நுழைய மாட்டான்.[63]

عَنْ ابْنِ عَبَّاسٍ رضي الله عنه قَالَ مَرَّ رَسُولُ اللهِ ﷺ عَلٰى قَبْرَيْنِ فَقَالَ إِنَّهُمَا يُعَذَّبَانِ وَمَا يُعَذَّبَانِ فِي كَبِيرٍ أَمَّا هٰذَا فَكَانَ لَا يَسْتَنْزِهُ مِنَ الْبَوْلِ وَأَمَّا هٰذَا فَكَانَ يَمْشِي بِالنَّمِيمَةِ ثُمَّ دَعَا بِعَسِيبٍ رَطْبٍ فَشَقَّهُ بِاثْنَيْنِ ثُمَّ غَرَسَ عَلَى هٰذَا وَاحِدًا وَعَلَى هٰذَا وَاحِدًا وَقَالَ لَعَلَّهُ يُخَفَّفُ عَنْهُمَا مَا لَمْ يَيْبَسَا رَوَاهُ الْبُخَارِيُّ

ரஸூலுல்லாஹ் ﷺ இரண்டு கப்ருகளை கடந்து சென்றார்கள். (அப்போது) கூறினார்கள்: நிச்சயமாக இந்த இருவரும் வேதனை செய்யப்படுகிறார்கள். இவர்கள் வேதனை செய்யப்படுவது (வெளித்தோற்றத்தில்) பெரிய பாவத்தில் இல்லை. இவர், சிறுநீர் கழித்தபின் தூய்மை செய்ய மாட்டார். இவர் கோள் சொல்லித் திரிவார். பிறகு, ரஸூலுல்லாஹ் ﷺ ஈரமான மரக்கிளை ஒன்றைக் கொண்டு வரச்செய்து, அதை இரண்டாகப் பிளந்து இதில் ஒன்றையும் இதில் ஒன்றையும் நட்டார்கள். மேலும், கூறினார்கள்: இந்த மரக்குச்சிகள் காயாதிருக்கும்வரை அவர்களுக்கு வேதனை இலகுவாக்கப்படலாம்.[64]

----

63. அறிவிப்பாளர்: ஹுதைஃபா رضي الله عنه, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்

64. அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரீ.

يَجْتَنِبُ السِّبَابَ وَالْكَلَامَ الْبَذِيءَ

திட்டுவதையும் தீயவார்த்தைகளையும் தவிர்த்துக் கொள்வார்

عَنْ عَبْدِ اللّٰهِ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللّٰهِ ﷺ سِبَابُ الْمُسْلِمِ فُسُوقٌ وَقِتَالُهُ كُفْرٌ رَوَاهُ الْبُخَارِيُّ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: முஸ்லிமைத் திட்டுவது பாவமாகும். அவருடன் போர் செய்வது 'குஃப்ர்' -இறை நிராகரிப்பாகும்.[65]

عَنْ أُسَامَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ سَمِعْتُ رَسُولَ اللّٰهِ ﷺ يَقُولُ إِنَّ اللّٰهَ لَا يُحِبُّ كُلَّ فَاحِشٍ مُتَفَحِّشٍ رَوَاهُ أَحْمَدُ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறியதை நான் செவியுற்றேன்: நிச்சயமாக அசிங்கமான செயல்களைச் செய்பவரையும் அசிங்கமான சொற்களைப் பேசுபவரையும் அல்லாஹ் நேசிக்க மாட்டான்.[66]

عَنْ أَبِي الدَّرْدَاءِ أَنَّ النَّبِيَّ ﷺ قَالَ مَا شَيْءٌ أَثْقَلُ فِي مِيزَانِ

---

65. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் رَضِيَ اللَّهُ عَنْهُ, நூல்: ஸஹீஹுல் புகாரீ.

66. அறிவிப்பாளர்: உஸாமா رَضِيَ اللَّهُ عَنْهُ, நூல்: முஸ்னது அஹ்மது, - ஹஸன்.

الْمُؤْمِنِ يَوْمَ الْقِيَامَةِ مِنْ خُلُقٍ حَسَنٍ وَإِنَّ اللهَ لَيُبْغِضُ الْفَاحِشَ الْبَذِيءَ رَوَاهُ التِّرْمِذِيُّ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: மறுமையில் முஃமினுடைய தராசில் நற்குணத்தைவிட அதிக கனமான ஒன்று வேறு எதுவும் இருக்காது. நிச்சயமாக அல்லாஹ் அருவருக்கத்தக்க பேச்சுகளை பேசுபவனையும் ஆபாசமான செயல்களை செய்பவரையும் கோபிக்கிறான்.[67]

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رضي الله عنه قَالَ لَمْ يَكُنْ النَّبِيُّ ﷺ سَبَّابًا وَلَا فَحَّاشًا وَلَا لَعَّانًا كَانَ يَقُولُ لِأَحَدِنَا عِنْدَ الْمَعْتِبَةِ مَا لَهُ تَرِبَ جَبِينُهُ رَوَاهُ الْبُخَارِيُّ

நபி ﷺ அவர்கள், ஏசக்கூடியவராக ஆபாசமாக பேசுபவராக, சபிப்பவராக, இருக்கவில்லை. கண்டிக்க வேண்டிய நேரத்தில் எங்களில் ஒருவரை நோக்கி, அவருக்கென்ன நேர்ந்தது. அவரின் நெற்றி மண்ணாகட்டும்[68] என்று கூறுபவர்களாக இருந்தார்கள்.[69]

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه قَالَ قِيلَ يَا رَسُولَ اللهِ ادْعُ عَلَى الْمُشْرِكِينَ قَالَ إِنِّي لَمْ أُبْعَثْ لَعَّانًا وَإِنَّمَا بُعِثْتُ رَحْمَةً رَوَاهُ مُسْلِمٌ

---

67. அறிவிப்பாளர்: அபுத் தர்தா رضي الله عنه, நூல்: திர்மிதி, - ஸஹீஹ்.
68. கோபத்தின்போது அரபியர்களிடம் சொல்லப்படும் ஒரு வார்த்தை. இதனுடைய பொருள் நோக்கமல்ல.
69. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரீ.

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களிடம் அல்லாஹ்வின் தூதரே! இணைவைப்பாளர்களுக்கு எதிராக (அல்லாஹ்விடம்) பிரார்த்தனை செய்யுங்கள் என்று கூறப்பட்டது. அதற்கு ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: நிச்சயமாக நான் சாபம் கொடுப்பவனாக அனுப்பப்படவில்லை; நான் அருட்கொடையாகவே அனுப்பப்பட்டுள்ளேன்.[70]

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ أَتَدْرُونَ مَا الْمُفْلِسُ قَالُوا الْمُفْلِسُ فِينَا مَنْ لَا دِرْهَمَ لَهُ وَلَا مَتَاعَ فَقَالَ إِنَّ الْمُفْلِسَ مِنْ أُمَّتِي يَأْتِي يَوْمَ الْقِيَامَةِ بِصَلَاةٍ وَصِيَامٍ وَزَكَاةٍ وَيَأْتِي قَدْ شَتَمَ هٰذَا وَقَذَفَ هٰذَا وَأَكَلَ مَالَ هٰذَا وَسَفَكَ دَمَ هٰذَا وَضَرَبَ هٰذَا فَيُعْطَى هٰذَا مِنْ حَسَنَاتِهِ وَهٰذَا مِنْ حَسَنَاتِهِ فَإِنْ فَنِيَتْ حَسَنَاتُهُ قَبْلَ أَنْ يُقْضٰى مَا عَلَيْهِ أُخِذَ مِنْ خَطَايَاهُمْ فَطُرِحَتْ عَلَيْهِ ثُمَّ طُرِحَ فِي النَّارِ رَوَاهُ مُسْلِمٌ

அபூ ஹுரைரா رضي الله عنه அறிவிக்கிறார்கள், ரஸூலுல்லாஹ் ﷺ வினவினார்கள்: பரம ஏழை யாரென்பதை நீங்கள் அறிவீர்களா? அதற்கு நபித்தோழர்கள் கூறினார்கள், எங்களில் எவரிடம் ஒரு திர்ஹம்கூட இல்லையோ, இன்னும் எந்தப் பொருளும் இல்லையோ அவர்தான் பரம ஏழை. ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: நிச்சயமாக எனது சமுதாயத்தில் பரம ஏழை யாரெனில், அவர் மறுமைநாளில் தொழுகை, நோன்பு, ஸகாத்தைக் கொண்டு வருவார். இன்னும்

70. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா رضي الله عنه, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்

(அதே சமயத்தில்) இவரைத் திட்டியவராக, இவரை அவதூறு பேசியவராக, இவருடைய பொருளை அபகரித்தவராக, இவருடைய இரத்தத்தை ஓட்டியவராக, இவரை அடித்தவராக வருவார். அவருடைய நன்மைகளில் இருந்து இவருக்கு வழங்கப்படும். இன்னும் அவருடைய நன்மைகளில் இருந்து இவருக்கு வழங்கப்படும். இவ்வாறாக அவர் மீதுள்ள குற்றங்கள் முடிவதற்கு முன்னால் அவரின் நன்மைகள் தீர்ந்துவிட்டால் (பாதிக்கப்பட்ட) அவர்களுடைய பாவங்களை எடுத்து அவர்மீது சுமத்தப்படும். பிறகு, அவர் நரகத்தில் எறியப்படுவார்.[71]

----

71. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﷺ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்

لَا يَسْخَرُ مِنْ أَحَدٍ

யாரையும் ஏளனம் செய்யமாட்டார்

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا يَسْخَرْ قَوْمٌ مِنْ قَوْمٍ عَسَىٰ أَنْ يَكُونُوا خَيْرًا مِنْهُمْ وَلَا نِسَاءٌ مِنْ نِسَاءٍ عَسَىٰ أَنْ يَكُنَّ خَيْرًا مِنْهُنَّ وَلَا تَلْمِزُوا أَنْفُسَكُمْ وَلَا تَنَابَزُوا بِالْأَلْقَابِ بِئْسَ الِاسْمُ الْفُسُوقُ بَعْدَ الْإِيمَانِ وَمَنْ لَمْ يَتُبْ فَأُولَٰئِكَ هُمُ الظَّالِمُونَ﴾

நம்பிக்கையாளர்களே! எந்த ஆண்களும் மற்றெந்த ஆண்களையும் ஏளனம் செய்ய வேண்டாம். அவர்கள் அல்லாஹ்விடத்தில் ஏளனம் செய்கின்ற இவர்களைவிட மேலானவர்களாக இருக்கலாம். அவ்வாறே எந்தப் பெண்களும் மற்ற எந்தப் பெண்களையும் ஏளனம் செய்ய வேண்டாம். அவர்கள் ஏளனம் செய்கின்ற இவர்களைவிட மேலானவர்களாக இருக்கலாம். உங்களில் ஒருவர் மற்றொருவரை இழிவாகக் கருதி குறைகூற வேண்டாம். உங்களில் ஒருவர் மற்றவருக்கு தீய பட்டப் பெயர் சூட்ட வேண்டாம். நம்பிக்கை கொண்டதன் பின்னர் கெட்ட பெயர் சூட்டுவது மகா கெட்ட பாவமானதாகும். எவர்கள் இவற்றிலிருந்து விலகிக்கொள்ளவில்லையோ

அவர்கள்தாம் வரம்பு மீறிய அக்கிரமக்காரர்கள்.

(அல்குர்ஆன் 49 : 11)

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ قَالَ قَالَ رَسُولُ اللّٰهِ ﷺ بِحَسْبِ امْرِئٍ مِنَ الشَّرِّ أَنْ يَحْقِرَ أَخَاهُ الْمُسْلِمَ رَوَاهُ مُسْلِمٌ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: ஒரு மனிதனின் தீமைக்கு அவன் தனது முஸ்லிமான சகோதரனை இழிவாகக் கருதுவதே போதுமானதாகும்.[72]

----

72. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்

رَفِيْقٌ بِالنَّاسِ

மனிதர்களிடம் மென்மையாக நடந்துகொள்வார்

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿وَلَا تَسْتَوِي الْحَسَنَةُ وَلَا السَّيِّئَةُ اِدْفَعْ بِالَّتِي هِيَ أَحْسَنُ فَإِذَا الَّذِي بَيْنَكَ وَبَيْنَهُ عَدَاوَةٌ كَأَنَّهُ وَلِيٌّ حَمِيمٌ ○ وَمَا يُلَقَّاهَا إِلَّا الَّذِينَ صَبَرُوا وَمَا يُلَقَّاهَا إِلَّا ذُو حَظٍّ عَظِيمٍ﴾

நன்மையும் தீமையும் சமமாகி விடாது. ஆதலால் தீமையை நீர் நன்மையைக்கொண்டே தடுத்துக்கொள்ளும். அவ்வாறாயின் உம்முடைய கொடிய எதிரியை அதே சமயத்தில் உம்முடைய மெய்யான, மிக்க நெருங்கிய நண்பனைப்போல் காண்பீர். பொறுமையுடையோரைத் தவிர மற்றெவரும் இதனை அடைய மாட்டார்கள். அன்றி, பெரும்பாக்கியம் உடையவர்களைத் தவிர மற்றெவரும் இதனை அடைய மாட்டார்கள்.

(அல்குர்ஆன் 41 : 34,35)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿وَلَوْ كُنْتَ فَظًّا غَلِيظَ الْقَلْبِ لَانْفَضُّوا مِنْ حَوْلِكَ﴾

நபியே! கடுகடுப்பானவராகவும் கடின உள்ளம் கொண்டவராகவும் நீர் இருந்திருப்பீரானால் உம்மிடமிருந்து அவர்கள் வெருண்டோடியிருப்பார்கள். (அல்குர்ஆன் 3 : 159)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿اِذْهَبَا إِلَى فِرْعَوْنَ إِنَّهُ طَغى ۝
فَقُولَا لَهُ قَوْلًا لَيِّنًا لَعَلَّهُ يَتَذَكَّرُ أَوْ يَخْشَى﴾

நீங்கள் இருவரும் ஃபிர்அவ்னிடம் செல்லுங்கள். நிச்சயமாக அவன் மிக்க வரம்பு கடந்துவிட்டான். நீங்கள் அவனுக்கு நளினமாகவே அறிவுரை கூறுங்கள். அவன் பயந்து நல்லுணர்ச்சி பெறலாம். (அல்குர்ஆன் 20 : 43,44)

عَنْ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا قَالَتْ قَالَ رَسُوْلُ اللهِ ﷺ إِنَّ اللهَ رَفِيقٌ يُحِبُّ الرِّفْقَ فِي الْأَمْرِ كُلِّهِ رَوَاهُ الْبُخَارِيُّ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: அல்லாஹ் மென்மையானவன். அனைத்து விஷயங்களிலும் மென்மையையே அவன் விரும்புகிறான்.[73]

عَنْ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا زَوْجِ النَّبِيِّ ﷺ قَالَتْ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ إِنَّ الرِّفْقَ لَا يَكُونُ فِي شَيْءٍ إِلَّا زَانَهُ وَلَا يُنْزَعُ مِنْ شَيْءٍ إِلَّا شَانَهُ رَوَاهُ مُسْلِمٌ

73. அறிவிப்பாளர்: ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا, நூல்: ஸஹீஹுல் புகாரீ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: நிச்சயமாக மென்மை ஒரு விஷயத்தில் இருக்காது, அது அதை அலங்கரித்தே தவிர. அது ஒரு விஷயத்தில் இருந்து நீக்கப்படாது அது அதை அசிங்கப்படுத்தியே தவிர.[74]

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه قَالَ قَامَ أَعْرَابِيٌّ فَبَالَ فِي الْمَسْجِدِ فَتَنَاوَلَهُ النَّاسُ فَقَالَ لَهُمْ النَّبِيُّ ﷺ دَعُوهُ وَهَرِيقُوا عَلَى بَوْلِهِ سَجْلًا مِنْ مَاءٍ أَوْ ذَنُوبًا مِنْ مَاءٍ فَإِنَّمَا بُعِثْتُمْ مُيَسِّرِينَ وَلَمْ تُبْعَثُوا مُعَسِّرِينَ رَوَاهُ الْبُخَارِيُّ

(பள்ளிக்குள் வந்த) ஒரு கிராமவாசி நின்று பள்ளிவாசலில் சிறுநீர் கழித்தார். மக்கள் அவரை பிடிக்கச் சென்றனர். அப்போது அவர்களுக்கு நபி ﷺ கூறினார்கள்: அவரை விட்டு விடுங்கள்! அவருடைய சிறுநீர் மீது ஒரு வாளித் தண்ணீரை ஊற்றி விடுங்கள். நீங்கள் இலகுவாக்கக்கூடியவர்களாக அனுப்பப்பட்டீர்கள். சிரமப்படுத்துபவர்களாக நீங்கள் அனுப்பப்படவில்லை என்று கூறினார்கள்.[75]

عَنْ أَبِي مُوسَى رضي الله عنه قَالَ كَانَ رَسُولُ اللهِ ﷺ قَالَ بَشِّرُوا وَلَا تُنَفِّرُوا وَيَسِّرُوا وَلَا تُعَسِّرُوا رَوَاهُ الْبُخَارِيُّ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: நற்செய்தி கூறுங்கள்! வெறுப்படையச் செய்யாதீர்கள், எளிதாக்குங்கள், சிரமப்படுத்தாதீர்கள்.[76]

74. அறிவிப்பாளர்: ஆயிஷா رضي الله عنها, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்
75. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரீ
76. அறிவிப்பாளர்: அபூ மூஸா رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரீ

عَنْ جَرِيرٍ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ مَنْ يُحْرَمِ الرِّفْقَ يُحْرَمِ الْخَيْرَ رَوَاهُ مُسْلِمٌ

நபி ﷺ கூறினார்கள்: யார் மென்மையை இழப்பாரோ அவர் நன்மையை இழந்துவிடுவார்.[77]

عَنْ عَائِشَةَ ﷺ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ لَهَا يَا عَائِشَةُ ارْفُقِي فَإِنَّ اللّٰهَ إِذَا أَرَادَ بِأَهْلِ بَيْتٍ خَيْرًا دَلَّهُمْ عَلَى بَابِ الرِّفْقِ رَوَاهُ أَحْمَدُ

ரஸூலுல்லாஹ் ﷺ என்னிடம் கூறினார்கள்: ஆயிஷாவே! மென்மையாக நடந்துகொள்! நிச்சயமாக, அல்லாஹ் ஒரு குடும்பத்தினருக்கு நன்மையை நாடினால் அவர்களுக்கு மென்மையின் வாசலுக்கு வழிகாட்டுவான்.[78]

عَنْ عَائِشَةَ ﷺ أَنَّهَا قَالَتْ قَالَ رَسُولُ اللهِ ﷺ إِذَا أَرَادَ اللّٰهُ عَزَّ وَجَلَّ بِأَهْلِ بَيْتٍ خَيْرًا أَدْخَلَ عَلَيْهِمُ الرِّفْقَ رَوَاهُ أَحْمَدُ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: ஒரு குடும்பத்தினருக்கு கண்ணியமும் கம்பீரமும் மிக்க அல்லாஹ் நன்மையை நாடினால் அவர்களிடம் மென்மையைப் புகுத்தி விடுகின்றான்.[79]

عَنْ عَبْدِ اللهِ بْنِ مَسْعُودٍ ﷺ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ أَلَا أُخْبِرُكُمْ بِمَنْ يَحْرُمُ عَلَى النَّارِ أَوْ بِمَنْ تَحْرُمُ عَلَيْهِ النَّارُ عَلَى كُلِّ قَرِيبٍ هَيِّنٍ سَهْلٍ رَوَاهُ التِّرْمِذِيُّ

---

77. அறிவிப்பாளர்: ஜரீர் ﷺ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம், - ஸஹீஹ்.
78. அறிவிப்பாளர்: ஆயிஷா ﷺ, நூல்: முஸ்னது அஹ்மது, - ஸஹீஹ்.
79. அறிவிப்பாளர்: ஆயிஷா ﷺ, நூல்: முஸ்னது அஹ்மது, - ஸஹீஹ்.

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: நரகத்தின் மீது தடையாகின்ற அல்லது நரகம் யார் மீது தடையாகுமோ அவரைப் பற்றி நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? (அவர் யார் என்றால்) (மக்களுக்கு) நெருக்கமாக இருக்கின்ற, மென்மையான, இலகுவான ஒவ்வொருவர் மீதும் நரகம் தடையாகிவிடும்.[80]

عَنْ شَدَّادِ بْنِ أَوْسٍ رضي الله عنه قَالَ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ إِنَّ اللهَ عَزَّ وَجَلَّ كَتَبَ الْإِحْسَانَ عَلَى كُلِّ شَيْءٍ فَإِذَا قَتَلْتُمْ فَأَحْسِنُوا الْقِتْلَةَ وَإِذَا ذَبَحْتُمْ فَأَحْسِنُوا الذَّبْحَ وَلْيُحِدَّ أَحَدُكُمْ شَفْرَتَهُ وَلْيُرِحْ ذَبِيحَتَهُ رَوَاهُ ابْنُ مَاجَةَ

நிச்சயமாக ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹ் எல்லா விஷயங்களிலும் “இஹ்சான்” எனும் அழகிய நடத்தையை கடமையாக்கியிருக்கிறான். நீங்கள் கொலைத் தண்டனையை நிறைவேற்றினால் அழகிய முறையில் நிறைவேற்றுங்கள். நீங்கள் பிராணிகளை அறுத்தால் அறுப்பதை அழகிய முறையில் நிறைவேற்றுங்கள். உங்களில் ஒருவர் தனது கத்தியை நன்கு தீட்டிக்கொள்ளட்டும். தனது பிராணிக்கு ராஹத்தை கொடுக்கட்டும்.[81]

----

80. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் رضي الله عنه, நூல்: ஜாமிவுத் திர்மிதீ, - ஸஹீஹ்.
81. அறிவிப்பாளர்: ஷத்தாத் இப்னு அவ்ஸ் رضي الله عنه, நூல்: ஸுனன் இப்னுமாஜா, - ஸஹீஹ்.

رَحِيْمٌ

கருணையானவர்

عَنْ جَرِيرٍ رضي الله عنه قَالَ سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ اِرْحَمْ مَنْ فِي الأَرْضِ يَرْحَمْكَ مَنْ فِى السَّمَاءِ رَوَاهُ الطَّبَرَانِيُّ فِي الْكَبِيْرِ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூற நான் செவியுற்றேன்: பூமியில் உள்ளோர் மீது கருணை காட்டுங்கள்; வானத்தில் உள்ளவன் உங்கள் மீது கருணை காட்டுவான்.[82]

عَنْ جَرِيْرٍ رضي الله عنه قال قَالَ رَسُولُ اللهِ ﷺ مَنْ لا يَرْحَمُ النَّاسَ لَمْ يَرْحَمْهُ اللهُ رَوَاهُ الطَّبَرَانِيُّ فِي الْكَبِيْرِ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: யார் மனிதர்களுக்குக் கருணை காட்ட மாட்டாரோ அவர் மீது அல்லாஹ்வும் கருணை காட்ட மாட்டான்.[83]

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه يَقُولُ سَمِعْتُ النَّبِيَّ ﷺ يَقُولُ لاَ تُنْزَعُ الرَّحْمَةُ إِلَّا مِنْ شَقِيٍّ رَوَاهُ الْبُخَارِيُّ فِي الْأَدَبِ الْـمُفْرَدِ

82. அறிவிப்பாளர்: ஜரீர் رضي الله عنه, நூல்: முஃஜமுத் தப்ரானீ, - ஸஹீஹ்.
83. அறிவிப்பாளர்: ஜரீர் رضي الله عنه, நூல்: முஃஜமுத் தப்ரானீ, - ஸஹீஹ்.

நபி ﷺ அவர்கள் கூற நான் செவியுற்றேன்: துர்பாக்கியவனிடமிருந்தே தவிர இரக்ககுணம் (வேறு யாரிடமிருந்தும்) அகற்றப்படாது.[84]

عَنْ أَنَسِ بْنَ مَالِكٍ رضي الله عنه قَالَ قَالَ النَّبِيُّ ﷺ إِنِّي لَأَدْخُلُ فِي الصَّلَاةِ وَأَنَا أُرِيدُ إِطَالَتَهَا فَأَسْمَعُ بُكَاءَ الصَّبِيِّ فَأَتَجَوَّزُ فِي صَلَاتِي مِمَّا أَعْلَمُ مِنْ شِدَّةِ وَجْدِ أُمِّهِ مِنْ بُكَائِهِ رَوَاهُ الْبُخَارِيُّ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: நான் தொழுகையில் நுழைகின்றேன். நானோ அதை நீட்ட விரும்புகிறேன். அப்போது, குழந்தையின் அழுகையை செவியுறுகிறேன். ஆகவே, எனது தொழுகையில் (ஓதவேண்டியவற்றை) நான் லேசாக்கிக் கொள்கிறேன், அதன் அழுகையால் அதன் தாய்க்கு ஏற்படும் கடுமையான திடுக்கத்தை நான் அறிகின்ற காரணத்தால்.[85]

عَنْ عَائِشَةَ رضي الله عنها قَالَتْ قَدِمَ نَاسٌ مِنَ الْأَعْرَابِ عَلَى رَسُولِ اللهِ ﷺ فَقَالُوا أَتُقَبِّلُونَ صِبْيَانَكُمْ فَقَالُوا نَعَمْ فَقَالُوا لَكِنَّا وَاللهِ مَا نُقَبِّلُ فَقَالَ رَسُولُ اللهِ ﷺ وَأَمْلِكُ إِنْ كَانَ اللهُ نَزَعَ مِنْكُمُ الرَّحْمَةَ رَوَاهُ مُسْلِمٌ

கிராம அரபிகளில் சிலர் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களின் சபைக்கு வந்தார்கள். அவர்கள் (ஸஹாபாக்களை நோக்கி),

84. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா رضي الله عنه, அல் அதபுல் முஃப்ரது, - ஹஸன்.
85. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரீ.

நீங்கள் உங்கள் குழந்தைகளை முத்தமிடுகிறீர்களா? என்று கூறினார்கள்: அதற்கு, (நபித்தோழர்கள்) ஆம் என்றார்கள். உடனே அவர்கள் கூறினார்கள்: என்றாலும், அல்லாஹ்வின் மீது ஆணையாக நாங்கள் (எங்கள் குழந்தைகளை) முத்தமிடுவதில்லை. அதற்கு ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் உங்களிடமிருந்து கருணையை நீக்கியிருந்தால் (அதை மீண்டும் உங்களிடம் கொண்டு வருவதற்கு) நான் சக்தி பெற மாட்டேன்.[86]

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَبَّلَ رَسُولُ اللهِ ﷺ اَلْحَسَنَ بْنَ عَلِـيٍّ وَعِنْدَهُ الْأَقْرَعُ ابْنُ حَابِسٍ التَّمِيمِيُّ جَالِسًا فَقَالَ الْأَقْرَعُ إِنَّ لِي عَشَرَةً مِنَ الْوَلَدِ مَا قَبَّلْتُ مِنْهُمْ أَحَدًا فَنَظَرَ إِلَيْهِ رَسُولُ اللهِ ﷺ ثُمَّ قَالَ مَنْ لَا يَرْحَمُ لَا يُرْحَمُ رَوَاهُ الْبُخَارِيُّ

ரஸூலுல்லாஹ் ﷺ (தம்முடைய பேரரான) ஹஸன் இப்னு அலி رضي الله عنه அவர்களை முத்தமிட்டார்கள். அப்போது நபி ﷺ அவர்களிடம் தமீம் கிளையைச் சேர்ந்த அக்ரஃ இப்னு ஹாபிஸ் இருந்தார். அவர் கூறினார்: எனக்கு பத்து பிள்ளைகள் இருக்கிறார்கள்; நான் அவர்களில் ஒருவரையும் முத்தமிட்டதில்லை. ரஸூலுல்லாஹ் ﷺ அவரை உற்று பார்த்தார்கள். மேலும், கூறினார்கள்: எவர் இரக்கம் காட்டவில்லையோ அவர் இரக்கம் காட்டப்பட மாட்டார்.[87]

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ بَيْنَمَا رَجُلٌ يَمْشِي

86. அறிவிப்பாளர்: ஆயிஷா رضي الله عنها, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.

87. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரீ

بِطَرِيقٍ اِشْتَدَّ عَلَيْهِ الْعَطَشُ فَوَجَدَ بِئْرًا فَنَزَلَ فِيهَا فَشَرِبَ ثُمَّ خَرَجَ فَإِذَا كَلْبٌ يَلْهَثُ يَأْكُلُ الثَّرَى مِنَ الْعَطَشِ فَقَالَ الرَّجُلُ لَقَدْ بَلَغَ هَذَا الْكَلْبَ مِنَ الْعَطَشِ مِثْلُ الَّذِي كَانَ بَلَغَ بِي فَنَزَلَ الْبِئْرَ فَمَلَأَ خُفَّهُ ثُمَّ أَمْسَكَهُ بِفِيهِ فَسَقَى الْكَلْبَ فَشَكَرَ اللَّهُ لَهُ فَغَفَرَ لَهُ قَالُوا يَا رَسُولَ اللَّهِ وَإِنَّ لَنَا فِي الْبَهَائِمِ أَجْرًا فَقَالَ نَعَمْ فِي كُلِّ ذَاتِ كَبِدٍ رَطْبَةٍ أَجْرٌ رَوَاهُ الْبُخَارِيُّ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: ஒரு மனிதர் பாதை ஒன்றில் நடந்து சென்றபோது அவருக்கு தாகம் கடுமையாக ஏற்பட்டது. அவர் ஒரு கிணற்றைக் கண்டார். அதில் இறங்கி தண்ணீர் அருந்தினார். பிறகு, வெளியேறினார். அப்போது அங்கு ஒரு நாய் தாகத்தால் நாக்கைத் தொங்கவிட்டபடி ஈர மண்ணை நக்கிக் கொண்டிருந்தது. அம்மனிதர் கூறினார்: எனக்கு ஏற்பட்டதைப்போன்றே இந்த நாய்க்கும் ஏற்பட்டுவிட்டது அவர் கிணற்றினுள் இறங்கி தனது தோல் காலுறையில் நீரை நிரப்பி, அதைத் தனது வாயில் பிடித்தபடி மேலே வந்து நாய்க்கு நீர் புகட்டினார். அல்லாஹ் அவரை பொருந்திகொண்டான். இன்னும் அவரை மன்னித்துவிட்டான். நபித்தோழர்கள், யா ரஸூலுல்லாஹ்! விலங்குகளிலும் எங்களுக்கு (நற்)கூலி கிடைக்குமா? என்று வினவினார்கள். அதற்கு, ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: ஈரமான ஈரல் உடைய (உயிருள்ள) ஒவ்வொரு பிராணியின் விஷயத்திலும் (நற்)கூலி உண்டு. என்று கூறினார்கள்.[88]

88. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரீ.

عَنْ عَبْدِ اللّٰهِ بْنِ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُمَا أَنَّ رَسُولَ اللّٰهِ ﷺ قَالَ عُذِّبَتْ اِمْرَأَةٌ فِي هِرَّةٍ حَبَسَتْهَا حَتّٰى مَاتَتْ جُوعًا فَدَخَلَتْ فِيهَا النَّارَ قَالَ فَقَالَ وَاللّٰهُ أَعْلَمُ لَا أَنْتِ أَطْعَمْتِهَا وَلَا سَقَيْتِهَا حِينَ حَبَسْتِيهَا وَلَا أَنْتِ أَرْسَلْتِهَا فَأَكَلَتْ مِنْ خَشَاشِ الْأَرْضِ رَوَاهُ الْبُخَارِيُّ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: ஒரு பூனையின் விஷயத்தில் ஒரு பெண் தண்டிக்கப்பட்டாள். அவள் அதை அடைத்து வைத்து விட்டாள். இறுதியாக, அது பசியால் செத்துவிட்டது. அதன் காரணமாக அவள் நரகத்தில் நுழைந்தாள். நபி ﷺ கூறினார்கள்: (அந்த பெண்ணை நோக்கி வானவர்) கூறினார்: -அல்லாஹ் மிக அறிந்தவன். நீ அதை அடைத்தபோது அதற்கு நீ உணவளிக்கவில்லை. நீ அதற்கு நீர் புகட்டவில்லை. நீ அதை வெளியே விடவுமில்லை. அப்படி நீ அதை விட்டிருந்தால் பூமியிலுள்ள பூச்சிகளை அது சாப்பிட்டிருக்கும். (ஆகவே, அது மரணித்திருக்காது.)[89]

عَنْ عَبْدِ اللّٰهِ رَضِيَ اللهُ عَنْهُ أَنَّ النَّبِيَّ ﷺ نَزَلَ مَنْزِلاً فَأَخَذَ رَجُلٌ بَيْضَ حُمَّرَةٍ فَجَاءَتْ تَرِفُّ عَلَى رَأْسِ رَسُولِ اللّٰهِ ﷺ فَقَالَ أَيُّكُمْ فَجَعَ هَذِهِ بِبَيْضَتِهَا ؟ فَقَالَ رَجُلٌ يَا رَسُولَ اللّٰهِ أَنَا أَخَذْتُ بَيْضَتَهَا فَقَالَ النَّبِيُّ ﷺ اُرْدُدْ رَحْمَةً لَهَا رَوَاهُ الْبُخَارِيُّ فِي الْأَدَبِ الْـمُفْرَدِ

நபி ﷺ அவர்கள் ஓர் இடத்தில் தங்கினார்கள்: ஒரு பறவையின் முட்டையை ஒருவர் எடுத்து விட்டார். எனவே, அப்பறவை ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுடைய தலைக்கு மேல்வந்து

89. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் رضي الله عنهما, நூல்: ஸஹீஹுல் புகாரீ

வட்டமடித்தது. ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: உங்களில் யார் இதன் முட்டையை எடுத்து, இதற்கு வேதனையளித்தார்?. ஒருவர் அல்லாஹ்வின் தூதரே! நான்தான் அந்த முட்டையை எடுத்தேன் என்றார். ரஸூலுல்லாஹ் ﷺ அதன் மீது கருணை கூர்ந்து அதைத் திருப்பிக் கொடுத்துவிடு என்றார்கள்.[90]

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ بَيْنَمَا كَلْبٌ يُطِيفُ بِرَكِيَّةٍ قَدْ كَادَ يَقْتُلُهُ الْعَطَشُ إِذْ رَأَتْهُ بَغِيٌّ مِنْ بَغَايَا بَنِي إِسْرَائِيلَ فَنَزَعَتْ مُوقَهَا[٩١] فَاسْتَقَتْ لَهُ بِهِ فَسَقَتْهُ إِيَّاهُ فَغُفِرَ لَهَا بِهِ رَوَاهُ مُسْلِمٌ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: தாகத்தால் சாகும் நிலையிலிருந்த ஒரு நாய் கிணற்றை சுற்றிக்கொண்டிருந்தபோது, அந்நேரத்தில் அதை இஸ்ரவேலர்களில் உள்ள விபசாரப் பெண்களில் ஒருத்தி பார்த்துவிட்டாள். அவள் தனது காலணியை கழற்றி அதன் மூலம் அந்த நாய்க்காக தண்ணீர் இறைத்து அவள் அதற்கு நீர் புகட்டினாள். ஆகவே, இதன் காரணமாக அவளுக்கு பாவங்கள் மன்னிக்கப்பட்டன.[92]

----

90. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் رضي الله عنه, நூல்: புகாரீ அல்அதபுல் முஃப்ரது, - ஸஹீஹ்.

91. இந்த நபிமொழியில் வந்துள்ள "மூக்" என்ற பதத்தின் பொருள்: தோலினால் செய்யப்பட்ட மெல்லிய காலுரைக்கு மேல் அணியப்படுகின்ற தடிப்பமான ஒரு தோல் காலுரையாகும்.

92. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா رضي الله عنه, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்

يَعْمَلُ عَلَى نَفْعِ النَّاسِ وَدَفْعِ الضُّرِّ عَنْهُمْ

மக்களுக்கு நற்பலனளிப்பதற்கும் அவர்களை விட்டும் தீங்குகளை தடுப்பதற்கும் பணியாற்றுவார்

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا ارْكَعُوا وَاسْجُدُوا وَاعْبُدُوا رَبَّكُمْ وَافْعَلُوا الْخَيْرَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ﴾

நம்பிக்கையாளர்களே! நீங்கள் குனிந்து சிரம்பணிந்து உங்கள் இறைவனை வணங்குங்கள். நன்மையே செய்து கொண்டிருங்கள். அதனால் நீங்கள் வெற்றி அடையலாம்.(அல்குர்ஆன் 22 : 77)

عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللهِ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ كُلُّ مَعْرُوفٍ صَدَقَةٌ رَوَاهُ الْبُخَارِيُّ

நபி ﷺ கூறினார்கள்: நற்செயல்கள் அனைத்தும் தர்மமாகும்.[93]

عَنْ أَبِي بُرْدَةَ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ عَلَى كُلِّ مُسْلِمٍ صَدَقَةٌ قِيلَ

93. அறிவிப்பாளர்: ஜாபிர் ﷺ, நூல்: ஸஹீஹுல் புகாரீ

أَرَأَيْتَ إِنْ لَمْ يَجِدْ قَالَ يَعْتَمِلُ بِيَدَيْهِ فَيَنْفَعُ نَفْسَهُ وَيَتَصَدَّقُ قَالَ قِيلَ أَرَأَيْتَ إِنْ لَمْ يَسْتَطِعْ قَالَ يُعِينُ ذَا الْحَاجَةِ الْمَلْهُوفَ قَالَ قِيلَ لَهُ أَرَأَيْتَ إِنْ لَمْ يَسْتَطِعْ قَالَ يَأْمُرُ بِالْمَعْرُوفِ أَوِ الْخَيْرِ قَالَ أَرَأَيْتَ إِنْ لَمْ يَفْعَلْ قَالَ يُمْسِكُ عَنِ الشَّرِّ فَإِنَّهَا صَدَقَةٌ رَوَاهُ مُسْلِمٌ

ஒவ்வொரு முஸ்லிம் மீதும் தர்மம் கடமையாக இருக்கிறது என நபி ﷺ கூறினார்கள். அவரிடம் வசதி இல்லை என்றால் என்ன செய்வது என்று அறிவியுங்கள் என கூறப்பட்டது. அவர் தனது இரு கையால் உழைத்துத் தனக்கு பலனளித்து, (பிறருக்கும்) தர்மம் செய்யட்டும் என்று நபி ﷺ கூறினார்கள். அதுவும் அவருக்கு இயலவில்லையானால்? அவர் என்ன செய்ய வேண்டும் என்று அறிவியுங்கள் என கூறப்பட்டது. நபி ﷺ கூறினார்கள்: கவலைப்படக்கூடிய தேவையுடையவருக்கு அவர் உதவி செய்யட்டும். அதுவும் அவருக்கு இயலவில்லையானால்? அவர் என்ன செய்ய வேண்டும் என்று அறிவியுங்கள் என கூறப்பட்டது. நபி ﷺ கூறினார்கள்: நன்மையை ஏவட்டும். அதுவும் அவருக்கு இயலவில்லையானால்? அவர் என்ன செய்ய வேண்டும் என்று அறிவியுங்கள் என கூறப்பட்டது. நபி ﷺ கூறினார்கள்: தீமையிலிருந்து தன்னைத் தடுத்துக்கொள்ளட்டும். அது அவருக்குத் தர்மமாகும்.[94]

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه أَنَّ النَّبِيَّ ﷺ وَقَفَ عَلَى نَاسٍ جُلُوسٍ فَقَالَ

94. அறிவிப்பாளர்: அபூ புர்தா رضي الله عنه, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்

أَلَا أُخْبِرُكُمْ بِخَيْرِكُمْ مِنْ شَرِّكُمْ فَسَكَتَ الْقَوْمُ فَأَعَادَهَا ثَلَاثَ مَرَّاتٍ فَقَالَ رَجُلٌ مِنَ الْقَوْمِ بَلٰى يَا رَسُولَ اللّٰهِ قَالَ خَيْرُكُمْ مَنْ يُرْجٰى خَيْرُهُ وَيُؤْمَنُ شَرُّهُ وَشَرُّكُمْ مَنْ لَا يُرْجٰى خَيْرُهُ وَلَا يُؤْمَنُ شَرُّهُ رَوَاهُ أَحْمَدُ

ரஸூலுல்லாஹ் ﷺ, அமர்ந்திருந்த சிலருக்கு அருகே நின்று, நான் உங்களில் நல்லவர்களை உங்களில் தீயவர்களிலிருந்து பிரித்து அறிவித்துத் தர வேண்டாமா என்றார்கள். கூட்டத்தினர் அமைதியாக இருந்தனர். ரஸூலுல்லாஹ் ﷺ அதே கூற்றை மூன்று முறை திரும்ப திரும்ப கூறினார்கள். அப்போது கூட்டத்திலிருந்த ஒருவர், அல்லாஹ்வின் தூதரே! அறிவித்துத் தாருங்கள் என்றார். ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: எவரின் நன்மை ஆதரவு வைக்கப்பட்டு அவரது தீமையிலிருந்து மக்கள் அச்சமற்று இருக்கிறார்களோ அவரே உங்களில் சிறந்தவர். உங்களில் எவரிடமிருந்து நன்மை ஆதரவு வைக்கப்படாதோ, அவருடைய தீமையிலிருந்து பயமற்று இருக்கவில்லையோ அவரே உங்களில் மிகக் கெட்டவர்.[95]

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه قَالَ قَالَ رَسُولُ اللّٰهِ ﷺ مَنْ نَفَّسَ عَنْ مُؤْمِنٍ كُرْبَةً مِنْ كُرَبِ الدُّنْيَا نَفَّسَ اللّٰهُ عَنْهُ كُرْبَةً مِنْ كُرَبِ يَوْمِ الْقِيَامَةِ وَمَنْ يَسَّرَ عَلَى مُعْسِرٍ يَسَّرَ اللّٰهُ عَلَيْهِ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ رَوَاهُ مُسْلِمٌ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: எவர் ஒரு முஃமினை விட்டும்

95. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா رضي الله عنه, நூல்: முஸ்னது அஹ்மது, - ஸஹீஹ்.

இவ்வுலக துன்பங்களில் ஒரு துன்பத்தை நீக்குவாரோ அல்லாஹ் (அவருடைய) மறுமை துன்பங்களில் ஒரு துன்பத்தை அவரை விட்டும் அகற்றுகிறான். எவர், ஒரு வறியவருக்கு (அவரது கடன் சுமையை) எளிதாக்குவாரோ அல்லாஹ் அவருக்கு இம்மையிலும், மறுமையிலும் (அவருடைய சிரமங்களை) எளிதாக்குவான்.[96]

عَنِ ابْنُ عَبَّاسٍ ﵄ قَالَ قَالَ رَسُولُ اللّٰهِ ﷺ مَا مِنْ عَبْدٍ أَنْعَمَ اللّٰهُ عَلَيْهِ نِعْمَةً فَأَسْبَغَهَا عَلَيْهِ ثُمَّ جَعَلَ شَيْئًا مِنْ حَوَائِجِ النَّاسِ إِلَيهِ فَتَبَرَّمَ فَقَدْ عَرَضَ تِلْكَ النِّعْمَةَ لِلزَّوَالِ رَوَاهُ الطَّبَرَانِيُّ فِي الْأَوْسَطِ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: அல்லாஹ் ஓர் அடியானுக்கு ஓர் அருளை வழங்கினான். அதை அவனுக்கு அதிமாக வழங்கினான். பிறகு, மக்களின் தேவைகளில் சிலவற்றை அவன் பக்கம் ஏற்படுத்தினான். (மக்கள் அவரை தேடி வரும்போது) அவர் சலிப்படைகிறார். (-அப்படி அவர் சலிப்படைந்தால், அந்த அருள்) நீங்குவதற்கு அதை அவர் முன் கொண்டு வந்துவிட்டார்.[97]

----

96. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம், - ஸஹீஹ்.
97. அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் ﵄, நூல்: முஃஜமுத் தப்ரானீ, - ஸஹீஹ்.

سَخِيٌّ كَرِيْمٌ

தயாளமானவர், கொடைவள்ளல்

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿وَمَا تُنْفِقُوا مِنْ خَيْرٍ فَإِنَّ اللهَ بِهِ عَلِيمٌ﴾

நீங்கள் செல்வத்திலிருந்து எதை தர்மம் புரிந்தாலும் நிச்சயமாக அல்லாஹ் அதை நன்கறிந்தவன் ஆவான்.

(அல்குர்ஆன் 2:273)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿مَثَلُ الَّذِينَ يُنْفِقُونَ أَمْوَالَهُمْ فِي سَبِيلِ اللهِ كَمَثَلِ حَبَّةٍ أَنْبَتَتْ سَبْعَ سَنَابِلَ فِي كُلِّ سُنْبُلَةٍ مِائَةُ حَبَّةٍ وَاللهُ يُضَاعِفُ لِمَنْ يَشَاءُ وَاللهُ وَاسِعٌ عَلِيمٌ﴾

அல்லாஹ்வின் பாதையில் தங்கள் செல்வங்களை தர்மம் புரிபவர்களின் உதாரணம், ஏழு கதிர்களை முளைக்க வைத்த ஒரு விதையின் உதாரணத்தைப் போன்றதாகும். ஒவ்வொரு கதிரிலும் நூறு விதை(கள் வந்தன). அல்லாஹ், தான் நாடுபவர்களுக்கு (நற்கூலியை)ப் பன்மடங்காக்குகிறான். அல்லாஹ் விசாலமானவன், மிக அறிந்தவன்.

(அல்குர்ஆன் 2:261)

﴿وَمَا أَنْفَقْتُمْ مِنْ شَيْءٍ فَهُوَ يُخْلِفُهُ وَهُوَ خَيْرُ الرَّازِقِينَ﴾

நீங்கள் எதை தர்மம் செய்தாலும் அதற்கு அவன் (நல்ல) பகரத்தை ஏற்படுத்துவான். உணவளிப்பவர்களில் அவன் மிகச் சிறந்தவன். (அல்குர்ஆன் 34:39)

﴿وَمَا تُنْفِقُوا مِنْ خَيْرٍ فَلِأَنْفُسِكُمْ وَمَا تُنْفِقُونَ إِلَّا ابْتِغَاءَ وَجْهِ اللَّهِ وَمَا تُنْفِقُوا مِنْ خَيْرٍ يُوَفَّ إِلَيْكُمْ وَأَنْتُمْ لَا تُظْلَمُونَ﴾

செல்வத்தில் நீங்கள் எதை தர்மம் புரிந்தாலும் (அது) உங்களுக்கே (நன்மை). அல்லாஹ்வின் முகத்தை நாடியே தவிர, (புகழுக்காக) நீங்கள் தர்மம் செய்யாதீர்கள். (புகழை நாடாமல்) செல்வத்தில் நீங்கள் எதை தர்மம் புரிந்தாலும் அது உங்களுக்கு முழு (நன்)மையாக நிறைவேற்றப்படும். நீங்கள் அநீதி இழைக்கப்பட மாட்டீர்கள். (அல்குர்ஆன் 2:272)

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷛ أَنَّ النَّبِيَّ ﷺ قَالَ مَا مِنْ يَوْمٍ يُصْبِحُ العِبَادُ فِيهِ إِلَّا مَلَكَانِ يَنْزِلاَنِ فَيَقُولُ أَحَدُهُمَا اَللّٰهُمَّ أَعْطِ مُنْفِقًا خَلَفًا وَيَقُولُ الآخَرُ اَللّٰهُمَّ أَعْطِ مُمْسِكًا تَلَفًا رَوَاهُ الْبُخَارِيُّ

அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்: அடியார்கள் காலைப் பொழுதை அடைகின்ற எந்தவொரு நாளுமில்லை, (அதில்) இரு வானவர்கள் இறங்கியே தவிர. அவ்விருவரில் ஒருவர் கூறுகிறார் அல்லாஹ்வே (நற்செயல்களில்) தர்மம் செய்பவருக்கு பிரதி பலனைக் கொடு! மற்றொருவர் கூறுகிறார்,

அல்லாஹ்வே (தர்மம் செய்யாமல்) தடுத்துக்கொள்பவருக்கு அழிவைக் கொடு![98]

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ قَالَ اللهُ عَزَّ وَجَلَّ أَنْفِقْ أُنْفِقْ عَلَيْكَ رَوَاهُ الْبُخَارِيُّ

கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்குமுரிய அல்லாஹ் கூறுவதாக ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: (ஆதமின் மகனே!) நீ தர்மம் செய்! உன் மீது நான் தர்மம் செய்கிறேன்.[99]

عَنْ أَبِي كَبْشَةَ الْأَنَّمَارِيِّ أَنَّهُ سَمِعَ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ ثَلَاثَةٌ أُقْسِمُ عَلَيْهِنَّ وَأُحَدِّثُكُمْ حَدِيثًا فَاحْفَظُوهُ قَالَ مَا نَقَصَ مَالُ عَبْدٍ مِنْ صَدَقَةٍ وَلَا ظُلِمَ عَبْدٌ مَظْلِمَةً فَصَبَرَ عَلَيْهَا إِلَّا زَادَهُ اللهُ عِزًّا وَلَا فَتَحَ عَبْدٌ بَابَ مَسْأَلَةٍ إِلَّا فَتَحَ اللهُ عَلَيْهِ بَابَ فَقْرٍ رَوَاهُ مُسْلِمٌ

அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்: மூன்று விஷயங்கள் அவற்றை நான் சத்தியம் செய்து கூறுகிறேன். இன்னும் (அவை சம்பந்தமான) ஒரு ஹதீஸை உங்களுக்கு நான் அறிவிக்கிறேன். நீங்கள் அதனை மனனம் செய்து கொள்ளுங்கள். தர்மத்தால் எந்த ஒரு அடியானின் செல்வமும் குறைந்ததில்லை. ஒரு அடியானுக்கு அநீதி இழைக்கப்பட்டு அவன் அதை சகிப்பானேயானால் அல்லாஹ் அவருக்கு கண்ணியத்தை

98, அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரீ
99. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரீ

அதிகப்படுத்துகின்றான். ஓர் அடியான் யாசகத்தின் வாசலை திறந்துவிட்டால் அல்லாஹ் அவனுக்கு வறுமையின் வாசலை திறந்துவிடுகிறான்.[100]

عَنْ عَائِشَةَ ﵂ أَنَّهُمْ ذَبَحُوا شَاةً فَقَالَ النَّبِيُّ ﷺ مَا بَقِيَ مِنْهَا قَالَتْ مَا بَقِيَ مِنْهَا إِلَّا كَتِفُهَا قَالَ بَقِيَ كُلُّهَا غَيْرَ كَتِفِهَا رَوَاهُ التِّرْمِذِيُّ

நிச்சயமாக அவர்கள் (நபியின் குடும்பத்தார்கள்) ஆடு ஒன்றை அறுத்தார்கள். நபி ﷺ அவர்கள் அதில் என்ன மீதமிருக்கிறது என்று கேட்டார்கள். அதிலிருந்து அதன் முன் சப்பையைத் தவிர எதுவும் மீதமில்லை (மற்றவை அனைத்தும் தர்மம் செய்யப்பட்டு விட்டது) என்று ஆயிஷா ﵂ கூறினார்கள். அதற்கு நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: அந்த முன் சப்பையைத் தவிர (அந்த ஆட்டுடைய மாமிசம்) அனைத்தும் மீதமிருக்கிறது. (எது தர்மம் செய்யப்பட்டதோ அதுதான் நமக்கு மறுமையில் நன்மையாக மீதமிருக்கும். நாம் உண்டது இவ்வுலகத்தோடு முடிந்துவிடும்.)[101]

----

100. அறிவிப்பாளர்: அபூ கப்ஷா ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்
101. அறிவிப்பாளர்: ஆயிஷா ﵂, நூல்: ஜாமிவுத் திர்மிதீ, - ஸஹீஹ்.

مُتَوَاضِعٌ غَيْرُ مُتَكَبِّرٍ

பணிவாக நடப்பார், பெருமையடிக்க மாட்டார்

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

﴿تِلْكَ الدَّارُ الْآخِرَةُ نَجْعَلُهَا لِلَّذِينَ لَا يُرِيدُونَ عُلُوًّا فِي الْأَرْضِ وَلَا فَسَادًا وَالْعَاقِبَةُ لِلْمُتَّقِينَ﴾

(மிக்க பாக்கியம் பெற்ற) மறுமையின் வீட்டை பூமியில் பெருமையையும் குழப்பத்தையும் விரும்பாதவர்களுக்கே நாம் சொந்தமாக்கி விடுவோம். ஏனென்றால், முடிவான நற்பேறு இறையச்சம் உடையவர்களுக்குத்தாம்.

(அல்குர்ஆன் 28 : 83)

﴿وَلَا تُصَعِّرْ خَدَّكَ لِلنَّاسِ وَلَا تَمْشِ فِي الْأَرْضِ مَرَحًا إِنَّ اللَّهَ لَا يُحِبُّ كُلَّ مُخْتَالٍ فَخُورٍ﴾

(பெருமை கொண்டு) உன் முகத்தை மனிதர்களைவிட்டுத் திருப்பிக் கொள்ளாதே! பூமியில் பெருமையடித்துக்கொண்டு நடக்காதே! நிச்சயமாக கர்வம் கொண்டு பெருமையடிக்கின்ற எவரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை.(அல்குர்ஆன் 31 : 18)

عَنْ عَبْدِ اللهِ بْنِ مَسْعُودٍ ﵁ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ لَا يَدْخُلُ الْجَنَّةَ مَنْ كَانَ فِي قَلْبِهِ مِثْقَالُ ذَرَّةٍ مِنْ كِبْرٍ قَالَ رَجُلٌ إِنَّ الرَّجُلَ يُحِبُّ أَنْ يَكُونَ ثَوْبُهُ حَسَنًا وَنَعْلُهُ حَسَنَةً قَالَ إِنَّ اللهَ جَمِيلٌ يُحِبُّ الْجَمَالَ الْكِبْرُ بَطَرُ الْحَقِّ وَغَمْطُ النَّاسِ رَوَاهُ مُسْلِمٌ

நபி ﷺ கூறினார்கள்: எவருடைய உள்ளத்தில் அணுவளவு பெருமை இருக்கிறதோ அவர் சொர்க்கம் புக மாட்டார். ஒரு மனிதர் கேட்டார், ஒருவர் தமது ஆடையும், காலணியும் அழகாக இருக்க வேண்டுமென விரும்புகிறார். (அது பெருமையாகுமா?) அதற்கு நபி ﷺ கூறினார்கள்: அல்லாஹ் மிக அழகானவன்; அழகாக இருப்பதையே விரும்புகிறான். பெருமை என்பது உண்மையை ஏற்க மறுப்பதும் மனிதர்களை இழிவாக எண்ணுவதுமாகும்.[102]

عَنْ حَارِثَةَ بْنَ وَهْبٍ الْخُزَاعِيِّ ﵁ قَالَ سَمِعْتُ النَّبِيَّ ﷺ يَقُولُ أَلَا أُخْبِرُكُمْ بِأَهْلِ الْجَنَّةِ كُلُّ ضَعِيفٍ مُتَضَعِّفٍ لَوْ أَقْسَمَ عَلَى اللهِ لَأَبَرَّهُ أَلَا أُخْبِرُكُمْ بِأَهْلِ النَّارِ كُلُّ عُتُلٍّ جَوَّاظٍ مُسْتَكْبِرٍ رَوَاهُ الْبُخَارِيُّ

நபி ﷺ அவர்கள் கூற நான் செவியுற்றேன். சொர்க்கவாசிகளை நான் உங்களுக்கு அறிவித்துத் தரவேண்டாமா? அவர்கள் யாரென்றால் (பொருளாதாரத்தில்) பலவீனமானவர்கள், பணிவானவர்கள் ஆவார்கள், அவர்கள் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து கூறினால், அல்லாஹ் அந்த சத்தியத்தை

102. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.

நிறைவேற்றி விடுவான். நரகவாசிகளை நான் உங்களுக்கு அறிவித்துத் தரவேண்டாமா? அவர்கள்தான் கடின குணமுள்ளவர்கள், செல்வத்தை அதிகம் சேகரித்துவிட்டு அறவே செலவு செய்யாதவர்கள், பெருமையுடையவர்கள் ஆவார்கள்.[103]

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ وَأَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَا قَالَ رَسُولُ اللَّهِ ﷺ الْعِزُّ إِزَارُهُ وَالْكِبْرِيَاءُ رِدَاؤُهُ فَمَنْ يُنَازِعُنِي عَذَّبْتُهُ رَوَاهُ مُسْلِمٌ

ரஸூலுல்லலாஹ் ﷺ கூறினார்கள்: கண்ணியம் அவனுடைய கீழாடையாகும்; பெருமை அவனுடைய மேலாடையாகும். (அல்லாஹு தஆலா கூறுகின்றான்:) எவர் (அந்த இரண்டில் எதையேனும் பறித்துக்கொள்ள) என்னிடம் போட்டிபோடுவாரோ அவரை (நரகத்தில்) வேதனை செய்வேன்.[104]

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ عَنْ رَسُولِ اللَّهِ ﷺ قَالَ مَا نَقَصَتْ صَدَقَةٌ مِنْ مَالٍ وَمَا زَادَ اللَّهُ عَبْدًا بِعَفْوٍ إِلَّا عِزًّا وَمَا تَوَاضَعَ أَحَدٌ لِلَّهِ إِلَّا رَفَعَهُ اللَّهُ رَوَاهُ مُسْلِمٌ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: தர்மம் செல்வத்தைக் குறைக்காது, (பிறரை) மன்னிப்பதால் அடியானுக்கு அல்லாஹ் கண்ணியத்தைத் தவிர வேறு எதையும் அதிகப்படுத்த மாட்டான். ஒருவர் அல்லாஹ்விற்காக பணிந்து நடக்கமாட்டார் அல்லாஹ் அவரை உயர்த்தியே தவிர.[105]

---

103. அறிவிப்பாளர்: ஹாரிஸா இப்னு வஹப் رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரீ.
104. அறிவிப்பாளர்: அபூ ஸயீத் رضي الله عنه, அபூ ஹுரைரா رضي الله عنه, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.
105. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா رضي الله عنه, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.
அதாவது அல்லாஹ்விற்காக பணிந்து நடப்பவர்களுக்கு அல்லாஹ் மென்மேலும் உயர்வையும் மதிப்பையும்தான் கூட்டித் தருவான். பணிந்து

عَنْ عِيَاضِ بْنِ حِمَارٍ ﵁ قَامَ فِينَا رَسُولُ اللهِ ﷺ ذَاتَ يَوْمٍ خَطِيبًا فَقَالَ وَإِنَّ اللهَ أَوْحَى إِلَيَّ أَنْ تَوَاضَعُوا حَتَّى لَا يَفْخَرَ أَحَدٌ عَلَى أَحَدٍ وَلَا يَبْغِي أَحَدٌ عَلَى أَحَدٍ رَوَاهُ مُسْلِمٌ

ஒரு நாள் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் எங்களுக்கு மத்தியில் எழுந்து பிரசங்கம் செய்தார்கள். அப்போது, கூறினார்கள்: நீங்கள் பணிவாக நடந்து கொள்ளுங்கள். (உங்களில்) ஒருவர் மற்றவர்மீது தற்பெருமை பேசவேண்டாம்; ஒருவர் மற்றவர் மீது அநியாயம் செய்ய வேண்டாம் என்று நிச்சயமாக அல்லாஹ் எனக்கு வஹ்யி அறிவித்தான்.[106]

நடப்பவர்கள் ஒரு போதும் இழிவடைய மாட்டார்கள்.

106. அறிவிப்பாளர்: இயாழ் இப்னு ஹிமார் ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.

تَحْتَجِبُ الْحِجَابَ الشَّرْعِيَّ

மார்க்கம் கூறும் ஹிஜாபைப் பேணுவாள்

﴿وَقُلْ لِلْمُؤْمِنَاتِ يَغْضُضْنَ مِنْ أَبْصَارِهِنَّ وَيَحْفَظْنَ فُرُوجَهُنَّ وَلَا يُبْدِينَ زِينَتَهُنَّ إِلَّا مَا ظَهَرَ مِنْهَا وَلْيَضْرِبْنَ بِخُمُرِهِنَّ عَلَى جُيُوبِهِنَّ وَلَا يُبْدِينَ زِينَتَهُنَّ إِلَّا لِبُعُولَتِهِنَّ أَوْ آبَائِهِنَّ أَوْ آبَاءِ بُعُولَتِهِنَّ أَوْ أَبْنَائِهِنَّ أَوْ أَبْنَاءِ بُعُولَتِهِنَّ أَوْ إِخْوَانِهِنَّ أَوْ بَنِي إِخْوَانِهِنَّ أَوْ بَنِي أَخَوَاتِهِنَّ أَوْ نِسَائِهِنَّ أَوْ مَا مَلَكَتْ أَيْمَانُهُنَّ أَوِ التَّابِعِينَ غَيْرِ أُولِي الْإِرْبَةِ مِنَ الرِّجَالِ أَوِ الطِّفْلِ الَّذِينَ لَمْ يَظْهَرُوا عَلَى عَوْرَاتِ النِّسَاءِ وَلَا يَضْرِبْنَ بِأَرْجُلِهِنَّ لِيُعْلَمَ مَا يُخْفِينَ مِنْ زِينَتِهِنَّ وَتُوبُوا إِلَى اللَّهِ جَمِيعًا أَيُّهَ الْمُؤْمِنُونَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ﴾

நபியே! நம்பிக்கை கொண்ட பெண்களுக்கு கூறுங்கள்: அவர்கள் தங்கள் பார்வைகளை தடுத்துக் கொள்ளட்டும், தங்கள் மறைவிடங்களை பாதுகாத்துக் கொள்ளட்டும். தங்கள் அலங்காரங்களை - அதிலிருந்து வெளியில் தெரிபவற்றைத் தவிர

(மற்றதை) - வெளிப்படுத்த வேண்டாம். இன்னும் அவர்கள் தங்கள் முந்தானைகளை தங்கள் (சட்டைகளின்) நெஞ்சுப் பகுதிகள் மீது போர்த்திக் கொள்ளட்டும். தங்கள் அலங்காரங்களை வெளிப்படுத்த வேண்டாம், தங்கள் கணவர்களுக்கு அல்லது தங்கள் தந்தைகளுக்கு அல்லது தங்கள் கணவர்களின் தந்தைகளுக்கு அல்லது தங்கள் ஆண் பிள்ளைகளுக்கு அல்லது தங்கள் கணவர்களின் ஆண் பிள்ளைகளுக்கு அல்லது தங்கள் சகோதரர்களுக்கு அல்லது தங்கள் சகோதரர்களின் ஆண் பிள்ளைகளுக்கு அல்லது தங்கள் சகோதரிகளின் ஆண் பிள்ளைகளுக்கு அல்லது தங்கள் (இன முஸ்லிமான) பெண்களுக்கு அல்லது தங்கள் வலக்கரங்கள் சொந்தமாக்கியவர்களுக்கு அல்லது ஆண்களில் ஆசையில்லாத பணியாளர்களுக்கு அல்லது பெண்களின் மறைவிடங்களை அறியாத சிறுவர்களுக்கு (ஆகிய இவர்களுக்கே)த் தவிர. (கணவனுக்கு மனைவியிடம் எந்த மறைவும் இல்லை. மற்ற மேல் கூறப்பட்டவர்களுக்கு முன் ஒரு பெண் தனது முகம், குடங்கை, கழுத்துப் பகுதி, பாதம், காதுகள் தெரியும்படி இருந்தால் அவள் மீது குற்றமில்லை) தங்கள் அலங்காரங்களிலிருந்து அவர்கள் மறைக்கின்றவற்றை (மற்றவர்கள்) அறியப்படுவதற்காக அவர்கள் தங்கள் கால்களை பூமியில் தட்டி நடக்கவேண்டாம். இன்னும் நம்பிக்கையாளர்களே! நீங்கள் வெற்றிபெறும் பொருட்டு அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள் அவனிடம் பாவமன்னிப்புக் கோருங்கள். (அல்குர்ஆன் 24:31)

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ صِنْفَانِ مِنْ أَهْلِ النَّارِ لَمْ أَرَهُمَا قَوْمٌ مَعَهُمْ سِيَاطٌ كَأَذْنَابِ الْبَقَرِ يَضْرِبُونَ بِهَا النَّاسَ وَنِسَاءٌ كَاسِيَاتٌ عَارِيَاتٌ مُمِيلَاتٌ مَائِلَاتٌ رُءُوسُهُنَّ كَأَسْنِمَةِ الْبُخْتِ الْمَائِلَةِ لَا يَدْخُلْنَ الْجَنَّةَ وَلَا يَجِدْنَ رِيحَهَا وَإِنَّ رِيحَهَا لَيُوجَدُ مِنْ مَسِيرَةِ كَذَا وَكَذَا رَوَاهُ مُسْلِمٌ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: இரு கூட்டத்தினர் நரகவாசிகளில் உள்ளவர்கள் ஆவார்கள். அவர்களை நான் பார்த்ததில்லை. (அவர்களில்) ஒரு கூட்டத்தினர், அவர்களிடம் பசு மாட்டின் வாலைப்போன்ற (நீண்ட) சாட்டைகள் இருக்கும். அவர்கள் அவற்றினால் மக்களை அடிப்பார்கள். (மற்றொரு கூட்டத்தினர்) அவர்கள்தான் சில பெண்கள் ஆவார்கள். அவர்கள் ஆடை அணிந்திருந்தும் நிர்வாணமாகக் காட்சியளிப்பார்கள். பிறரைத் தம் பக்கம் சாய்த்து, தாமும் பிறர் பக்கம் சாய்வார்கள். அவர்களுடைய தலை (முடி), கழுத்து நீண்ட ஒட்டகங்களின் (இரு பக்கம்) சாயக்கூடிய திமில்களைப் போன்றிருக்கும். அவர்கள் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்கள்; சொர்க்கத்தின் வாடையையும் அடைய மாட்டார்கள். அதனுடைய வாடையோ இவ்வளவு இவ்வளவு (பயணத்) தொலைவிலிருந்தே அடைய முடியும்.[107]

عَن صَفِيَّةَ ذَكَرْنَا عِنْدَ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا نِسَاءَ قُرَيْشٍ وَفَضْلَهُنَّ فَقَالَتْ إِنَّ نِسَاءَ قُرَيْشٍ لَفُضَلَاءُ وَلَكِنِّي وَاللهِ مَا رَأَيْتُ أَفْضَلَ مِنْ نِسَاءِ الْأَنْصَارِ أَشَدَّ تَصْدِيقًا بِكِتَابِ اللهِ وَلَا إِيمَانًا بِالتَّنْزِيلِ لَقَدْ أُنْزِلَتْ سُورَةُ النُّورِ وَلْيَضْرِبن بِخُمُرِهِنَّ على جُيُوبهِنَّ فَانْقَلَبَ رِجَالُهُنَّ إِلَيْهِنَّ يَتْلُونَ عَلَيْهِنَّ مَا أُنْزِلَ فِيهَا مَا مِنْهُنَّ امْرَأَةٌ إِلَّا قَامَتْ إِلَى مِرْطِهَا فَأَصْبَحْنَ يُصَلِّينَ الصُّبْحَ مُعْتَجِرَاتٍ كَأَنَّ عَلَى رؤوسهن الْغِرْبَانَ أَخْرَجَهُ ابْنُ حَجَرٍ فِي فَتْحِ الْبَارِي

ஸஃபிய்யா பின்த் ஷைபா رَضِيَ اللهُ عَنْهَا அறிவிக்கிறார்கள்: நாங்கள் ஆயிஷா رَضِيَ اللهُ عَنْهَا அவர்களிடம் குறைஷி வமிசப் பெண்களைப் பற்றியும் அவர்களின் சிறப்பைப் பற்றியும்

107. அறிவிப்பு: அபூ ஹுரைரா رَضِيَ اللهُ عَنْهُ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்

நினைவுகூர்ந்து (உயர்வாகப்) பேசினோம். அதற்கு ஆயிஷா ﵂ கூறினார்கள்: (ஆம்!) நிச்சயமாக குறைஷிப் பெண்களுக்குச் சிறப்பு இருக்கத்தான் செய்கிறது என்றாலும் அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அன்ஸாரிப் பெண்களைவிட சிறந்தவர்களையோ, அல்லாஹ்வின் வேதத்தை மிக உறுதியாக உண்மைப்படுத்துபவர்களையோ, குர்ஆனை நம்பிக்கை கொள்பவர்களையோ நான் பார்த்ததில்லை. சூரத்துந் நூர் இறக்கப்பட்டது. அதில், தங்களின் முந்தானைகளை தங்கள் நெஞ்சுகளுக்கு மேல் போர்த்திக்கொள்ளட்டும் என்ற வசனம் இறக்கப்பட்டது. அப்போது, அப்பெண்களின் ஆண்கள் தங்களின் பெண்களிடம் திரும்பச் சென்று அவர்களுக்கு சூரத்துந் நூரில் இறக்கப்பட்டதை ஓதிக்காண்பித்தார்கள். உடனடியாக அவர்களில் ஒவ்வொரு பெண்ணும் தமது போர்வையை எடுத்து (போர்த்தி)க்கொண்டனர். (அல்லாஹ்வின் சட்டத்தை உண்மைப்படுத்தும் விதமாக இப்படிச் செய்தார்கள்.) மறுநாள் காலையில் (அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களுக்குப் பின்) ஸுப்ஹு தொழுகையை போர்வை போர்த்தியவர்களாக தொழுதார்கள். அவர்களது தலைகளில் காகங்கள் இருப்பதைப் போன்று இருந்தது.[108]

----

108. அறிவிப்பாளர்: ஸஃபிய்யா பின்த் ஷைபா ﵁, நூல்: ஃபத்ஹுல் பாரி

10. உயர்வுமிகு குர்ஆன் உன்னத தமிழாக்கம் (Hard Bound 28 gsm)

11. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் - பாகம் 1
(அல் பாதிஹா (01) முதல் அத் தவ்பா (9) வரை)

12. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் - பாகம் 2
(சூரா யூனுஸ் (10) முதல் அல் அன்கபூத் (29) வரை)

13. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் பாகம் 3
(சூரா அர்ரூம் (30) முதல் அந்நாஸ் (114) வரை)

14. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் (அம்ம ஜுஸ்வு)

15. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் (ஆலு இம்ரான்)

தமிழ் புத்தகங்கள்

1. தொழுகை முறை
2. நோன்பு
3. ஹிஜாப் - முஸ்லிம் மங்கையரின் மேன்மை
4. அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ கொள்கைகள் - தஹாவி
5. அழைப்புப்பணி - அழைப்பாளர்
6. திருமண வாழ்த்து, காலை மாலை திக்ருகள், இஸ்திகாரா துஆ
7. ஸகாத் - வழிமுறைகள், சட்டதிட்டங்கள்
8. இறுதிப் பேருரை (முழுத் தொகுப்பு)
9. இஸ்லாமியக் கொள்கை. வினா - விடைகள்
10. தடுக்கப்பட்டவை
11. இறைநெறி கூறும் இயற்கைக் கடமைகள்
12. அல்குர்ஆன் துஆக்கள்
13. குர்ஆன் ஹதீஸ் கூறும் பிரார்த்தனை
14. நம்பிக்கையின் அடிப்படைகள்
15. இல்லங்களை அச்சுறுத்தும் அபாயங்கள்
16. இஸ்லாமிய ஒளியில் குழந்தை வளர்ப்பு
17. மூன்று அடிப்படைகள்

18. அலட்சியமாகக் கருதப்படும் ஆபத்தான குற்றங்கள்
19. தஃலீமுல் குர்ஆன் (தஜ்வீது வழிகாட்டி)
20. அத்தவ்ஹீத்
21. அன்றாடம் கடைப்பிடிக்க 1000 சுன்னத்துகள்
22. வெற்றிக்கு வழி
23. அழைப்புப் பணி கேள்வி-பதில்
24. உம்ரா வழிகாட்டி (ஆர்ட் பேப்பர் 18x12 cm)
25. அழகிய துஆக்கள் மற்றும் ருக்யாக்கள் (10.5x14 cm)
26. முன்மாதிரி முஸ்லிம் குடும்பம்
27. இயற்கை மதம்
28. ஹிஸ்னுல் முஸ்லிம் (மஸ்னூன் துஆக்கள்)
29. இஸ்லாமின் இறைக்கோட்பாடு
30. மீளாப்பயணம் (ஜனாஸாவின் சட்டங்கள்)
31. இப்னு தைமிய்யா வாழ்க்கை வரலாறு
32. முன்மாதிரி முஸ்லிம்
33. ஹிஸ்னுல் முஸ்லிம் (21x14 cm)
34. ஹஜ். உம்ரா வழிகாட்டி
35. அழகிய துஆக்கள் மற்றும் ருக்யாக்கள் (21x14 cm Single Colour)
36. தப்சீர் முதல் ஜுஸ்வு
37. முன்மாதிரி முஸ்லிம் பெண்மணி
38. அர்ரஹீக் அல்மக்தூம் (18x24 cm)
39. அழகிய துஆக்கள் மற்றும் ருக்யாக்கள் (14x21 cm Full Colour)
40. இறைமார்க்கம் இறைவேதம் ஓர் அறிமுகம்
41. இஸ்லாம் நீங்கள் அறியவேண்டிய மார்க்கம்
42. சான்றோர்கள் பாடசாலை (பாகம் 1)
43. இறைவனுக்கு உருவம் கொடுக்க முடியுமா?
44. கவலைப்படாதே!
45. இயேசுவின் அழைப்பு

46. ஒரு தெய்வமா? பல தெய்வமா?
47. வஸிய்யத்தீ
48. ரஹ்மத்தான ரமழான்
49. இஸ்லாமிய சிறப்பு கல்வி வகுப்பு
50. உலக முடிவு
51. இறைத்தூதரின் தூய வரலாறு
52. அல்குர்ஆன் பாக்கியம் நிறைந்த வேதம்
53. தூய திருகலிமா
54. அத்தஹாரா - தூய்மை - ஃபிக்ஹ்
55. தொழுகை - ஃபிக்ஹ்
56. ஸகாத் - ஃபிக்ஹ்
57. ஹஜ் - ஃபிக்ஹ்
58. நோன்பு - ஃபிக்ஹ்
59. இல்முத் தஜ்வீத்
60. இஸ்லாமில் சொத்துரிமை சட்டங்கள்
61. நபியவர்களின் சரியான தொழுகை முறை
62. முஸ்லிம் பெண்மனியின் நற்குணங்கள்
63. நேரான பாதைக்கு நேர்வழிகாட்டும் வெளிச்சமிக்க நம்பிக்கைகள்
64. ஹதீஸ் கலை இமாம்களின் கொள்கை
65. ஷர்ஹுஸ் ஸுன்னா - பர்பஹாரி
66. உஸுலுஸ் ஸுன்னா - அஹமது இப்னு ஹன்பல்
67. அல் அகீததுல் வாஸிதிய்யா - இப்னு தைமிய்யா
68. அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ கொள்கை - உஸைமீன்

ENGLISH BOOKS

1. The Ideal Husband & The Ideal Wife
2. 33 Ways Developing Inner Fear

3. 40 Guidelines & Dangers That Threaten
4. Situations & Questions - Answers
5. Prohibited & Problems And Solutions
6. Aqeeda Attawheed
7. The True Message of Jesus Christ
8. Fortification of The Muslim
9. Funeral Rites In Islaam
10. Explanation of Aayat Alkursi
11. Gateway To Arabic, Starter Book, (1-5 Parts) each book
12. Search for Happiness
13. What Must Be Known About Islaam?
14. The Sunnah Out Spread Flags of...
15. The Book of Tawheed
16. The Ideal Muslim
17. Ideal Muslimah
18. Noble Quran in The English Language
19. Arraheeq Al Makhtoom
20. About Islam
21. Glorious Quran
22. Precious Invocations and Ruqyas (21x14 cm)
23. Dua and Ruqya from Quran and Sunnah (10.5x14 cm)
24. The Quran with English Meanings and Notes
25. English Meanings and Notes of The Quran
